# வாழும் தாயுமானவர்

( குறும்பாவிகம் )



இரா. இளங்குமரன்

# வாழும் தாயுமானவர்

(குறும்பாவிகம்)


இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் 620 101
பேசி : 2685328

நூற்குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | **வாழும் தாயுமானவர் (குறும்பாவிகம்)** |
| ஆசிரியர் | **இரா. இளங்குமரன்** |
| முதல் பதிப்பு | 2004 |
| வெளியீடு | **திருவள்ளுவர் தவச்சாலை** |
| தாள் | 11.6 கி. மேப்லித்தோ |
| அளவு | 1/8 கிரவுன் |
| எழுத்து | 12 புள்ளி |
| பக்கம் | 24 + 176 = 200 |
| படிகள் | 1000 |
| விலை | **65** உருபா |
| நூலாக்கம் | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | இனியன் |
| அச்சு | வெங்கடேசுவரா ஆப்செட்<br>20 அஜீஸ் முல்க் 5வது தெரு,<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை - 600 006. |
| கட்டமைப்பு | கெட்டிக் கட்டமைப்பு |

கருவூர்,
அன்னை சாரதா அறிவியற் கல்லூரி நிறுவனர்
தவப்பெருந்திரு. ஆத்மானந்த அடிகளார்.



**காணிக்கை**

வாழும் தாயுமானவராய்
வாழ்வாங்கு வாழ்ந்து
எவ்வெவரும் இனிதுவாழ
வழிகாட்டும் தவத்தோன்றல்
ஆருயிர்க்கினியர் அண்ணல் அடிகளார்
ஆத்மானந்தர் அவர்களுக்குக்
**காணிக்கைக்** கையுறையாக வழங்கப்படுவது
வாழும் தாயுமானவர் என்னும்
இக்குறும் பாவிகம் ஆகும்.

நூலாசிரியன்

நூல் வெளியீட்டுக்கு உதவிய
பொறிஞர் திரு. **சுப்பிரமணிய வசந்தா** அவர்கள்



## வெளியீட்டு விழுமியர்க்கு வாழ்த்து

தண்ணருள் வடிவத் தாயு மானவர்
கண்ணிடைக் காணவும் கருத்திடைப் புகவும்
ஆகிய காட்சியாய் அமைந்த பாவிகம்
ஆகிய இதனை அறிந்ததும் ஆர்வமாய்ப்
பொறிஞர் பொலிதமிழ் அறிஞர் ஆர்வலர்
செறிவுறு கேண்மைச் சீர்த்தியர் திருமிகு
**சுப்பிரமணிய வசந்தைப்** பெரியவர்
ஒப்பிய பதிப்பில் ஒன்றி, யாமே
வெளியிட விழைவேம் வேண்டுவேம் என்று
களியுற ஏற்றுக் கையிடைக் கனியாய்த்
தமிழுலாக் கொள்ளத் தந்தமை போற்றி
அமிழ்தன தமிழால் அண்ணல் வாழிய
குவிபுகழ் அம்மையும் குடிநலப் பாங்குடன்
புவிநலம் சிறக்கப் பொலிவொடும் வாழ்கென
நலமுற வாழ்த்தி நயந்தனென் இனிதே.

## பாவிக முகம்

முன்னோ பின்னோ மூண்டெழா எழுச்சியின்
முகிழ்ப்பாய்க் கிளர்ந்தது, இக்குறும் பாவிகம்.

ஆயிரம் ஆயிரம் அயலே நிகழினும்,
நாம் எளிதல் அதிர்ந்து போவதில்லை.
ஆனால், அடுத்தே அவலம் கண்ணேரில் காணின்,
'அவரெவர்' என்பதும் எண்ணாதே,
அழுந்திய துயரம் ஆக்குதல் மெய்ம்மை!

அருமைச் செல்வியர் மூவர், தவப்பெரும்
அடிகளார் ஒருவர் அருள்வழி ஆணையால்,
அரும்பிய பனிமலர் என்ன, அணுகித் தோன்றினர்;
பரிவால் பணிந்தனர்;
அவர்க்கெனத் தந்த அறையில் தங்கினர்.
முதற்கண், அவர்கள் இருக்கும் இடத்தின்
  தூய்மையில் ஒன்றினர். அடுத்துச்
  சூழல் தூய்மையில் தோய்ந்தனர்.
  நூல்களில் தூசி தட்டினர்.
  பணியில் ஊன்றினர்.
  கடமைப் பிறப்பெனக் காட்டினர்;
  கனிவின் வடிவென நாட்டினர்;
  குறையா இறைமை
  குன்றா நிறைமை
  எல்லாம் இணைந்து நின்றனர்.

*நான்கு நாள்கள் தவச்சாலை வாழ்வாய்த்*
*தங்கினர்.*
*பணியில் மணந்தனர்.*
*உரையில் உவந்தனர்;*
*உணவில் ஒன்றினர்;*
*வினவலில் விளக்கம் பெற்றனர்;*
*ஒளிமுகம் காட்டல் அன்றிச்,*
*சோர்வினை அறியாச் சுடர் விளக்காயினர்.*

*மூவருள் ஒருவர், தந்தையை முன்னும்*
*தாயரைப் பின்னும் இழந்தவர்.*
*ஏற்றுப்போற்ற இருப்பார் தாமும்*
*ஏதிலிபோல எண்ணினர்.*
*பள்ளிப்பாவை கள்ளிக் காட்டில்*
*ஆடுமாடு மேய்த்து அலைந்த தோடும்,*
*அலந்தது உண்டு அவலம் உற்றனர்.*
*அருள் நெஞ்சர் ஒருவர்,*
*அழைத்துச் சென்று,*
***அருள்வளர் திருமடம்** ஒன்றில்*
*அவரை உய்த்தனர்.*

***சோற்று மடமிலை** அது;*
***வேற்று மடமும் இலை** அது,*
***வந்தவர்க் கெல்லாம் நொந்தவர்க் கெல்லாம்***
***சொந்தங் காட்டிச் சுடரச் செய்யும்***
***அருள்வளர் கலைமடம்** அதுவாம்.*
*ஏற்ற கல்வியைப் போற்றும் வகையில்*
*நோற்ற பேறென வழங்கும் பண்டைக்*
***'கொடை மடம்'** என்னக் குலவிய ததுவாம்.*

***"எவரும் இல்லார் இல்லை!***
***எதுவும் இல்லார் இல்லை!***
***எவரெவர் தாமும் எல்லாம் இருப்பார்.***
***எய்துக"*** *இவணெனப் போற்று திருமடம்.*

*தொடக்கக் கல்வி தொட்டனள் செல்வி.*
*அன்னை, தந்தை, அரவணை, சுற்றம்,*
*செல்வம், தேட்டு, தோழமை எல்லாம்*
*தாமே யாகித் துறவர் அடிகள் தாங்கினார்.*
*தண்ணளியாலே வளர்ந்தார் செல்வியார்.*
*அவரைக் கேட்டே சிலபல அறிந்தேன்.*
*அடிகள்,* ***அருளடிகள்*** *ஆயினார்!*
*ஆருயிர்க் குதவும் ஆன்மநேய வடிவர் ஆயினார்!*
*நிகழ்ந்தவை கேட்டேன் மேலும்!*
*நெஞ்சம் உருகினேன்.*
*அழுதாள்! அழுதேன்!*
***இந்த அழுகை, அழுகையை ஆற்றுமோ?***
*மாற்றியும் அமைக்குமோ?*
*ஆற்றியும் மாற்றியும் அமைத்த,*
***அருளின் பொழிவை -***
***அமிழ்த மழையை -***
***ஆருயிர் மருந்தைத் தொழுதேன்!***

*அருளைப் பற்றியும் -*
*அன்பைப் பற்றியும் -*
*அறத்தைப் பற்றியும் -*
*ஆயிரம் ஆயிரம் பக்கம் எழுதுவேன்!*
*ஆயிரம் ஆயிரம் பாக்கள் இயற்றுவேன்!*
*ஆயிரம் ஆயிரம் மேடையில் பொழிவேன்!*

*ஆனால்,*
*ஆருயிர்ப் பணியாய்*
*ஐந்துபேர் எனினும்.......!*

*"சான்றோரும் உண்டுகொல்*
*சான்றோரும் உண்டுகொல்*
*ஈன்ற குழவி*
*எடுத்து வளர்க்குறூஉம்*
*சான்றோரும் உண்டுகொல்*
*சான்றோரும் உண்டுகொல்"*

*என்று கண்ணகித் தெய்வம், பெண்ணியவாயால்*
*மாநகர் மதுரையில்*
*வினாவிய வினாவுக்கு,*
*'நானுளேன்' என்று*
*ஏற்றுவந்தனென் இல்லை!*

*நூலகம் தேடி வருவார் தமக்கும்,*
*மனவளம் நோக்கி வருவார் தமக்கும்,*
*தமிழ் நெறி நோக்கித் தழுவுவார் தமக்கும்*
*வந்த வந்த வேளைகளிலேனும்,*
***பருகவும் உண்ணவும் பாலிக்கும் பேறுதானும்***
***முற்றாக வாய்த்தல் இல்லை!***

*என் நிலை, இந் நிலையாக,*
*பெற்றோரை அறியாப் பிறவியர் தமக்குப்*
*பெற்றோர் செய்யாப் பெருஞ் செயல் எல்லாம் -*
*பெற்றோர் இருந்தும் பிள்ளைகள் தமக்கு அப்*
*பெற்றோர் செய்யாப் பெருஞ் செயல் எல்லாம் -*

*தாயே யாகித் தாங்கு தெய்வக்*
*குணமலை யாகித் திகழும் அடிகளை*
***நெஞ்சத் திரையில் நீரால் ஓவியம் தீட்டினேன்.***

*“நூற்றுவர் தம்மைத்தானே போற்றுதல் புரிவேம்;*
*இன்னும்*
*நூற்றுவர் தம்மையும் போற்றும் வகையில்*
*இறையருள்*
*எய்துக” என்று நோற்றுக்கிடக்கும்,*
*ஆன்மநேய அடிகளார்*
*ஆக்கப் பணியே*
***இயக்க இயங்கிய இயக்கம் -***
***ஆம்! இலக்கிய இயக்கம் -***
***இக்குறும் பாவிகமாகும்!***

*அடிகள் பேரோ - அருமகள் பேரோ -*
*அமைவுறும் ஊரோ -*
***வெளிப்படக் காட்டா***
***ஒளிச் சுருள் ஈதாம்!***

***அகப்பொருள்** தலைவன் தலைவியர்,*
*தோழன் தோழியர், ஏவலர் என்பார்*
*எவர்தாம் **மெய்ப்பெயர்** கொள்வார்?*

*இயற்பெயர் இயம்பா இயற்கை அகப்பொருள்*
*இயக்கிய இயக்கம்*
***புனைபெயர் பூத்துப் பொருந்துதல் முறையாம்!***

இதில் வரும் **பாவையின்** பள்ளிவாழ்வின் மூலம் இரண்டு நிகழ்வுகள். ஒன்று கழுகுமலை வெட்டு

வான் கோயில் பற்றிய செய்தி. கலைப் பொறாமை, தந்தை மகன் எனவும் பாராது என்பது அது. மற்றொன்று தஞ்சை வீணைவல்லான் ஒருவன் வரலாறு. முன்னது சிற்பக்கலை! பின்னது யாழ்க் கலை. இரண்டும் தன் மக்கள் என்பதும் எண்ணாப் பொறாமைப் பாவியின் செயல்கள்.

பாவையின் பின்னை வாழ்வில் தன் உடைமையும் உழைப்பும் முற்றாகத் துறவுக்கும் தொண்டுக்குமே என்று வாழ்ந்த வரலாறு, வாழும் மணிமேக லையார் ஒருவர் பற்றிய உள்ளுறை கொண்டது.

இனிப் **பனிமலர் பாரி** என்பார் கிளைக் கதை யாக உருவாக்கம் பெற்றமை மனோன்மணீயம் சிவகாமி சரிதம் ஒப்பது.

**பொறிஞர்** ஒருவர்: அவர்தம் இளவல் **மருத் துவர்;** இவ்விருவர் தம் இணையரும் எம்முயர் மக்களாம் உரிமை பூண்டவர். இவர்தம் மக்களுள் ஒருவர் முதற்கண் மருத்துவம் பயின்றார். மருத் துவர் தம்மைத் தேர்ந்தார். என் சொல்வழி நின்று நன்மணம் கொண்டார். அவர்தம் செயலும் உற்றார் உறவினர் செயலும் உள்ளுறையாகக் கிளர்ந் தது **பனிமலர் பாரிவேள் இணைப்புப் புனைவு**.

குறும்பாவிகக் குறுந்துள்ளலாகிய இன்னவை நூலறி புலமையரால் போற்றப்பட்ட மரபினவை.

இதில் யானும் உறுப்பாகி உள்ளேனா எனின், **பாடுவோன் இல்லாப் பாவிகம் இல்லையே. அது பயில்வார்க்குப் புலப்படும்.**

*பார காவியம் பயில்வார்*
*அருகி வரு நாளில்*
*குறும்பாவிகம் ஏற்கும் என்ன யாத்தேன்.*

*அகவல், அறுசீர், தாழிசை வெண்கலிப்பா என்பன.*
*ஓடிய ஓட்டம் போல அமைந்தன!*
*எளிமையும் உணர்வும் போற்றிய அளவு*
*எதுகையும் மோனையும் போற்றப் பட்டில!*

*அறநெறி, அருள்நெறி, வாழ்வியல் வளமைகள்*
*போற்றப் பட்டுள அளவு,*
*கதையோ காட்சியோ அணியோ குறிப்போ*
*போற்றப்பட்டில!*

இன்னவை பாவிகக் குறையெனக் கருதின்
இன்னவே, பாவிக நிறையாய்ப் பளிச்சிடக் கண்டேன்!

***பாடுவோன் உள்ளமே பாவிக வெள்ளமாம்!***
*வன்முறை கொண்டு*
*வன்முறை ஒடுக்க நினைத்தல்,*
*தீயைத் தீயால் அணைக்கத்திரியும்*
*தீமையில் தீமையாம்!*

*மென்முறை போல*
*நன்முறை உலகில்*
*என்றும் இல்லை;*
*இருத்தலும் ஆகா.*

*வாழ நினைப்பவர்*
*வாழ்வார்க்கு உதவுவார் அன்றி,*

*வாழ்வினை அழிப்போர் அல்லர்; அவர்,*
*வாழ்ந்தவர் ஆகார்!*

*தேடிக் குவிக்கும் கொள்ளையர் செய்கையும்,*
*ஊரார், வேறுபாடறக்*
*கூடி ஒன்றாய்க் குவிந்து செயல்படின், தீமை ஒழிந்து*
*நன்றாய் நிறைவுறும்!*

*தலைமையின் கீழ்மையே மக்கள்*
*தடிமையைப் பெருக்கிக்,*
*குடிமையைச் சாய்த்தல்*
*கண்கூடு நிகழ்வாம்!*

*தேடி வந்தும் ஆக்கம் புரியும்*
*திருவர் உண்மையால்,*
*உலகம் வாழ்தல் உறுதிப்பாடாம்!*

***வாழுநம் என்னும் பெருமிதம்,***
***வாழ வைப்பார் தமக்கே உரிமை!***

*தாயே ஆக - தந்தையர் ஆக -*
***எவ்வெவர் ஆயினும்,***
***தாயுமானார் ஆனாலன்றி***
***உலகம் உய்யாது! உய்யவே உய்யாது!***

என்பவை கருவாய் - உருவாய் - திருவாய் அமைந்த பாவிகம் ஈதாம்!

இதற்குச் சூட்டத்தக்க பெயரெது?

'**வாழும் தாயுமானவர்** பெயர்தனைச் சூட்டுக' என்பது,

எனக்குள் எழுந்த **இயற் சுடர்**!

# கதைச் சுருக்கம்

**திருவளர்குடி** என்பதோர் ஊர்; ஆங்கோர் செல்வக் குடியில் பிறந்தவள் **திருமகள்**. அவள் பிறந்த சில காலங்களில் பெற்றோரை இழந்தாள். அவளைக் காத்த மாமனும் மறைந்தார். அவள் பிறந்த பொழுதால் நேர்ந்தவை இவையென மாமி பழித்தாள்; தனக்கும் கேடுவருமெனத் தவித்தாள்; '**தின்னி**' எனப் பெயரிட்டாள்; பள்ளிக்குச் செல் லும் வயதில் கள்ளிக் காட்டில் ஆடுமாடு மேய்க்க விட்டாள். கஞ்சிக்கும் கந்தைக்கும் கண்ணீர்க்கும் கவலைக்கும் பிறந்த பிறவி என ஆக்கப்பட்டாள்.

மாமி பெயர் **பொன்னியம்மை**. அவளுக்கு அண்டை வீட்டுக்காரி சோதிடம் பார்த்துப் பரிகாரம் செய்யத் தூண்டினாள். அழைத்துப் போனாள்; "இவள் இருக்கு மட்டும் எல்லாம் இழப்பே" என்றான் சோதிடன். பரிகாரம் செய்யப் பணம் செலவாகும் என உணர்ந்தாள் பொன்னி யம்மை. ஊரில் அன்னக் காவடி எடுக்கும் **பிச்சை** என்பவர் திருமகள் மேல் காட்டும் பரிவை அறிந்த வள். ஆதலால், அவரொடு பிச்சை எடுத்துப் பிழைக்க விடலாம் என எண்ணி வந்தாள்.

வீட்டின் முன் பிச்சைப் பெரியவர் நின்றார். திருமகள் கீழே வீழ்ந்து மூக்கில் அடிபட்டு மயங்கிய நிலையில் மடத்துக்குக் கொண்டு சென்று

மருத்துவம் பார்த்து வருதலை உரைத்தார். அவளை அங்கேயே பற்றுத் தேய்க்கவும் கூட்டவும் பிச்சை எடுக்க வைத்துக் கொள்ளவும் சொன்னாள். வளர்ப்புக் காசு கேளாமல் தந்ததற்கு மகிழ்ந்த பிச்சை திருமகளைச் சில நாள் பேணினார். உடல் நலம் பெற்ற திருமகள், "மாமி வருவளோ இவரும் தருவரோ" என ஏங்கினாள். அவள் வாராள் என்றும் அவர் தாரார் என்றும் அறிந்தாள். அன் பெனும் ஒருபொருள் உலகில் உண்டெனா ஆங்கே அறிந்தாள்.

திருமகள் எதிர்காலம் கருதிக் கல்வி கற்கவும் உயர்ந்து விளங்கவும் தக்க இடம் **அருளூர்** என்று ஆங்கே அழைத்துச் சென்றார். அருளடிகள் அன்பால் ஏற்றுத் தாயெனா அர வணைத்துத் தக்க கல்வியைப் படிப்படி எய்தவும், பல்துறைக் கல்வியும் பெறவும், இறைமையும் தொண்டும் இனிது விளங்கவும் செய்தார்.

திருமகள் திறமை பளிச்சிடப் பளிச்சிட அங்கே உடன்பயின்ற **பாவை** என்பாள் எரிச்சலும் கடுப்பும் உற்றாள். செல்வச் செருக்கால் உலாவந்த அவளைக், கல்விப் பெருமை வெல்வதாக எண்ணிக் குமைந்தாள். தன்னை ஒட்டியிருந்த தோழியர் வெட்டிப் பிரிந்து திருமகளை ஒட்டி இருப்பதை வெறுத்தாள். பொறாமையும் வெறியும் கிளர, திருமகளைத் தீர்க்கா விட்டால் தனக்கொரு பேரிலை என்று தழுவுவாள் போலத் திருமகள் சங்கை நெரித்தாள். ஆவி சோர்ந்து மயங்கி விழுந்த

திருவைத் தக்க மருத்துவம் செய்தலால் மூடிய கண்ணைத் திறந்தாள்.

"பாவை நலம் தானே! அவளுக்கு எதுவும் துயரம் செய்யாதீர்" என்றாள். **தீமைக்கும் நன்மை** என்னும், திருமகளுக்குத் தான் செய்த கொடுமை வாட்டலால் பாவை திருந்தினாள். திருமகளோடு பிரியா உறவாய்ப் பெருகினாள். திருமடத்தோடு தங்கியிருந்து திருப்பணி பூண்டாள்.

**பள்ளி கல்லூரி**களோடு, **முதியர் இல்லமும் குழந்தையர் காப்பகமும்** அருளகத் தெழும்பின. அவற்றைத் திருமகளும் பாவையும் பொறுப்பேற்று நடத்தினர். 'மகளிர் விழிப்பு இன்றி, மாநிலம் விழியாது' என்பதால், **மகளிர் மன்றம்** நிறுவித் தொழிலகப் பயிற்சி, தொழிற்களம், விற்பனை எனத் தொண்டினை விரிவு செய்தனர். இசைவளம் மிக்க பிச்சையார் முதியர் இல்லமும் குழந்தையர் காப்பக மும் பேணத் தக்கார் எனக்கொண்டு, அவரால் பேணப்படும் முதியரையும் அருளகம் சேர்த்தனர்.

பாவை துறவு மடம் சேர்ந்ததால், தாம் அவளால் பெற்ற வளங்கள் எல்லாம் இல்லையாய், செல்வம் துறவு மடப் பொருளாய் ஆகவும் கூடும் என்பதால் அவள் தாய்மாமன்மகன் **எழிலனைப்** பாவை, விரும்புவதாக இட்டுக்கட்டி ஏவி அனுப்ப, அவனும் நம்பி வந்து நாணிச் சென்றான். பாவையின்மேல் கொண்ட வெறுப்பாலும் தன்னலப்பெருக்காலும் சுரண்டி வாழும் இருவர் மகளிர் மன்றப் பொறுப் பில் சேர்ந்தனர். இருப்பு, எடுப்பு, செலவு, வாங்கல்,

விற்றல் எவற்றிலும் கரவாய்த் தேடி வந்தனர். அதனை அறிந்தாள் ஒருத்தி மன்றில் உரைத்தாள். மகளிர் குழுவினர் சான்றுகள் கண்டனர். பாவை நேரே சென்று பேசிய அளவில் ஒருத்தி தவற்றை ஒத்துக் கொண்டு ஒப்படை செய்தாள். ஒருத்தி பழித்து விடுத்தாள்.

மகளிர் மன்றம் கூடி, வன்முறை கருதா உண்ணா நோன்பு, ஒப்பும் வரை இருப்பதென முடிவு செய்து ஒருநாள் பகலும் இரவும் மறுநாள் விடியவும் இருந்தனர். காவல் துறையோ சூழ்ந்து நின்றும் வன்முறை எதுவும் வாய்ச் சொல் எதுவும் இன்மை யால் தவித்தனர். விடியற் போதுவரை அடைத்த கதவு திறவாமல் ஆக்கிய உணவும் உண்ணாமல் இருந்த வீட்டைத் தட்டி உள்ளே புக, வீட்டுக் குரியவள் **தங்கம்** முதல் நாள் காலையே காய்ச்சல் பட்ட குழந்தைக்கு மருத்துவம் செய்ய முடியா இக்கட்டை உரைத்தனள். பாவையும் திருவும் தாமே குழந்தையை எடுத்து, மருத்துவமனைக்கு ஓடினர். மருத்துவம் செய்தனர். குழந்தை பிழைத்தது.

வஞ்சகத்தால் தேடிய பொருள் வஞ்சகத்தால் போயது போக, உள்ளதை ஒப்படைப்பதாகத் தங்கம் ஏற்றாள். தங்கம் குழந்தையை அருளடிகள் தத்தாகக் கொண்டார்; தங்கம் திருமடப் பணியில் அமைந்தாள்.

இந்நிலையில், கைவிட்ட கணவனால் பெற்ற பிள்ளையைஅத் தாயிடம் இருந்து பிரிக்கத் துடித்தவர் தமக்கு, வளர்ப்புக் கூலி வழங்கி, வளரும்

பயிரொடு வாழும் தாய்மை துலங்க வைத்த அருள் வளம், **அருள்மலர் அங்கயற்கண்ணி** நிகழ்வாய் இடையே புகுந்தது.

மேலும், திருமகள் பள்ளித் தோழி **பனிமலர்** என்பாள் மருத்துவம் கற்றவள்; தொண்டின் ஆர்வத்தால் இணைந்த **பாரிவேளை** மணந்தவள்; அருளகம் தேடிவந்து, தம் மருத்துவக் கொடையை வழங்க விரும்பினர். அவர்களைப் பாராட்டி வரவேற்றுச் சிறப்புச் செய்தனர். விழாவில் அருள் அடிகள், "**ஏதிலியர்** என்னும் சொல்லைச் சொல் லாதீர்! சொல்லநீர் ஏற்காதீர்! ஏதிலியர் எவரு மிலர்!" என அருளுரை வழங்கத், **தாயுமான அடிகள்** வாழும் போது, ஏதிலியர் எவருமிலை எனத்திருமகள் இயம்ப, **தாயுமானவர் பராபரக் கண்ணி** பிச்சையார் இசைக்க, விழா நிறைவுற்றது. குறும்பாவிகம் **தாயுமானவர்** எனப் பெயர் கொண்டது.

## பாவிக உறுப்பினர்

அருளடிகள் : அருளூர், அருளக அடிகள். இவர். பாலர் பள்ளிமுதல் கல்லூரி வரைக்கும் பல்வேறு கல்விநிலையங்களும், முதியர் இல்லம், குழந்தையர் காப் பகம், மகளிர் மன்றம், தொழில் களம் என்பவை உருவாக்கமும் செய்த வர். தாயுமானவர் எனப் போற் றப்படுபவர்.

பிச்சை : பெரியவர் பிச்சையார் பிறவித் தொண்டர்; பிறர்க் கென வாழும் பெருந்தகை; அன்னக் காவடி எடுத்து முதியர்சிலரைப் பேணியவர்; பின்னர் முதுவரில்லம், குழந்தையர் காப்பகம் பேணி யவர். திருமகள் திருமகளாக மூலவர்.

திருமகள் : ஏதிலி நிலையில் இன்னலே தாங்கியவள்; பிச்சையார் பேண லால் அருளூர் சார்ந்து பேரும் பெருமையும் பிறவிச்

சீர்மையும் பிறங்க வாழும் பெற்றியள். அடிகள் நிழலாய் அமைந்த அருள் தொண்டர்.

பாவை : செல்வச் செருக்கில் சீற்றப் பொருளாய் இருந்து மாற்ற முற்று மணிமேகலைப் பிறவி யாய், திருவின் நிழலாய்த் திகழ்பவள். துணிவும் துறவும் ஒருங்கே பற்றிய தூயள்.

எழிலன் : பாவையின் மாமன் மகன்; தூண்டுவார் உரையால் பாவையைக் கண்டு உண்மை தெளிந்த உயர்வன்.

பொன்னியம்மை : திருமகள் மாமி; பொன்னி யின் தாய்.

பொன்னி : பொன்னியம்மை மகள். பள்ளி செல் சிறுமி.

பூமணி : பொன்னியம்மையின் தோழி; சோதிடத் துணை.

சிலம்பாயி : தொழிலக ஊழலை ஒழிக்க உதவியாய் நின்றவள்; கூர்த்த மதியள்.

தங்கத்தாய் : தொழிலகச் சுரண்டலில் ஒருத்தி. கரவால் தேடியவை, கரவால் ஒழிந்தது போக, உள்ளதை ஒப்படைத்துத் திருந்தி நின்றவள்.

பனிமலர் : திருமகள் பள்ளித் தோழி; பாரிவேள் துணை; மருத் துவத் தொண்டு புரிய அரு ளகம் தேடித்துணையொடு வந்தவள்.

பாரிவேள் : பனிமலர் துணைவன். பண்பு சால் தொண்டில் பதிவான வன்.

அங்கயற்கண்ணி

அருள்மலர் : தாயும் சேயுமாம் இவர்கள், புதுப் பிறப்பும் புதுப்பெயரும் பெற்றுப் பிறங்கியவர். அருள் நிலையத் துறைஞர்.

ஊரவர், உறவினர், தொண்டர், தோழமையர், கற்பவர், மருத்துவர் ஆயோர்.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | எங்கே அவள்? | 1 |
| 2. | கணியக் கலக்கம் | 9 |
| 3. | அமுத சுரபி | 17 |
| 4. | அருளகம் புகுதல் | 29 |
| 5. | திருமகள் கலைமகள் | 36 |
| 6. | அருள் நிறை இருவர் | 45 |
| 7. | தீதும் நன்றாம் | 58 |
| 8. | முதுமையும் இளமையும் | 78 |
| 9. | நச்சு வளையம் | 82 |
| 10. | தொழிலக ஆக்கம் | 94 |
| 11. | அன்பின் வழி | 112 |
| 12. | உருகிய உருக்கு | 128 |
| 13. | ஒருநாள் | 134 |
| 14. | பனிமலர் வரவு | 149 |
| 15. | தாயுமானவர் | 164 |

# நூல்

## முத்தமிழ்

*பெற்ற தந்தையும் தாயும் பிரிந்தனர்;*
*உற்ற இன்றுணை உள்ளுறை வாயினர்;*
*சுற்ற மாயவர் சூழலின் பாலினர்;*
***முற்ற நற்றுணை முத்தமிழ் ஒன்றுமே.***

## பாவிகம் வருமுறை

*ஏதிலியர் எவர்தாமும்*
*இலரென்னும் பெருநெறியை*
*ஓதுதலின் நோக்காக*
*ஒன்றியதித் **தாயுமானம்***
*காதலினால் பிறவாமல்*
***கரைந்துருகிப் பிறந்ததுவாம்;***
***ஆதலினால் பாவிகமும்***
***அம்மட்டில் அமைந்திடுமே.***

# 1. எங்கே அவள்?

*(உறுப்பினர்: திருமகள், பொன்னியம்மை, பொன்னி, பிச்சை, அண்டை வீட்டாள்)*

***பொன்னி*** *விரைவாய்*
*"அம்மா! அம்மா!*
*தின்னியை எங்கே?*
*தெரிய வில்லை!"*
*என்றனள்; "எங்கே*
*தொலைந்து போவாள்?*
*அப்பனைத் தின்றாள்;*
*அம்மையைத் தின்றாள்;*

*ஒப்பிய மாமனைத்*
*தின்றாள்; என்னை*
*இப்படி ஆக்கி*
*இன்னும் எவரைத்*
*தின்று தொலைக்கத்*
*திரிவளோ? பாரேன்*
*அடுத்த வீட்டில்,*
*அண்டை வீட்டில்,*
*"உடுத்த இல்லை;*
*உண்ண இல்லை;*

அடித்துப் பாவி
ஆட்டி வைக்கிறாள்;
இடித்துத் திட்டி
எரிகிறாள் **அத்தை**”
என்று பழிப்பாள்;
இதனைக் கேட்க
என்றே இருப்பவர்;
இளித்து மகிழ்வர்;
தின்று தீர்ப்பவள்
எங்குத் தொலைவாள்?

வந்து விடுவாள்;
வாடி நீ! அவளை
ஒட்டா திருக்க
மாட்டாய்! அறிவாய்,
எட்டியே இருந்தால்
நன்றாம்” என்றாள்.

தன்மகள் பொன்னி
தனக்குத் தாயும்
பொன்னுரை புகன்ற
இந்தப் பொழுதில்,

அடுத்தொரு பிள்ளை
அடித்த தென்று
வடித்த கண்ணொடும்
வந்தாள் **திருமகள்!**

"விளக்கு மாற்றுக்குப்
பட்டுக் குஞ்சமாம்!
தின்னிப் பேய்க்குத்
திருமகள் பேர்" என,
வாரி இழுத்தாள்;
"வாடி உள்ளே

யாரிட மேனும்
வாயைத் திறந்தாய்!
கிழிப்பேன் வாயை!
கிடக்கும் ஏனம்
ஒழுங்காய்த் தேய்ப்பாய்!
ஒன்று விடாமல்;
தேய்ப்பதை விட்டுத்
தெருவைப் பார்த்தாய்,
காய்ச்சி இழுப்பேன்
கண்டிப் பாக"

என்றனள் அத்தை;
என்செய முடியும்?
ஒன்றும் சொலாமல்
ஒடுங்கி நடுங்கினாள்;

பொன்னியை அழைத்துக்
கன்னம் தடவி,
குளிக்கச் செய்து,
கூந்தல் வாரி,
ஒப்பனை முடித்தவள்
உண்ண ஊட்டி,

ஒப்பிய மிதியடி
உரிய சுவடிகள்
நினைவாய் எடுத்து
நேயமாய் வழங்கி,
முத்தி முத்தி
முழுதுறு பாசக்
கொத்தெனக் காட்டிக்
கொள்ளை மகிழ்வாய்,
"பள்ளி சென்றுவா
பாவையே" என்று
விடுத்தனள்; நடப்பதை
விழிதிருப் பாமல்
அடுத்த தெருவரை
ஆவலாய் நோக்கித்
திரும்பினள்; "நீலிச்
சிறுக்கி நீ! இன்னுமா
இருக்கிறாய் தேய்ப்பில்?"
என்றெரி வானாள்;
கூந்தலை இழுத்துக்
குப்புறத் தள்ளிப்
பாய்ந்து மிதித்தனள்;
**பார்த்தனர் ஒருவர்;**
"அம்மா குழந்தையை
அடியா தீர்கள்;
வெம்பி வெதும்பும்;
வேண்டா" என்றார்.

*“சோறு வாங்கினேன்,*
*போனேன்; என்றுபோ!*
*வேறு வேலை*
*வேண்டா உனக்கே!*

*பிச்சை நாயின்*
*பேச்சைப் பாரென:*
*உச்சியைப் பற்றி*
*உள்ளே போனாள்;*
*சிறுமியின் நிலைமை*
*பெரியரை வாட்டப்*
*பொறுமிக் கொண்டே*
*போனார்; பின்னர்*
*அண்டை வீட்டாள்*
*அங்கே வந்தாள்;*

*“கொண்ட சனியன்*
*உன்னை விடாது;*
*சோதிடம் கேட்போம்;*
*சொல்வார் வருநிலை;*
*யாதுன தெண்ணம்?*
*கூ”றெனக் கேட்டாள்;*
*“வேளை சரியிலை;*
*வேகிறேன் பொழுதெலாம்*
*நாளைநாம் போகலாம்*
*என்றாள்; நலம்சொல*

*உன்னை அன்றி*
*உறவில் எவருளர்?*

*பொன்னி வருமுன்*
*பொங்குதல் வேண்டும்*
*போய்வா" என்றனள்;*
*போனதும், போனவள்;*
*"சட்டியில் உள்ளதைக்*
*கொட்டித் தொலை" என*
*வட்டையில் கொட்டினள்;*
*வாங்கிய கஞ்சியில்,*

*ஆடியில் தெரியும்*
*வாடிய முகமெனத்*
*தன்முகம் தெரியக்*
*கண்டனள் திருமகள்;*
*கஞ்சியும் கந்தையும்*
*கடுமையும் கொடுமையும்*
*அஞ்சி அஞ்சிச்*
*சாவும் வாழ்வும்*
*ஒழிவ திலையே;*
*ஓடுவ தெங்கென*

*வழியெதும் அறியா*
*வாட்டத் தோடும்,*
*செத்துச் செத்துச்*
*சாவா திருந்தனள்;*
*சொத்தெலாம் கொண்டும்*
*சொந்தமாய் இருந்தும்*
*அத்தைப் பேயின்*
*ஆட்டம் இதனை*
*எத்தனை காலம்*
*தாங்குவென் என்று*

*நொந்து கிடந்தனள்;*
*நோவினை உரைக்கவும்*
*வழியெதும் இன்றி*
*வாடி வதைந்தனள்;*
*பள்ளியில் இருந்து*
*பாவை பொன்னி*
*துள்ளு மானென*
*உள்ளே வந்தனள்;*
*அள்ளி எடுத்தனள்*
*அன்னை; முத்தினள்;*

*வெள்ளியத் தட்டினில்*
*விளங்கிய சுவைகள்*
*கொள்ள ஊட்டிக்*
*கொஞ்சி இருந்தனள்;*
*உரிமையாய்க் கேட்க*
*ஒருவர் இலாமையால்,*
*உரியவை எல்லாம்*
*ஒருங்கே இழந்து,*
*கண்ணீர் மாறாக்*
*கலக்க வாழ்வில்*

*பெண்ணெ பெண்ணைப்*
*பேயாய் வாட்ட*
*அடைந்தது பொழுதும்;*
*அழுகையே பொழுதாய்*
*விடிந்தது காலை*
*விடிவெதும் இலாதே!*

## 2. கணியக் கலக்கம்

*(உறுப்பினர்: பொன்னியம்மை, அண்டை வீட்டாள் பூமணி, கணியர், பிச்சைப் பெரியவர், திருமகள்)*

### (அ)

*மறுநாள் பகலில்*
*மறந்து விடாமல்*
*உறவினள் வந்தாள்;*
*உள்ளகம் புகுந்து,*
*"தொடுகுறி சொல்வார்;*
*பேர்க்குறி சொல்வார்;*
*விடுகறி போல,*
*விண்டு வைப்பார்;*

*பத்துநாள் முன்னர்ப்*
*பார்த்தேன் சாதகம்;*
*'செத்த சேதி*
*சேரும்' என்றார்;*
*வீடு வந்தேன்;*
*வேதனைச் செய்தி*
*தேடி நின்றது,*
*தெய்வ வாக்காய்;*
*நட்ட குறியும்*
*நன்றாய்ச் சொல்வார்;*

*விட்டுத் தொலைய*
*வேண்டு பரிகாரம்,*
*எல்லாம் செய்வார்;*
*ஏவல் பில்லி*
*வல்லமை யுடையார்;*
*வா" என அழைத்துப்*
*போயினள் **பூமணி**;*
*பொன்னியின் தாயும்*
*போயினள்; துயரெலாம்*
*போயதாய் நினைந்தே.*

## (ஆ)

*தூண்டிலில் சிக்குமா*
*மீனெனப் பார்க்கும்*
*தூண்டிலான் போல*
*நோக்கி யிருந்த*
***கணியார்** 'வரவு*
*கண்ட'தாய்க் களித்தார்;*
*துணிவாய் உள்மறை*
*வானார்; வந்தவர்*
*திண்ணையில் காக்கத்*
*தேர்ந்த வேடம்*
*எண்ணி எண்ணிப்*
*புனைந்தார் வ்ந்தவர்*
*காக்கக் காக்கக்*
*காசு மிகுமெனக்*

கண்டு தெளிந்த
காட்சி யதனால்
மணிப்பொழு தளவு
மறுக வைத்து
அணிநலப் பாங்குடன்
அழைத்தார்; வந்தனர்.
பழகிய அம்மையார்
பலப்பல பேசி
எழுதிய ஏடுபோல்
எடுத்து வைத்தார்;
"எனக்குத் தோழியார்;
இவர்க்குறு தொல்லை,
மனத்தை வாட்டலால்
அழைத்து வந்தேன்;
கேட்பீர்" என்று
கிடத்தினள் சீர்வகை;
நீட்டிப் பெருக்கமாய்
நீங்கிய துங்கள்
துயரென வாழ்த்தித்
தொடங்கினார் கணியர்;
உயரிய நலமெதும்
ஒட்டா தும்மை;
இந்தச் சாதகர்
பிறந்த நேரம்
எந்த ஒன்றும்
இருக்க விடாது; ஓர்

அரசு போல
ஆண்ட குடும்பம்
சரசர என்று
சாய்தல் ஆனது”
என்றவர் தம்மிடம்
‘எனக்கெதும்’ என்றாள்;
“நன்று நீ; இருப்பதே
நாளை எண்ணியே”

என்றது கேட்டதும்
‘ஓ’ என அழுதாள்;
“என்னை இன்றி
என்மகள் பொன்னி
என்ன ஆவாள்?
இந்தக் கழுதையால்
என்குடி கெடுமெனின்
என்ன செய்வேன்?
பரிகாரம் இருந்தால்
பார்க்க” என்றாள்;

“சரிசரி செய்யலாம்;
சனிக்கோள் கொடிது;
செலவு மிகுமே”
என்றார்; பூமணி,
“நலந்தான் வேண்டும்
நாடுவீர் வழி”யெனப்,
பொன்னி அன்னை,
“போய்வரு கின்றோம்;

பின்னொரு நா”ளெனப்
பேசி எழுந்தாள்.

பிச்சைக் கிழவரின்
பின்னே தள்ளினால்
எச்சிறு செலவும்
இன்றி முடியுமென்
றெண்ணினாள்; நடந்தாள்;
எதிர்பார்த்தவள்முன்
கண்ணீர் வழியக்
கிழவர் நின்றார்;
வீட்டுமுன் கிழவர்
வீதியில் நின்றதும்

பூட்டிய கதவும்
பொலிவிலா முற்றமும்
அண்டை அயலார்
அங்கே நிற்றலும்
கண்ட அளவில்
கலங்கினாள்; கிழவர்,
கூட்டிய குழந்தை
குப்புற வீழ்ந்து
மூக்கடி பட்டு
முடங்கிக் கிடக்கத்

தூக்கிச் சென்று
துடிப்புடன் மருத்துவம்
பார்த்ததும் இன்னும்
பச்சிலைப் பிழிவு

சேர்த்து வேண்டிய
மருந்துகள் செய்து
கொடுப்பதற் காக
மடத்திலே கிடத்தி
வைத்தும் வீட்டு
வாயில் திறவு

கையகம் சேர்க்கவும்
கருதி வந்ததை
உரைத்தார்; உரைத்ததை
ஓரசை வின்றி
எவர்க்கோ வந்ததாய்
எண்ணினாள்; திறவுகோல்
அவரிடம் பெற்றாள்;
'ஐயா' என்றாள்;
அழைத்தாள் வீட்டுள்;
"ஆளிலாப் போதில்

பிழைக்க வைத்த
பெரியவர் நீவிர்;
எனக்கோர் உதவி
ஏற்றுச் செய்திடின்,
மனப்படு தெய்வம்
நீவிரே ஆவீர்!
அந்தப் பிள்ளையை
அமைந்த மடத்தில்
சொந்தமாய்க் கொண்டு
சொல்வதன் படியே

கூட்டிப் பெருக்கவும்
கூட மாடக்
காட்டிய வேலை
கலந்து செய்யவும்
வைத்துக் கொண்டால்
வாழ்த்துவேன்" என்றாள்.
மெய்த்த அருளே
வடிவாம் கிழவர்
எதிர்பார்த் திருந்த
தென்னவோ அதுவே
பொதிமலர்த் தேனாய்ப்
பொழிவதாய் உணர்ந்தார்.
"நன்றி அம்மையீர்!
நன்றிமிக் குடையேன்
என்றோ என்னுள்
இந்தச் செல்வி
புகுந்தனள்; என்னால்
போற்றி வளர்க்க
மிகுந்தவை இல்லை
எனினும் எண்ணினேன்
எடுத்து வளர்க்க
ஏங்கினேன்; நீங்கள்
கொடுத்து மகிழக்
கூடுமோ? எனநான்,
மயங்கினேன்; **மலைத்தேன்**;
**மலைத்தேன்** வழிவெனச்
சொல்லிய சொல்லில்
சொக்கி நிற்கிறேன்;

நல்லதோர் தெய்வம்
நாயேன் வாழ்வைப்
பெருநெறிப் படுத்தப்
பேரருள் உங்கள்
மருமகள் ஆகிய
திருமகள் வழியே
செய்ததாய் எண்ணிச்
சீருறக் காப்பேன்;
பொருட்கொடை ஈதெனப்
புகலேன்; தெய்வ
அருட்கொடை அம்மா!
அடியேன் பிறவி,
ஆருயிர்ப் பணிக்கே
ஆகுக என்று
நேருறக் காட்டினீர்
நெஞ்ச நிறைவில்
மீண்டும் மீண்டும்
நன்றியென்" என்றார்;
துடித்துக் காணவோ
துயரம் தீர்க்கவோ
நடிப்பாய்க் கூட
நகர்ந்திலள்; "இவளை,
வளர்த்த காசு
வழங்குக" என்று
கிளத்த வில்லை
என்பது பெரிதே!

# 3. அமுத சுரபி

*(உறுப்பினர்: பெரியவர் பிச்சை; செல்வி திருமகள்)*

## (அ)

*"அத்தை உங்களைப்*
*பிச்சை என்பார்;*
*பிச்சைதான் உங்கள்*
*பெயரா தாத்தா?"*
*"பிச்சை என்பது*
*பிடிக்க வில்லையா?"*
*"அத்தை பழிக்கும்*
*அந்தப் பெயரை*

*ஒப்ப மனமிலை;*
*ஒருபெயர் பஞ்சமா?"*
*வேறொரு பெயரும்*
*வேறொரு பேரால்*
*பழிக்கப் படாதெனப்*
*பார்க்க முடியுமா?*
***பிச்சை** என்பது,*
*பெரும்புகழ்ப் பெயராம்*
*முழுமுதல் இறைவன்*
*பழுதிலாப் பெயரதாம்!*

*இந்நாள் புரியாய்;*
*பின்னாள் அறிவாய்!*
*உண்ணா திருக்க*
*எவர்க்கும் இயலா(து);*
*உண்ணும் உணவை*
*உழைப்பால் தேடி*
*உண்பதே முறைமை!*
*ஆனால் இங்கே*
*உள்ளவர் தம்மை*
*உணர்ந்து நீ பார்ப்பாய்!*

*கால் கை இல்லார்*
*கண்ணொளி இல்லார்*
***நால்வர் உள்ளனர்;***
***நால்வரும் என்னை***
***நம்பி உள்ளனர்;***
***நானென் செய்வேன்;***
***நம்பினேன் ஊரை;***
***நம்பிய ஊரை***
***ஏமாற் றாமல்***
***இருக்கும் அளவும்***

***ஏமாற் றுதலை***
***எண்ணா தூரும்!***
*எனக்கென என்றும்*
*எடுத்திலேன் பிச்சை;*
*அதனால், பழியென*
*அயரேன்; இழிவென*

இதனை எண்ணேன்;
என்னால் இயல்வதை
உவப்பொடு செய்கிறேன்;
உதவும் ஊரென்

உவப்பின் மூலம்;
உண்மை” என்றார்.
“இம்மடம் யானும்
எய்திய பின்னர்
இன்பமே அன்றித்
துன்பம் கண்டிலேன்;
அமைதியை அன்றி
அவலம் அறிந்திலேன்;
நடுக்கல் இல்லை;
நடுங்கல் இல்லை;

அவரவர் பணியை
அவரவர் புரிய
எவரெவர் தாமும்
இனிய உரிமையாய்ச்
செயலுறக் கண்டு
சிறப்பாய் மகிழ்கிறேன்;
எவரே பொறுப்பர்
எவரே ஊழியர்
எவரே உயர்வர்
எவரே தாழ்வரென்

றறிய இயலா
அருமை கண்டனேன்;

வறிய யானும்
வாடுதல் நீங்கி
'வாழ்தல் இயற்கை'
வளமுற அறிந்தேன்;
கற்பிக் காமலே
கற்றுக் கொள்ளவும்
நிற்க எனாமலே
நிற்கவும் கண்டேன்;

காணும் இவ்விடம்
கடவுள் தந்து
பேணும் இடமெனப்
பெரிதும் உணர்கிறேன்;"
என்றனள் திருமகள்;
**"ஒன்றும் இலைஇதில்,**
**உணர்வார் வேண்டும்;**
**உண்மை வேண்டும்;**
**உரிமை தானே**
**உயிராய் ஒன்றும்;"**

என்றார் கிழவர்,
பிச்சைப் பெரியவர்;
"உடல் நிலை சரியாய்
விட்டது; இனி நீ
படவரு கவலை
இல்லை; பாரெ"னத்
திருமகள், தேம்பி
அழுதனள்; "அத்தை

*வருவளே; என்னை*
*'வா'என அழைப்பளே;*
*தருவிரோ தாத்தா!*
*கிணற்றில் என்னைத்*
*தள்ளினும் தள்ளுவீர்;*
*தருவது வேண்டா!*
*கொள்ளியைத் தலையில்*
*கொள்ளினும் கொள்வேன்;*
*கொள்ளேன் அத்தை*
*கூட இருந்திட;*
*உள்ள சுமையுடன்*
*ஒரு சுமை யாக*
*இருந்திட மாட்டேன்*
*இனிமேல் உம்முடன்*
*பிச்சை எடுப்பேன்;*
*பற்றுத் தேய்ப்பேன்;*
*இட்டவை செய்வேன்;*
*இவ்விடம் விட்டு*
*வேற்றிடம் எதுவும்*
*வேண்டேன்; நீரே*
*போற்றும் தெய்வம்; உம்*
*பொன்னடி நிழலே*
*போதும்" என்றாள்;*
*புலம்பி வீழ்ந்தாள்;*
*"யாதும் துயர் உனை*
*உறாதுன் அத்தையும்*

*வாராள் இங்கே;*
*வரினும் யான் உனைத்*
*தாரேன் அவரிடம்;*
*தயங்கா திருப்பாய்!*
*ஒன்றுகேள் சொல்வேன்;*
*உன்னை வளர்ப்பதோ*

*நன்றெதும் புரிவதோ*
*நடக்கத் தடையிலை;*
*ஏற்ற மிக்கவை*
*எவ்வெவை உண்டோ*
*போற்றும் அவையெலாம்*
*பொலிவாய் வழங்கிடத்*
*தக்க ஓரிடம்*
*தனைநீ அடைந்திட*
*அக்கறை கொண்டேன்;*
*அறிவாய்" என்றார்.*

*"உங்களைப் பிரியேன்;*
*உதவிகள் மறவேன்;*
*எங்குமே செல்லேன்*
*இருப்பேன்இங்" கென;*
*"பொன்னி போலப்*
*போகலாம் கற்க;*
*உன்னை அறிவால்*
*உயர வளர்க்கலாம்;*
*புத்தகம் எடுத்துப்*
*பூமலர் சூடி*

ஒத்த பிள்ளைகள்
ஒன்றி இருக்க
ஆடவும் பாடவும்
அறிந்து கற்கவும்
ஓடவும் உலவவும்
ஒன்றாய்க் கூடி
இறைவழி படவும்
இனியன வெல்லாம்
நிறைவுறக் கொள்ளவும்
நீநினை வுற்றால்
நான்சொலும் வேறிடம்
நாளையே போகலாம்;
தேன்சொலும் திருவே!
தெளிந்து கூ”றென
அமைந்து கேட்டனள்;
ஆர்வத் தளிர்ப்பால்
இசைவது காட்டினள்
இருந்தாள்; கனவில்,
அத்தை வந்தாள்;
அவர்மகள் பொன்னி
புத்தகப் பையொடு
பூவாய் நின்றாள்;
பள்ளிக் கனுப்பிப்
பரிவோடு பார்க்கும்
தெள்ளியர் பிச்சையும்
தெரிந்தார்; விடிந்தது.

*திருமகள் செவியில்*
*தேனாய் ஒலித்தது;*
*பொருள் புலப் படவிலை*
*எனினும் இசைநயம்*

*பூரிப் பாகப்*
*புகுந்தது செவியுள்;*
*வாரிச் சுருட்டி*
*வணங்கினள் நின்றாள்;*

*"அன்றே என்றன் ஆவியும்*
*உடலும் உடைமை எல்லாமும்*
*குன்றே யனையாய் என்னை ஆட்*
*கொண்ட போதே கொண்டிலையோ!*
*இன்றோர் இடையூ றெனக் குண்டோ*
*எண்தோள் முக்கண் எம்மானே!*
***நன்றே செய்வாய் பிழைசெய்வாய்***
***நானோ இதற்கு நாயகமே"***

*என்னக் கேட்டனள்*
*இன்னிசைப் பாடல்.*
*"இப்படி இசைக்க*
*இதுவரை கேட்டிலேன்;*
*இப்பயன் இழக்கவோ?"*
*என்றவள் ஏங்கினாள்.*

*அன்பெனும் ஒருபொருள்*
*அமைந்துள தென்பதை*
*இங்கு வருதலால்*
*இயல்புற அறிந்தேன்;*

**கையிலார் காலிலார்**
**கண்ணிலார் இங்குளார்**
**எனினும், அன்பிலார்**
**எவரும் இல்லென**
**அறிந்து கொண்டனென்;**
**அறியேன் இதுவரை;**

*கையுளார் காலுளார்*
*கண்ணுளார் மேலும்*
*செய்யுளார் சிறப்புளார்*
*என்பவர் தாமும்*
*அன்புளார் என்ன*
*அறிந்திட வாய்த்திலேன்;*
*அன்பினை இழக்கவோ*
*அயலிடம் செல்லல்*
*என்றெலாம் நினைந்துபின்,*
*என்நலம் எண்ணும்*

*அன்புள பெரியரை*
*ஐயுறல் தவறாம்.*
*தெருவில் வீழ்ந்தகால்*
*தெய்வமாய் வந்து*
*மருத்துவம் செய்து*
*மனநலம் சேர்த்துக்*
*குழைத்துக் குழைத்துயிர்*
*ஊட்டுவார் போல,*
*அழைத்துப் பேசி*
*ஆக்கம் புரிகிறார்;*

ஐயுறல் இன்றி
அவர் சொல் கேட்பதே
மெய்யாய் நலமாம்
என்றவள் தெளிந்தாள்;
மடத்துள அன்பினர்
மறுகிட மறுநாள்
விடியலில் புறப்பட
உறுதி செய்தனர்
பிரிவெனும் துயரம்
பெரிதும் சுடவே.

## (ஆ)

ஒளியுறு வாழ்வுனக்
குறுவ துறுதியாம்;
தெளிவுடன் கிளம்பெனத்
திருமகட் குரைப்பதாய்க்
கிழக்கே கிளர்ந்தனன்
உயிரொளிக் கதிரோன்;
வழக்கம் போலது
வந்ததே எனினும்,
புதுப்பொலி வாகப்
புலப்பட லாயது;
அதனை நோக்கி
அருமையாய்ப் பெரியவர்;
"ஓங்கல் இடைவந்
துயர்ந்தோர் தொழவிளங்கி

*ஏங்கொலி நீர் ஞாலத்*
*திருளகற்றும் - ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழிச்*
***செங்கதிரொன் றேனையது***
***தன்னேர் இலாத தமிழ்***
*என்னும் பாடலை*
*இசைமணம் கமழ,*
*நின்றவர், சென்றவர்,*
*என்றவர் எவரும்*
*நின்றசை வின்றி*
*நினைவொடு கேட்க*
*ஒன்றினர் பாடினர்*
*உவந்தனள் திருவே.*

## (இ)

*உடுத்துடை அன்றி*
*ஒருபொருள் இன்றி*
*எடுத்துக் கொணர்ந்தவட்*
*கெவையெவை தேவை*
*என்றெலாம் தாமே*
*எண்ணிய பெரியவர்*
*ஒன்றனுக் கிரண்டாய்*
*ஓரிரு நாள்முனே*
*வாங்கினார்; வைக்கப்*
*பெட்டியும் வாங்கினார்;*
*பாங்குறப் போர்த்தியைப்*
*படிக்க வெளியூர்க்*

கழைத்துச் செல்லும்
அருமைத் தாதா
பிழைத்து வந்ததாய்ப்
பெருமை எய்தினார்;
அல்லூர் இருந்து
நல்லூர் காணச்
செல்லும் இயங்கியில்
சீர்ப்பொரு ளோடும்
ஏறினார்; அவலம்
எதுவும் அணுகாப்
பேறமை அடிகள்
பேரிடம் செலவே.

# 4. அருளகம் புகுதல்

*(உறுப்பினர்: பெரியவர் பிச்சை; செல்வி திருமகள்; அருட் பெரும் அடிகளார்)

*பழந்தமிழ் வளமெலாம்*
*பரிவொடும் வழங்கக்*
*கெழுமிய* ***அருளூர்***
*எய்தினர்; திகழ்நலப்*
*பேரிறை இருக்கையாய்ப்*
*பிறங்கிடும் தவநிலை*
*நேருறப் பெரியவர்*
*நேயமாய் மண்ணை*
*வணங்கினார்; திருமகள்*
*வணங்கினாள் அவர்போல்;*
*மணமிகு மண்ணிது;*
*மாந்த நேயமும்*
*ஆன்ம நேயமும்*
*அருவியாய்ப் பெருகித்,*
*தேன்சுவை சொட்டும்*
*தெய்வ இருக்கையாம்*
*இவ்விடம்; ஆதலால்,*
*இம்மண் வணங்கினேன்;*

"எவ்விடம் தானும்
எய்தும் பெருமை;
தக்கவர் இருந்து
தகுசெயல் செயின்" என
மிக்க தெளிவினால்
மேனாள் **ஔவையார்**
உலகுக் குரைத்தார்;
உளங்கொண் டறியென
மலர்முகம் காட்டி
வழிநடை யுற்றனள்;

ஐயோ! ஐயோ!
அருமையாம் **மயில்கள்**!
மெய்யாய் இதுவரை
பார்த்ததே இல்லை
படத்திலே காட்டினாள்
பொன்னி பார்த்துளேன்;
அடர்த்தியாய் நீண்டுள
அழகிய தோகை
அங்கும் இங்கும்
அவை அவை மனம்போல்

எங்கும் திரிதல்
என்ன அழகிதாம்!
அம்மவோ **மான்கள்**!
அழகுக் கழகாய்ச்
சும்மா இராமல்
துள்ளும் துள்ளல்!

புள்ளிகள்; நீண்டு
பொலியும் விழிகள்;
அள்ளிக் கொள்ளும்
அழகுகள்; வழியெலாம்

24 கொள்ளை வனப்புக்
கொடிகள்; செடிகள்;
உள்ளே வருகென
ஓடி அழைக்கும்
வள்ளலாய்த் திகழ்வன;
வாழ்வதற் கிங்கே
பள்ளியும் உளதெனின்
பண்ணிய பேறாம்;
எனப்பல எண்ணி
இளமனம் துள்ள

30 மனப்படி கண்டனள்;
மகிழ்ந்து சென்றனள்;
அமைதி தவழும்
அருமைச் சூழலுள்,
சுமையெலாம் இறக்கிச்
சுடருறப் புகுந்தார்.
காந்தம் இழுக்கக்
கவரும் இரும்பெனச்
சாந்தம் தவழும்
சால்பும் முகிழ்த்தெழு

35 முழுமதி ஈதெனும்
முகமும் திருவருள்

கெழுதகை வெழுந்த
விழியும் விளங்கும்
**அடிகள் அருளரை**
ஆங்குக் கண்டதும்,
படியதில் திகைப்பொடும்
பார்த்துப் பெரியவர்
நின்றிட, நின்ற
திருமகள் ஏதோ
ஒன்றது கவர்ந்திட
ஓடி, அடிகளின்
திருவடிக் கண்ணே
திடுமென வீழ்ந்தனள்;
அருட்பேர் அடிகளும்
அயர்ந்தனர் திகைப்பாய்
எழுந்தனர் தூக்கி
எடுத்தவண் அமர்த்தினார்;
அழுந்திய அன்புப்
பெரியவர் அதிர்ந்தார்;
**பொன்னி எனக்குப்**
**புத்தகம் காட்டிச்**
**சொன்னவர் இவர்தாம்;**
**முன்னமே பார்த்துளேன்;**
பார்த்த வடிவைப்
பார்க்க ஏங்கினேன்;
பார்த்தேன் இங்கே!
படத்தைப் பார்த்தநாள்,
அத்தை பொன்னியை
அடித்தாள்; என்னையும்

மொத்தினாள்; ‘ஏன்நீ
காட்டினை’ என்று;
“புத்தகம் பார்த்தாய்!
போய்த்தொலை“ என்று
குத்தினாள் செவிட்டில்;
அதனால் பொன்னி
காட்டிய படத்தில்
கண்ட வடிவமும்
சூட்டிய பெயரும்
சுடர்தலால் மறந்திலேன்;

**விவகோ னந்தர்தாம்**
**நீங்கள்** அல்லரோ!
அவாவினால் பற்றினேன்
அடிகளை என்றாள்;
பழுத்த பெரியரும்
பனிநீர் பொழிந்தார்;
விவேகா னந்தராம்
விழுமியர் யானலேன்;
அவாவினால் அவர்வழி
அமைவெனக் கொண்டவன்;

இங்கே பார்ப்பாய்;
எத்தனை தோற்றம்!
பொங்கிய வீறு,
பொழியும் விழிபார்!
பீடு நடையிடும்
பெருமிதம் இதுபார்!

*நாடாள் வேந்தாய்*
*நாட்டுதல் இதுபார்!*
*துறவின் தூய்மை*
*துலங்கிடும் இதுபார்!*

*மறவா எழுச்சி*
*மாண்புறல் இதுபார்*
*என்றவர் எழிற்படம்*
*இவையெனக் காட்டி*
*ஒன்றிய பெரியரை*
*உவகையால், “அம்மையின்*
*பேரருள் வெள்ளமே*
*பெருநிலை வாழ்த்தாய்ச்*
*சீருற எய்திச்*
*செறிந்த தென்று*

*மெய்யுறப் போற்றி*
*மேல்வரு செய்தியைக்*
*கேட்டனர்; பெரியவர்;*
*கிடைத்துள குறிப்பெலாம்*
*போட்டனர்;* ***முழுதுறப்***
***போற்றும் ஒப்படை***
*ஈதெனக் கூறி*
*என்கடன் ஆற்றிய*
*பேறென மகிழ்வேன்;*
*பெருந்தகை அடிகளீர்!*

*அருள்விடை அருள்கென*
*அடிகளை வணங்கினார்;*

"பெரியவர் நீவிரும்
பேணி இவணுறின்,
அருமையாம் அல்லவோ
என்றார்; இடை இடை
வருவேன்; திருமகள்
இவளைப் பார்ப்பேன்;
அருள வேண்டும்
அப்பே றுற்றிட;

என்னொடு மடத்தில்
என்துணை நம்பித்
தந்நிலை இயக்கம்
தாங்கா நால்வர்
உள்ளனர்; அவர்க்கென
உறைதல் என்கடன்;
ஆதலால் செல்வேன்;
அருள்கெனப் பிரிந்தார்;
ஓதரும் அன்பில்
ஒன்றிய திருமகள்

உள்ளகம் கசிந்திட
உரைதடு மாற
வெள்ளமாய்க் கண்ணீர்
வெளிப்பட விடுத்தாள்;
வருநாள் வளமாய்
வாய்த்த அடிகளார்
திருமகள் கண்ணீர்
துடைத்தனர் கனிந்தே!

## 5. திருமகள் கலைமகள்

*(உறுப்பினர்: அருளடிகள், திருமகள், பெரியவர் பிச்சை)*

*விடியுமுன் எழுந்தாள்;*
*வெடவெட நீரில்*
*குளித்தனள்; உடுத்தனள்;*
*கூந்தலை முடித்தனள்;*
*அமைந்த கோலத்*
*திருந்த அடிகளை*
*அடைந்தனள் அமைவாய்*
*அடிகளில் வீழ்ந்தனள்;*

*எழுந்தனள்; இசையொலி*
*எழுந்தது; பெரியவர்*
*எழுந்ததும் பாடும்*
*இன்னிசைப் பாட்டே;*
*'அன்றே என்றன்'*
*பாடி முடிக்கவும்*
*நன்றே கதிரோன்*
*எழும்பவும் எண்ணி*
*'ஓங்கல் இடைவந்*
*துயர்ந்தோர் தொழலைப்*

பாடினள்; அடிகள் அப்
பாடலில் திளைத்தார்;
**தேடரும் திருவெலாம்**
**தேடும் திரு எனைத்**
**தேடிய பேறெனத்**
**திருமகள் இசைத்தபா**
கற்றவா றறிந்து
களித்தனர்; கற்கத்
தக்கவை எல்லாம்
தரல் எம் கடனெனக்
கொண்டார்; திருமகள்
கொண்ட கல்வி
ஐந்தொடு முடிந்ததை
அறிந்தார்; காலம்
வந்ததும் ஆறாம்
வகுப்பில் சேர்த்தார்.
மண்ணிடைப் புழுவாய்
வதைந்த வாழ்வு
விண்ணெழு பறவையாய்
விளங்குறும் வாய்ப்பு
நண்ணிய சான்றாய்,
வெண்ணிற உடையில்
ஆயா ஒருவர்,
அழைத்துச் சென்றார்;
வாயா வளமெலாம்
வாய்த்திடு மாறே!

சிட்டுக் குருவிகள்
சிறுசிறு நடையில்
திட்ட மிட்டுத்
தேடி வருவவோ?

தத்து கிள்ளைகள்
தனித்தனி கூடி
ஒத்திய லாகி
ஒன்றி வருவவோ?
வெண்ணிறப் புறாக்கள்
வேளையில் கிளர்ந்து
உண்முக உவகையால்
ஒருக்கணிப் பாவவோ?
பேகனார் நம்மைப்
பேணுவார் என்ன

ஓகையில் எய்தும்
மயிற்குலம் தாமோ?
தாமரைப் பொய்கை
தாள் கொடு நடந்து
நாமிவண் கற்பேம்
நன்றென வருவவோ?
முல்லைக் கொல்லையே
முழுதுறு முறுவல்
சொல்லிய நடந்து
சுடர்மிக வருவவோ?

யாழும் குழலும்
அமிழ்தும் மழலை
சூழும் அவாவினில்
சொல்லி வருவவோ?
தேன்குடம் நடந்து
திருவிழி திகழ
வான்மழைப் பெருக்கென
வழிந்திட வருவவோ?
என்று நயப்புற
எண்ணிலாச் சிறுமியர்

ஒன்று கூடிய
உயர்வும், கூட்டிய
இறைவழி பாட்டின்
இனிய இசையும்
நிறைநலம் இவையென
நின்றனள் திகைத்தாள்;
இன்ப நிலைக்களம்
ஈதெனக் கொண்டாள்;
துன்பம் தொலைந்ததாய்த்
துணிந்தாள்; இழந்ததாம்

பேறுகள் எல்லாம்
பெரிதுற எய்துதல்
மாறிலை என்று
மகிழ்ந்தனள் கற்றாள்.

* * *

மணிமணி மாறவும்
மணிமணி யாக
அணிவகுப்பாகி
அமைந்திடக் கற்றலும்
ஆடலும் பாடலும்
ஓடலும் தாவலும்

தேடரும் நலமெலாம்
தேடி வருதலைத்
திருமகள் உணர்ந்தாள்;
தெய்வ அடிகளை
ஒருமையாய் நினைந்தாள்
பள்ளி முடிந்ததும்
ஓடி வந்தனள்
ஒன்றிய அடிகளை
நாடி வணங்கினள்;
நற்றவப் பேறே!

நானினி நயக்க
நல்லவை அருள்கெனத்
தேனினும் இனிய
**திருவா சகமிது**
வானுயர் வாழ்வு
வழங்குசீர் **வள்ளுவம்**
காணிது; கனிவெனும்
**தாயு மானவர்**
பேணுமா வீரப்
பேற்றினை யூட்டும்

**விவேகா னந்தரின்**
விழுமிய நூல்கள்
தவமே வடிவம்
தாங்கிய **இராம**
**கிருட்டிணர் சாரதை**
கிளந்த நூல்கள்
**அருட்பாத்** தொகுதிகள்
**அருளியல்** பொருளியல்
**அறிவியல் பொறியியல்**
**அறவியல் அரசியல்**
**ஓவியம் சிற்பம்**
**இசைநலம் கூத்தென**
ஆயவை எல்லாம்
அடைவாய் உள்ளன;
ஓய்வுப் பொழுதெலாம்
ஓதுக இவற்றை
ஆய்வுப் பொருளாய்
அமைவுறும்" என்றார்
இத்தனை நூல்களா?
இவையெலாம் காணல்
எத்தனை பேறாம்!
எவர்க்கிது வாய்க்கும்?
எனக்கினி ஓய்வெலாம்
இவ்விடம் ஆகிட
மனமுற வேண்டும்
அடிகளீர் அருள்கென,

"உன்பொரு ளாக
ஓதுக" என்றார்.
ஒன்றிப் புகுந்தனள்;
ஒட்டிய தூசி
துடைத்தனள்; நூல்களைத்
துலக்கினள்; அமுதம்
படைத்ததாய்க் கொண்டனள்;
பயின்றனள் பெரிதே.

* * *

குறையெதும் உண்டேல்
கூறுவாய் திருவெனக்
குறைகளா? சிலவுள!
குட்டுதல் திட்டுதல்
'தின்னி' என்னத்
தினமும் பழித்தல்
மென்னியில் அறைதல்
இவையெலாம் இல்லை;
அமைதிச் சோலையாம்
அடிகள் அருளால்
இமைப்பொழு தளவும்
நீங்கா நினைவொடு
தங்களை ஒன்றத்
தவநிலை காட்டிய
செங்கைப் பிச்சைச்
செல்வரைக் காண'

அடிக்கடி அவாவியும்
அதுபெறல் அரிதாய்
முடியும் ஒன்றே
குறையாம்' என்றாள்;
பிச்சைப் பெரியவர்
தற்செய லாக
உச்சி குளிர
உற்றனர் அங்கே.
ஓடினாள் அவரை
ஒன்றித் தழுவினாள்;

வாடிய முகத்துடன்
வருந்திக் கூறினாள்;
தெருவிடை நாயாய்த்
திரிந்த என்னைத்
திருமகள் ஆக்கித்
திகழ வைத்தநீர்,
தெருத்தொறும் தெய்வக்
கொடையெனப் பிச்சை
எடுப்பதும் கொடுப்பதும்
எம்பெருந் தொண்டென

அடுத்திடா தகல்வதும்
அம்மவோ, என்னை
வாட்டுதல் அறியீர்!
வாயிலாப் பெண்ணாய்ப்
பூட்டிக் கிடக்கவும்
புரிந்திலீர்! இனிய

தாத்தா என்னொடும்
தங்குமோர் காலம்
ஈத்திட வேண்டும்
என்றனள், நின்றாள்;

இருவர் தம்மையும்
இமைமூ டாமல்
பருகுவார் போலப்
பார்த்த அடிகளார்
மாந்த நேயம்
மாற்றுயர் பொன்னாய்
ஏந்திய ஆன்ம
நேயம் ஈதென
எண்ணி மகிழ்ந்தார்
இருந்தனர் அன்றே!

# 6. அருள்நிறை இருவர்

(உறுப்பினர்: அருளடிகள், பெரியவர், திருமகள்)

*பெரியரும் திருவும்*
*பிரிவுத் துயரால்*
*ஒருவரை விஞ்சி*
*ஒருவர் உருகினர்;*

*உலவுதல் ஆயினும்*
*உரையிடல் ஆயினும்*
*நிலவும் ஒளியுமாய்,*
*நெடிதுறு பிரிவே*
*வாட்டுதல் பற்றிப்*
*பேசினர்; வருந்தினர்;*

*ஊட்டுதற் குதவும்*
*உயிராம் **அரிசி***
*அப்படி யேபெற*
*ஆவதோ? நினைவாய்!*
*முற்றுதல் அறிந்து*
*முறையாய் அறுத்துக்*
*கட்டாய்க் கட்டிக்*
*களத்தில் சேர்த்துப்*

*பட்டுப் பட்டெனப்*
*பல்கால் அடித்து*
*மணியைப் பிரித்து*
*மாசறத் தூற்றித்*
*தணியா வெயிலில்*
*தானது காயப்*
*புரட்டிப் புரட்டிக்*
*காய்ந்தபின் மூடையில்*
*உருட்டிக் கொணர்ந்தும்*
*ஓய்ந்ததா? பின்னரும்,*

*வேக வைத்தும்*
*வெயிலில் வைத்தும்*
*பாகமாய் இடித்தும்*
*பல்கால் புடைத்தும்*
*ஆட்டியும் அரைத்தும்*
*ஆக்கிய பின்பலோ*
*கூட்டிய உணவாம்!*
*கூறுநீ! வாழ்வில்,*
***துன்பப் படாமல்***
***இன்பம் உறுமோ?***

***துன்பினில் துன்பு***
***பிரிவுத் துன்பே!***
***உருக்கு நோயென***
***ஒன்றைக் கூறுவர்***
***உருக்கு நோயினும்***
***உருக்குநோய் பிரிவே!***

**பிரிவில் உருக்கென**
**வலுவாய் இருக்கவும்**
**புரிவார் கடமை**
**புரிவார் திறமாய்!**
**பரிந்தே இரங்குவார்**
**பயன்படா தொழிவார்**
**பிரிவும் புரிவும்;**
**புரிவும் பரிவும்;**
**உருகலும் உருக்கும்**
**தெரிந்து திறம்படின்**
**உரியவை தவறா**
**தொன்றுதல் உறுதியாம்;**
அடிகள் திருவருள்
அமைவால் நாளெலாம்
படிப்படி யாகப்
பரவிய சிறப்புறல்
உறுதியாம்; **படிப்பினில்**
**ஊன்றுவாய்;** பின்னர்ப்
பெறலரும் **தொண்டில்**
**பிறங்குவாய்** என்றார்.
ஊணகம் சென்றனர்;
உண்டனர்; தாயாய்ப்
பேணும் அடிகளை
அடுத்தனர்; அவருடன்
பெரியவர் தங்கினர்;
திருமகள் உறைவிடம்

வரிசையில் செல்ல
வருவதாய்ப் பிரிந்தாள்;
அடியரும் பெரியரும்
அன்றுடன் தங்கினர்;
முடிவிலா அன்பின்
முகிழ்ப்பினர் ஆயினர்;
பெரியவர் பிச்சை
பேசினார் தம்நிலை

"ஒன்றிய நட்பின்
ஒருபொரு ளாகக்
குன்றெனும் குணமும்
கொள்கையும் உடையராய்
இறப்பில் ஒன்றிய
எழுதரு புகழர்
**சீநக்கர், பொய்யா**
**மொழியினர்** சீர்த்திக்
**கண்டியூர்** என்னும்
காவிரிக் கரைசார்ந்

தொன்றிய ஒடுக்கம்
ஒன்றில் இருந்தபூந்
தோட்டப் பணியில்
தொடர்ந்தேன்; செடிகள்
வாட்டம் இலாமலும்
வளமாம் நிலையிலும்,
தொண்டெனக் கொண்டு
வளர்த்தலும் விடியலில்

*தண்மலர் பறித்துத்*
*தாரும் மாலையும்*

*காலம் தவறுதல்*
*காணா வகையில்*
*சாலவும் புரிந்தேன்;*
*சலியா திருக்க*
***வாரம் வாசகம்***
***இசைப்பா வள்ளலார்***
*பேரருள்* ***தாயு***
***மானவர்*** *பாடல்*
*இசையொடு பாடுவேன்;*
*இதனால் என்னை*

*அசையா ஒடுக்கத்*
*தன்பினர் விரும்பினர்;*
*வழிபடு பொழுதொடு*
*வருபொழு தெல்லாம்*
*கழிபே ரன்பராய்க்*
*கலந்து பாடவும்*
*கேட்கவும் ஆயினர்;*
*கிடைத்த இறையருள்*
*கூட்டும் பாங்கெனக்*
*குளிர்ந்து பாடினேன்;*

*பணிபுரி* ***அருச்சகர்***
***வாரம் பாடுநர்***
*துணிவுடன் சூழ்ந்து,*
*தொலைத்திட எண்ணி,*

*மூட்டி வைத்தனர்;*
*“முழுதுறும் உரிமை*
*தீட்டிய ஒடுக்கம்*
*தீயவன் இவனதாய்*
*ஆக்கும் முயற்சியில்*
*ஆள்களைக் கூட்டி*

*ஏற்ற பொழுதை*
*எண்ணி யுள்ளனன்;*
*விட்டோம் நாமதை,*
*விடியும் முன்னரே,*
*கெட்டோம் நாமெனக்*
*கேடு விளைந்திடும்;*
*ஊரவர் கூடி*
*உரிய பணியெலாம்*
*சீருற நீயே*
*செய்யென வைத்திடத்*

*திட்ட மிட்டுளான்;*
*தீயதை முளையில்*
*வெட்டுதல் இலையேல்*
*விளைவுகள் என்னாம்?*
*நீங்கள் பரம்பரை*
*நீங்கிப் போகவும்,*
*நாங்கள் வேலை*
*நீங்கி ஒழியவும்,*
*ஆவது திண்ணம்;*
*ஆதலால், உடனே*

*ஆவது புரிக*
*அதனைச் சொல்லல்,*
*உங்கள் உப்பை*
*உண்டதன் முடிவாம்*
*எங்களுக் கென்ன"*
*என்றனர் சென்றார்;*
*எரிமலை யாக*
*ஏறிய கொதிப்பைத்*
*தெரிவுறா தடக்கித்*
*தேடி உரிமையர்,*

*விடியல் வழிபாட்*
*டதற்கென மாலை*
*தொடுத்திடு பொழுதில்*
*வந்துளார்; இயல்பாய்*
*இசையொடு பணியில்*
*இருந்த நிலையில்*
*அசைவற நின்றுளார்;*
***அருள்மணி** அருளிய*
*அருமை வாசகம்*
*அழுதழு திசைத்தேன்;*

*"முத்தி நெறி அறியாத*
*மூர்க்கரொடு முயல்வேனைப்*
*பத்தி நெறி அறிவித்துப்*
*பழவினைகள் பாறு வண்ணம்,*
*சித்தமலம் அறுவித்துச்*
*சிவமாக்கி எனையாண்ட*
*அத்தனெனக் கருளியவா*
*றார்பெறுவார் அச்சோவே"*

இன்னதைப் பல்கால்
எண்ணி உருகி,
என்பது கரைய
இருகணும் பொழிய
நாத்தழு தழுக்க
நரம்பதும் சிலிர்க்க
யாத்த **வாசகம்**
உள்ளிருந் துந்திப்
பாடச் செய்ததாய்ப்
பாடினேன்; உருகினேன்;
பல்கால் பாடினேன்;
பக்கம் நின்று
செல்வதும் அறியேன்;
செறிந்த உணர்வால்
எனையும் மறந்தேன்;
எவையும் மறந்தேன்;
நினைவு வருங்கால்
நேரில் மூவரும்
நின்ற தறிந்தேன்;
"நீரிவண் நீட்டிப்
பாடிய பாட்டு
பழிப்பது நோக்காய்ப்
பாடிய "தென்றார்;
"பாவியீர்! நீங்கள்
கூடி யுரைக்கும்
குறிப்பதை அறியேன்

**ஆளுடை அடிகள்**
**அருள்வா சகமே**
**வாளென அறுக்குமேல்**
**வாயால் என்சொல?**

எள்ளள வேனும்
எண்ணாப் பழியை
அள்ளித் தெளித்தீர்!
அறிந்தேன் உம் எணம்!
வேலையில் தள்ளியான்
வேறிடம் செல்வேன்;
**வேலை விடுக்கிறேன்**
விரும்பிய வாறுநீர்
வேண்டுவ செய்கென
வெளியில் வந்தேன்;

நீண்ட பணிநிலை
நினைவொடு நடந்தேன்;
காவிரித் தென்கரைக்
**கருவூர்ச்** சாலையில்
ஏவிய எண்ணம்
எதுவென அறியேன்
நடந்தேன்; **அல்லூர்**
நண்ணினேன்; மேலும்.
தொடர்ந்திடச் சற்றே
ஓய்தல் நன்றென

**இளங்குடி அம்மை**
கோயிலை அடுத்தேன்;

ஒளியிழந் தொருவர்
உள்ளே இருந்தார்;
அவர்முன் இருந்ததோர்
அன்னக் காவடி;
அவரறி யாமல்
ஆவலாய்த் தின்னும்
நாயினை அறியார்;
நன்றாய்த் தின்றநாய்

போயது கண்டேன்;
போக்கும் பசியென
எடுத்த சோற்றை
எடுத்துநாய் உண்டதைத்
தடுக்கவும் நடந்த
தறியவும் கூடா
அவரை நினைத்தேன்;
அவர்பசி தீர்க்க
எவரை நாடுவார்:
எனநான் எண்ணினேன்.

அவர்தம் காப்பினில்
ஆங்கே முடவராய்
இருவர் இருந்ததும்
கண்டேன்; உருகினேன்;
ஆற்றுள் சென்றுநீர்
ஆடினேன்; மீண்டேன்;
போற்றும் இளங்குடி
அம்மையைப் போற்றி

*ஏற்றேன் அன்னக்*
*காவடி; இசையொடும்*

*“எத்துணையும் பேதமுறா*
*தெவ்வுயிரும் தம்முயிர்போல்*
*எண்ணி யுள்ளே*
*ஒத்துரிமை உடையவராய்*
*உவக்கின்றார் யாவரவர்*
*உளந்தான் சுத்த*
*சித்துருவாய்எம்பெருமான் நடம்புரியும்*
*இடமெனநான் தெரிந்தேன் அந்த*
*வித்தகர் தம் அடிக்கேவல்*
*புரிந்திடவென் சிந்தைமிக*
*விழைந்த தாலோ”*

*என்பதை,*

*ஒத்துளங் கூர்ந்து*
*தாங்கல் கடனென*
*முற்றுறக் கொண்டேன்;*
*மூத்த குரலொடு*
***பெற்றதாய் தடித்ததோர்***
***அப்பாநான் அருட்பா***
*உற்ற பேற்றால்*
*உற்றவை பாடினேன்.*
*காவடி இசையொடும்*
*இயங்குத லாக*

*ஆவலாய்க் கேட்டனர்;*
*அமுதம் வழங்கினர்;*

**காவலன் ஆனேன்**
**மூவர் தமக்கும்,**
ஆங்கிது செய்யும்
வேளையில் சிலநாள்
ஏங்கும் **திருவை**
எண்ணி, மீட்பதற்
காம்வகை என்னென
அழுந்திய போதுதான்;
அவளை அள்ளி
எடுத்து மருத்துவம்
தவறா தியற்ற
நேர்ந்தது; முன்னரே
சித்த மருத்துவம்
செய்த அளவால்
ஒத்தது புரிந்தேன்;
ஒன்றிய பிறவெலாம்
முன்னரே சொன்னேன்;
அல்லூர் எனக்குத்
**திருவளர் குடியாய்த்**
தெரிந்தது; பின்னர்
**அவ்வூர்ப் பழம்பெயர்**
அதுவென அறிந்தேன்;
செவ்விய நினைவுகள்
ஒன்றாய்ச் செயல்படல்
இயல்பெனல் உலகியல்;
இதுகால் என்னை

*நம்பிய நால்வர்*
*ஆங்குளர்; நானும்*
*நம்பினேன் அவரை*
*நாள்வழிக் கடமை*
*தொடர்ந்திட விடியலில்*
*செல்வேன்; என்கதை*
*அடிகள் திருச்செவி*
*அடைந்திடக் கிட்டிய*
*பேற்றினுக் குவந்தனென்;*
*பெருந்தகை அடிகளைப்*
*போற்றி வாழ்வென்*
*திருவருள் நினைந்தே.*

*எனவிடை கொண்டார்*
*இயற்கட னாற்றும்*
*மனமுறக் கிளர்ந்தார்*
*மருவிய ஊர்க்கே.*

## 7. தீதும் நன்றாம்

*(உறுப்பினர்: அருளடிகளார்; திருமகள்; பாவை; தோழியர்; ஆசிரியர்; மருத்துவர்)*

*1 விடியல் வருமுன் வழக்கம்போல்*
*விழித்தாள்; கடமை பற்பலவும்*
*முடித்தாள் அதன்முன் பெரியவரும்*
*முதிர்ந்த அன்பால் விடைபெற்றுத்*
*தொடர்ந்த பணிக்குச் சென்றதனைத்*
*துலங்கும் அடிகள் தாம்கூற,*
*படர்ந்த அவலப் பெருக்காகிப்*
*படிந்தாள் அடிகள் திருவடியே*

*2 பிரிந்தார் வருவார் பிறபிறவும்*
*பேணிச் செய்வார் உலகியலைப்*
*புரிந்தால் எல்லாம் இயற்கையெனப்*
*போற்றி வாழ்வர்; நீயதனைத்*
*தெரிந்து கொள்ளும் நாள்அணித்தே*
*தேடி எய்தும் திருமகளே!*
*பரிந்து கவலை அடையாதே*
*பாடம் இதனைப் பற்றென்றார்.*

*3 "துன்பே பிறவி எனநொந்து*
*துடித்தேன் நாளும் அந்நிலையில்*
*இன்பே வாழ்வாம் எனக்காட்டும்*
*ஏந்தல் உள்ளார் என்பதனை*

*அன்பே வடிவாம் ஐயாதாம்*
*அறியச் செய்தார்; அன்னாரை*
*என்னே என்னே நான்சொல்வேன்*
*எளியேன் மறவேன் எனச்சொன்னாள்.*

4 *வழக்க மாக நீபாடும்*
***வாச** கப்பா **'அன்றே'** நீ*
*முழக்க மறந்தாய்; கதிர்கண்டு*
*முழங்கும் **'ஓங்கல்'** இன்றில்லை;*
*பழக்கம் வழக்கம் அன்னவையே*
***ஒழுக்கம் ஆகும்;** படுதுயரை*
*முழுக்கத் துடைப்பாய்; பெரியவரை*
*முன்னே வைத்து நடவென்றார்.*

5 *அடிகள்! தாயை யானறியேன்*
*அருமைத் தந்தை தமையறியேன்;*
*விடியல் வாழ்வில் உண்டென்று*
*விளங்கும் அடிகள் தங்களிடம்*
*முடிந்த முடிவாய் ஒப்படைத்தார்;*
*மூளும் இன்பு துன்பெல்லாம்*
*கடிந்த பெருமைத் **தாயுமானீர்!***
*கருதும் கருத்தே கருத்தென்றாள்.*

6 *பள்ளிப் படிப்பில் இடையீடு*
*பயிற்சித் தடையென் றாகாமல்*
*அள்ளும் சுவையாம் அமுதென்ன*
*அமைந்து கற்றாள்; கல்வியொடு*

துள்ளும் மானாய் விளையாட்டும்
துலங்கும் கலையாம் இசைநடமும்
வெள்ளப் பெருக்காய்க் கூடிவர
விளங்கி நின்றாள் ஒருமுதலாய்!

7 அப்ப ரடிகள் அமைவாகி
ஆளும் நெஞ்சம் திருமகளுக்
கொப்ப வழங்கி ஒருதாமாய்
ஒன்றி உளரோ எனுமாறு
குப்பை கூளம் குறுந்தூசி
கொட்டும் கழிவு யாதொன்றும்
அப்பல் இன்றித் துப்புரவே
அமையத் தூய்மைப் பணிசெய்தாள்.

8 தோட்டத் துளிரில் தோய்ந்திடுவாள்
தொடுக்கும் மலரில் மலராவாள்
பாட்டுத் திறத்தால் பற்பலரும்
பரிந்து கூடிப் பணிபுரியக்
காட்டும் ஆணை இல்லாமல்
கலையால் கூட்டி வழிகாட்டி
ஈட்டும் இன்பம் ஈதென்ன
இறைமை வடிவாய் நின்றிடுவாள்.

9 ஒய்தல் அறியாள்; நூலகத்துள்
ஓதும் நூல்கள் ஒவ்வொன்றும்
ஆய்தல் கடனாய் மேற்கொண்டாள்
அடுக்கும் தூய்மை அட்டையொடும்

*ஏய்தல் தூய்மை பேரறிய*
*எழுத்துத் தூய்மை எல்லாமும்*
*வாய்ந்த மனத்தின் தூய்மையென*
*வகையாய்ப் புரிந்தாள் திருமகளே!*

10 *உருகி நின்று வழிபடவே*
*ஒன்றி வந்த பிறவியிதோ!*
*பருகு பாலாய் அமைவாகிப்*
*பாட வந்த பிறவியிதோ!*
*அருவி போலக் கலைச்செல்வம்*
*ஆகித் திகழும் பிறவியிதோ!*
*பெருகு தொண்டு செய்தற்கே*
*பிறந்த பிறப்போ எனநின்றாள்.*

11 *அடிகள் நிழலோ மெய்காவல்*
*ஆணை யின்றித் தானேற்ற*
*படிவப் பாவை தானோதான்*
*பார்த்த குறிப்பால் பணிசெய்து*
*முடிவில் லாத பேரன்பு*
*முகிழ்த்த தாய்மைப் பிழம்போதான்*
*குடிசெய் வார்க்கு முந்துற்றுக்*
*கொடுக்கும் திருவோ எனநேர்ந்தாள்.*

12 *வானம் பார்த்த நிலத்தெழுந்து*
*வாடி வானம் பார்க்கின்ற*
*மானப் பயிர்க்கு மழைபெய்து*
*மாறா உரமும் செறிகாப்பும்*

*தானப் பொருளாய்க் கிடைத்ததெனத்*
*தகவாய்ச் சிறந்தாள் திருமகளே;*
*தேனற் சாந்தக் கூட்டென்னத்*
*திகழ்ந்த பேறு பெரிதாமே!*

13 *அம்ம இவளைப் பெற்றவள்தான்*
*அருகில் இருப்பின் உள்நெகிழ்ந்து*
*சொம்மென் றோடி முத்தாடிச்*
*சொக்கிச் சொக்கித் திளையாளோ!*
*அம்பொன் மகளின் அப்பாவும்*
*அணித்தாய் இருப்பின் அள்ளியிவள்*
*பொம்மல் ஓதி வருடியவன்*
*பூரிப் பெழிலைக் காட்டானோ!*

14 *பிறந்தார் ஒருவர் இருப்பாரேல்*
*பெய்யும் மழையாய் நீர்வாரத்*
*துறந்தார் எனினும் அதைத்துறந்து*
*தூக்கிக் கொண்டே குதியாரோ!*
*சிறந்தாள் தோழி ஒரொருத்தி*
*செய்ய திருவைத் தலைக்கொண்டு*
*பறந்தாள் என்றே ஆகாளோ*
*என்று புகழ வளர்ந்தாளே!*

* * *

15 *திருவைப் புகழும் பாராட்டு*
*தீயாய் வெதுப்பக் கேட்கின்ற*
*ஒருத்தி '**பாவை**' செவிக்கண்ணே,*
*ஓங்கி ஒலித்த திசைவெள்ளம்;*

16 ஆடல் வல்ல மயிலே நீ!
பாடல் வல்லாய் அல்லை நீ;
பாடல் வல்ல குயிலே நீ!
ஆடல் வல்லாய் அல்லை நீ;

17 சொல்லில் வல்லை கிள்ளை நீ!
சுவைத்தல் வல்லை இல்லை நீ;
சுவைத்தல் வல்ல அசுணம் நீ!
சொல்லில் வல்லை அல்லை நீ;

18 ஆடல் பாடல் அல்லாமல்,
சொல்லல் சுவைத்தல் எல்லாமும்,
கூடல் அமைந்தாய் **திருவேநீ**!
கொடையாய் அமைந்தாய் எங்களுக்கே!

19 யாழும் குழலும் தாமேதாம்
அமிழ்தம் குழைய இசைத்திடுமோ?
வாழும் வளங்கள் எல்லாமும்
வருந்தல் இன்றி வாய்த்திடுமோ?

20 பொன்னும் மணியும் தாமேதாம்,
பொலிதல் உண்டோ எங்கேயும்?
மின்னும் வயிரம் தானேயும்,
மிக்க பட்டை வழியன்றோ?

21 தானே வந்து நலமெல்லாம்
தரவே வந்த எம்திருவே!
தேனே மொழியாய் வாய்த்தாயே!
தெய்வப் பேறே நீயம்மா!

22 பாராட் டெரிச்சல் பட்டாளாம்
பாவை கேட்க இசைமிக்க,
சீராட் டெடுத்தால் தாங்குவளோ?
சீற்றம் பொங்கி எழுந்தாளே!

23 பள்ளுப் பாடிப் புகழ்ந்ததனால்
பரிந்து நாணி வருதிருவைத்,
துள்ளும் மான்போல் அருகோடித்
துலங்கும் கழுத்தில் கைபோட்டே
அள்ளி அணைப்பாள் போலாக,
ஆவித் தழுவிக் குரல்வளையைத்
தள்ளி அழுத்தி நெரித்ததனால்
தாங்காத் துயரால் வீழ்ந்தாளே!

24 என்னே வெறிதான் இவட்கென்ன
எண்ணப் பொழுதும் இல்லாமல்
முன்னே பின்னே வந்தவர்கள்
முட்டி மோதி எடுத்தணைத்துத்
தன்னே, ரில்லாத் திருமகளைத்
தக்க பொழுது தாழ்க்காமல்,
சொன்னார்; நல்ல மருத்துவரும்,
சோரர் தோடி வந்தாரே!

25 மூச்சுத் திணறல், குரல்நாண்கள்
முட்டல், விலகல், சிதைவுற்றுப்
பேச்சு வாராப் பெருந்துயரம்
பிறழும் கண்ணின் இடுகுதலும்
வீச்சுச் சுண்டு கயிறிறுக்கி
வீழும் உடலே போற்கிடக்கப்
பீச்சி எடுத்த ஒளிப்படத்தின்
பேற்றால் தேர்ந்து பணிசெய்தார்.

26 ஓடும் மணியும் ஓடாமல்
ஒற்றி ஒற்றி நிற்பதுவோ?
நாடும் நாடி தானதுவும்
நடக்க மாறி நிற்பதுவோ?
நீடு காற்றும் நின்றிங்கே
நேயம் காட்டி அசையாதோ?
தேடும் மூச்சுத் திரும்பாதோ?
திருவே திருவே எனச்சூழ,

27 மெல்ல மலரும் குவளையென
இமைகள் திறந்தாள்; "**பாவையெனும்**
**நல்ல நங்கை நலம் பெறுக!**
**நாடித் தேடி அவட்கெதுவும்**
**அல்லல் இன்றி அருள் செய்வீர்!**
**ஆரும் துயரம் ஊட்டாதீர்!**
**சொல்லி உம்மை வேண்டுகிறேன்;**
**சொல்வீர் பிறர்க்கும்**" என்றாளே.

28 அடிகள் அறிந்தார்; அப்படியே
அமைதி வடிவாய்க் கையமர்த்திப்,
படியும் அருளால் திருமகளைப்
பார்த்து நின்றார்; "அவட்கெதுவும்
கடிதல் தானும் செய்யோம்யாம்
கவலை விடுக" என்றார்கள்;
குடிமை காக்கும் குணக்குன்றாம்
கொள்கைத் தோன்றல் பேரடிகள்.

29 இன்னா செய்தாள் அவளேனும்
இனிய செய்ய எண்ணுமிந்தப்
பொன்னாள் தனக்கும் பொருந்தாத
பொறாமை காட்டிப் புன்செயலில்

என்னே இறங்க லாய்விட்டாள்?
இதற்கோர் ஏது தானுண்டேல்
இன்னே துடைத்தல் எம்கடமை
என்ன அடிகள் நினைவானார்.

30 கொதிக்கும் உலையின் மேல்மூடி
கொள்ளும் வேர்வை; பின்மூடி
குதித்துத் தாவி வீழ்வதுபோல்
கொண்ட தீமை இன்னதுவால்;
மதிக்கும் பண்புப், பிறவியதாம்
மாத ரிடத்தும் இவ்வாறு
கதிக்கும் என்றால், எதிர்காலக்
கயமை எண்ண அளவுண்டோ?

31 கூடப் பயில்வாள்; இரவுபகல்
கூடி உறைவாள்; வழிபாட்டுப்
பாடல் தொட்டுப் பற்பலவும்
பற்றால் ஒன்றல் படிப்பன்றோ!
ஆடல் களத்தும் ஆய்வகத்தும்
அரிய விழாவும் பிறவுமெலாம்
நீடற் கிருந்தும் நெறிக்கேடு
நீங்கா திருப்பின் என்னாகும்?

32 உடலம் தேறி வந்தபினர்
உண்மை கண்டு தெளிந்ததுதான்
தொடரல் இன்றிச் செய்திடலாம்
தொற்று நோயாய் இத்தீமை
படரின் எய்தும் பெருந்தீமை;
பரிவால் திருத்தல் வருந்தீமை
கெடற்குச் செய்யும் வழியாகும்
கேட்பேன் அமைய எனவமைந்தார்.

33 *விழித்தாள் கண்ணை விழித்ததுவும்*
*விரும்பும் பாவைக் கெத்துயரும்*
*கொழித்தல் கூடா தென்றுரைத்த*
*கொஞ்சும் மொழிகேட் டுளைபாவை*
*"அழிக்க முயன்றேன் அருள்வடிவாய்*
*அணுவும் துயரம் இல்லாமல்*
*செழிக்க நின்றாள்; அன்னவளைச்*
*சென்று பொறுத்தல் வேண்டுமென,*

34 *கேட்டு நிற்றல் என்கடமை!*
***கேட்டுப் பிறவி*** *யானல்லேன்*
*மூட்டும் தீய பண்புகளால்*
*மூண்ட விளைவு மறந்தென்னை*
*மீட்டும் பிறந்த புதுப்பிறப்பாய்*
*மேலோய் கொள்ளென் றுரைத்தேங்கி*
*ஊட்டும் உணர்வால் ஒருமித்தாள்*
*ஒழுகும் கண்ணீர் ஒன்றியவே!*

35 *பாவை பெற்றோர் உருகுதலும்,*
*பாராய் திருவே! பற்பலகால்*
*நாவை வாட்டி யாம்மொழிந்த*
*நன்றாம் உரைகள் ஒன்றேனும்*
*பூவை வெதுப்பு கனலென்னப்*
*போன தன்றிப் புரிந்ததனைத்*
*தேவை என்று கொண்டதிலை*
*திருவே திருப்பம் செய்தனையால்!*

36 *பெற்றோம் யாங்கள் இவளையாம்;*
*பிழையாம் பிறவி போயொழிக்க*
*உற்றாய் நீயே உயர்தெய்வ*
*உருவே!* ***பாவை தனைமீளப்***

***பெற்ற தாயும் நீயேதான்***
*பிள்ளைப் பருவக் காலத்தே*
*பெற்றோள் ஆதல் அரிதம்மா!*
*பெற்றாய் நீதான் பேறம்மா!*

37 ***சித்தம் திருந்தல் மீள்பிறப்பாய்ச்***
***சீர்த்த திருவர் கூறியுள்ளார்;***
*முத்தர் உரையாம் அவ்வுரையை*
*முழுதாய்ப் போற்றிக் காத்துள்ளாய்.*
*வித்தின் அனையர் விழுப்பமென*
*வித்தும் பெருமான் வள்ளுவனார்க்*
*கொத்த விளக்கம் நீயாகக்*
*கொண்டாய் திருவே வாழ்கென்றார்.*

38 *அமைந்த மலையாம் அருளடிகள்*
*ஆங்கு நின்றும் அருளகத்தில்*
*சமைந்த நிலையில் பாவையவள்*
*சால்பின் வடிவாய் நீர்வழியக்*
*குமைந்து வீழ்ந்தாள்; அடிபற்றிக்*
*குற்றம் உடையேன்; குறையுடையேன்*
*உமையும் வெறுத்தேன்; உட்காய்ந்தேன்;*
*உயர்ந்த திருவுக் குலைவைக்க.*

39 *துணிவும் கொண்டேன்; தூயடிகள்*
*தொடர்பும் வேம்பாய் வெறுப்புற்றேன்;*
*பணிவு பண்பு பாசமெலாம்*
*பாழும் கேடாய்ப் பதிவானேன்;*
*பிணிகள் எல்லாம் ஒருவடியாய்ப்*
*பெற்ற பொறாமைக் காட்பட்டேன்;*
*மணியொன் றில்லாப் பதரென்ன*
*மாறி நின்ற துணரேனால்!*

40 பொன்னும் பொருளும் உடைமையினால்
புகுந்த செருக்கும்; தோழமையால்
மின்னி மிளிரும் மின்மினிபோல்
மிகுந்து சேர்ந்த கூட்டமதும்
என்னைத் தலைகால் தெரியாமல்
எண்ணச் செய்த இறுமாப்பில்
துன்னும் இடியே வீழ்ந்ததெனத்
தோற்றம் தந்தாள் திருமகளே!

41 என்னைச் சேர்ந்த கூட்டமெலாம்
எட்டி எட்டி ஒவ்வொன்றாய்
பொன்னைப் பெற்ற பூரிப்பாய்ப்
போனார் திருவின் பக்கலிலே
இன்னாத் தீயுள் எனைத்தள்ளி
எரிக்கும் உணர்வு யானுற்றேன்;
பின்னர் என்னை அடுத்திருந்த
பேரும் எனக்குக் கசப்பானார்.

42 என்மேல் அவர்க்கோர் அன்பில்லை
எனக்குப் பெரிதாய் வாய்த்துள்ள
பொன்மேல் அமைந்த பற்றால்தான்
பொருந்தி யுள்ளார்; எப்பொழுது
தன்னா சைதான் நிரம்பாதோ
தாவி விடுவார்; அதனையான்
முன்னே உணரல் நன்றென்ன
முடித்த போதில் ஒருநிகழ்வே.

43 பழுத்த பழத்தில் புழுவாகப்
பற்றி யிருந்த ஓரிருவர்
முழுத்த உயிரே நீ என்றும்
மூச்சும் பேச்சும் நீ என்றும்

*கொழுக்க என்னைப் பயன்படுத்திக்*
*கொண்டோர் ஓடித் திருமகளின்*
*கழுத்தைக் கட்டும் நட்பாகிக்*
*காலின் நிழலாய் நின்றார்கள்.*

44 *திருவைத் தீர்த்தால் அல்லாமல்*
*தீரா தென்றன் துயரென்று*
*கருவிக் கொண்டு நானிருக்கக்*
*கனிந்த ஆண்டு விழாப்போதில்*
*கருத்தும் கண்ணும் முழுதுணர்வும்*
*கலக்கும் வகையில் திருமகளே*
*இருக்கக் கண்டேன்; என்னகத்தே*
*எரிதீப் பற்றி எரிந்ததுவே!*

45 *மீண்டும் அடிகள் அடிபற்றி*
*மீளாப் பாவி மீண்டுள்ளேன்*
*மாண்ட திருவள் மாயாமல்*
*மீண்ட மீட்சி போலாக*
*ஈண்டும் பாவம் எதுவுமற*
*இலங்கும் வாழ்வில் அவளோடு*
*நீண்டு வாழ அருளுகென*
*நெகிழ்ந்தார் அண்ணல் அருளடிகள்.*

46 *கரையும் அழுகை போலாகக்*
*கழுவாய் ஒன்றும் இலையென்றே*
*கரையும் தண்ணந் **தமிழ்மறையும்***
*கண்ணே எழுக! புதுப்பிறவி*
*வரையும் வாழ்வு வாழ்வாங்கு*
*வாழச் செய்ய **ஒப்படைப்பு***
***விரவ வாழ்க; விளங்குநலம்***
***விரிய வாழ்க** எனமலர்ந்தார்.*

47 *இறையே கழுவாய் வழங்கியதாய்*
*ஏற்றுக் கொண்டு கடிதோடி*
*நிறையும் திருவை விட்டினிமேல்*
*நீங்கேன்; வீடு சுற்றமெலாம்*
*சிறையென் றெண்ணித் திருமடத்தில்*
*சேர்வேன்; திருவோ டிணைவாதல்*
*முறைமை; என்றன் காலமெலாம்*
*முழுதொப் படைப்பே முடிவென்றாள்.*

48 *கற்பேன் மேலும் திருவோடு;*
*கலப்பேன் பணியில் பிறர்க்குதவி*
*நிற்பேன் முறையாய் எனக்குவரு*
*நிதியம் எல்லாம் அறத்திற்காம்;*
***அற்பப் பொருளால்** அழியாத*
***அற்புப் பொருளை** அருட்பொருளைப்*
*பெற்று மகிழும் பெருவாழ்வே*
*பேணும் எங்கள் வாழ்வென்றாள்.*

49 *நன்மை விதைக்க நன்மையுறும்;*
*நல்லோர் வெறுத்துத் தள்ளுவதாம்*
*தின்மை விதைக்கத் தின்மையுறும்;*
*தேர்ந்த இவற்றைத் **திருப்பாவை***
*துன்னி மாற்றித் தொலைவில்லாத்*
***தின்மை தானும் நன்மையினை***
***மன்னச் செய்யும்** என்பதனை*
*மாறாப் பொருளாய்ச் செய்தமைத்தார்.*

50 *உருவும் நிழலும் போலாக*
*ஒன்றி நின்று திருப்பாவை*
*மருவும் பெயராய் எவ்வெவரும்*
*மனத்துக் கொள்ள எதிர்கால*

*வரவுக் கேற்ற பயிற்சியெலாம்*
*வாய்க்கும் பேறாய் அருளடிகள்*
*பருவ மழையாம் விழியொப்பப்*
*பரிந்து நின்று பணிபூண்டார்.*

51 *அடிகள் நிறுவு* ***முதுவரிலம்***
*ஆளும் பொறுப்பைத்* ***திருவேற்றாள்;***
*படியும்* ***இளையர்ப் பேணில்லம்***
*பேணல்* ***பாவை பரிந்தேற்றாள்;***
*குடிமைச் சிறப்புக் கிருப்பிடமாய்க்*
*கொள்ளும் இரண்டும் பேணுதலால்*
*மடியும் துயரம்; மனங்கொள்ள*
*மலரும் குடிமை எனக்கொண்டார்.*

52 *முதுவர்ப் பேணும் செவிலியென*
*முழுதாய் நின்றாள் திருமகளும்*
*புதுமை பூக்கும் இறைவடிவு*
*பூண்ட குழந்தை நலம்பேண*
*இதுதான் தெய்வத் தேனமுதம்*
*தேடி நமக்கு வாய்த்ததெனப்*
*பொதுளத் தன்னை ஒப்படைத்தாள்*
*பொழிந்தாள் பாவை நாள்நாளும்!*

53 *பாவை இன்றித் திருவிருப்பின்*
*பார்வை எல்லாம் பாவைதான்;*
*பூவைத் திருவைக் காணாக்கால்*
*போகும் விழிகள் திருவின்மேல்;*
*ஆவுக் கமைந்த கொம்பென்ன*
*அவர்கள் இருக்க அருளடிகள்*
*தேவுக் காக்கும் வழிபாடாய்த்*
*திளைத்தார் தொண்டில் தமைத்தந்தே.*

54 ஆர்வப் பெருக்கில் அடைகாக்கும்
அன்புப் பெருக்கை உணர்ந்ததனால்
தீர்வு காண முற்பட்டார்.
தெய்வக் குழந்தை முன்னிளமை
தேர்ந்த முதுமை பின்னிளமை;
தெரிந்த இளமை இவ்விரண்டும்
**நேர்ந்து பழகல் இருபாலும்**
**நேயம் பெருக்கும் வாழ்வாமே!**

55 இளமை எழுச்சி கிளர்ச்சியெலாம்
எய்தும் முதுமை இனிப்பெய்தும்;
வளமை வாழ்வு பேரறிவு
வாய்த்த முதுமை அரவணைப்பால்
தளிர்க்கும் இளமை; இருவகையும்
தக்க நலமாம்; மூதறிவும்
கிளர்ச்சி யுளமும் ஒன்றாகின்
கிட்டற் கரிய பெரும்பேறாம்.

56 உண்டி உறையுள் வேறேனும்
உள்ளம் உணர்வு வேறேனும்
கொண்டு கொடுக்கும் இவ்விணைப்பால்
கொள்ளை இன்பம் கூடுவதாம்.
அண்டி இவர்கள் ஒன்றுபட
ஆகும் வழிகள் கண்டோமேல்
கொண்ட பணிகள் பிறபிறவும்
கூர்ப்பாய்ச் செயலாம் எனத்தேர்ந்தார்.

57 மகளிர்க் காகக் கலைநிலையம்
மட்டும் போதா திவண்கற்றார்
தகவாய் வாழக் கூட்டமைப்பும்
தாமே கூடிச் செயலாற்றும்

வகையில் வணிகம் தொழிலகங்கள்
வகுத்தல் முறையென் றாய்ந்தனராய்
மிகவே எண்ணிச் செயலாற்ற
மேல்லோர் எண்ணம் திருவுரைத்தாள்.

58 பிச்சைத் தாத்தா செய்பணியாம்
பெரியர்ப் பேணல் கடன்கொண்டோம்;
இச்சைச் செயலாம் அவர்க்கதனால்
இங்கண் அவரை அழைத்திவரை
உச்சி குளிரச் செய்விக்க
ஒருவர் அவராம்; நாம்அவர்க்கு
மெச்சும் துணையாய் இருந்திடலாம்
மேலும் அடிகள் அருள்என்றாள்.

59 பொருந்தும் ஒன்றை அல்லாமல்
போகும் எதுவும் சொல்லாத
திருந்து சொல்லின் திருவே உன்
திட்டம் இரட்டை இன்பாகும்;
வருந்தி அன்னார் பேணாமல்
வாய்ப்பாய்ப் பேண நேர்ந்தமையும்,
விருந்தாய் ஏற்போம், அவர்காக்கும்
வேட்கை முதியர் தமையென்றார்.

60 "ஒன்றி எண்ணும் எண்ணத்திற்
குற்ற வலிமை பெரிதாகும்"
என்று சொன்னார் உரைமெய்யாம்
என்பார் போல மறுநாளில்,
நன்றி செயவே பிறப்புற்ற
நல்லர் பிச்சைப் பெருமகனார்
ஒன்று சேர்ந்தார் உவகையராய்
ஒருநால் பேரும் இருக்குங்கால்

61 முன்னை அறியாப் பாவைஏன்
மோதி இடித்துப் பிச்சையினைக்
கன்னம் வருடித் தாடியினைக்
கனிந்து தடவி அன்பாக
என்ன சொல்வேன் இத்தாடி
என்னால் முன்னம் இழிவாகப்
பன்னப் பட்ட துண்டு; படு
பாவி அதனை நினைகின்றேன்.

62 என்றாள்; பெரியர் மட்டுமலர்
இனிய திருவும் அடிகளரும்
ஒன்றும் அறியாத் திகைப்புற்றார்;
ஒடுங்கு கண்ணால் பாவையவள்
அன்று பழித்த அப், பாவை
அடியோடழிந்தாள்; இப்பாவை
இன்று பிறந்தாள்; இத்திருவே
இனிய ஈன்றாள் எனச்சொல்லி,

63 ஒருநாள் மாலைப் பொழுதத்தில்
உரிமைப் பெரியீர்! திருவோடு
வருநாள் வாழ்வை வகைவகையாய்
வகுத்துச் சொல்லித் தேற்றியிவள்
அருகாய் இருக்க யான் கண்டேன்;
அனலாய்ச் சுடுதல் அல்லாமல்
வருமோர் நற்பண் பில்லாதேன்
வாட்டும் எரியாய் எரிவுற்றேன்.

64 தாடிக் கிழவா தடிக்கிழவா
தாங்காப் பகையாய் எனக்கமைந்த
கோடிப் பாம்பை விட்டதுடன்
கொஞ்சும் துணைக்கும் நிற்பாயோ?
கூடி ஒருநாள் எனக்குவரின்
கொட்டிப் போகும் தாடியெலாம்
ஆடி அடங்கும் போதினிலே
ஆட்டம் வேண்டா என்றெனக்குள்,

65 தீயாய் எரிந்தேன்; திருவின்மேல்
தீட்டு கத்தி பெரியவர்மேல்
பேயாய்ப் பாய நின்றேனைப்
பெரியர் அறியார்; திருவறியாள்;
தாயாய் அமைந்த அருளடிகள்
தாமோ அறிவார்; அவ்வெரிவைத்
தூயாய் துடைத்தாய்; உன்தாதா
தோயும் எனக்கும் தாதாவே!

66 பட்ட பாவக் கழுவாயாய்ப்
பரிந்து தாதா தாடியினைத்
தொட்டுத் தடவி இதன்பெருமை
துலங்க வாழ்ந்த வள்ளுவனார்
சொட்டும் தேன்பாத் தாகூரார்
சுடரும் அறிவர் மார்க்கசனார்
ஒட்டும் நேயப் பெரியாரும்
ஒன்றாம் பெரியீர் எனக்கென்றாள்.

67 வியப்பும் திகைப்பும் நீங்காராய்
வினவல் ஏதும் இல்லாராய்
நயப்பக் கேட்டு நின்றார்க்கு
நாளின் ஓட்டம் நம்ஓட்டம்
பயக்கும் மாற்றம் ஆயவெலாம்
பளிச்சுப் பளிச்சாய்த் தோற்றமுறத்
தயக்கம் இன்றித் திருமகளும்,
தாடி தடவித் தாதாவை

68 மயக்கி விட்டாய்; இனியேதும்
மனத்தில் உண்டேல் சொல்லென்ன
முயற்குக் கால்கள் மூன்றில்லை
நான்கே என்று தாதாவும்
தயக்கம் இன்றித் தாமுணர்வார்,
தட்டா திங்கே நம்மோடும்
இயக்க மாதல் வேண்டுவதே
எண்ணம் என்றாள் திகழ்பாவை.

69 அடிகள் முறுவல் அரும்புதலால்
ஆமாம் அதுவே விருப்பென்றார்;
குடிகள் காக்கும் கோவென்னக்
கொண்ட மூவர் தாமுமிவண்
படிவர் ஆயின் அக்கடமை
பாகும் பருப்பும் கலந்ததென
முடியும்; பெரியீர்! நாமிங்கே
முயல்வோம் ஒன்றாய்த் தொண்டென்றார்.

## 8. முதுமையும் இளமையும்

*(உறுப்பினர்: திருமகள், பெரியவர் பிச்சை, அருளடிகள், பாவை, முதுவர், பாலர்)*

1 பாடும் குழந்தை பாட்டிசைக்கப்
பயிலும் பெரியர் கேட்டுவப்பார்
நீடும் துன்பம் எங்களுக்கும்;
நீங்கும் பிரிதல் நமக்குள்ளே;
ஆடும் பெருமான் அருளோடும்
அருளர் பெருமான் திருவருளும்
கூடும் படிக்கு வரவமைதல்
கொடையாம் என்றாள் திருமகளே.

2 திருவே ஒன்று சொலமறந்தேன்
தெய்வத் தொண்டில் எனைச்செலுத்தும்
உருவே யாய பார்வையிலார்
ஒருவர் இயற்கைப் பேறுற்றார்;
வருவேம் யாமும் மூவரென
வட்டச் சுழற்சி உலகத்தை
ஒருவா றுணர்வோர் மாறுதலை
ஒப்பி ஏற்றல் முறையென்றார்.

3 திட்டப் படியே முதுவருடன்
திரும்பி வந்தார் பெருமகனார்
தொட்ட முதுமை தொடஅஞ்சும்
தொண்டை வளத்தால் முதுவரிடம்

*சிட்டுக் குழந்தைச் சேயில்லம்*
*சேரக் கூடிப் பண்ணிசைக்கும்*
*நெட்ட நெடிய பேரின்ப*
*நிலையம் என்ன ஆக்கினரே.*

4 *எம்மில் மூத்த இப்பெரியர்*
*எழுச்சி காணும் எங்களுக்கும்*
*பொம்மென் றெழும்பும் பூரிப்பால்*
*பொருந்தி உழைப்போம்; வாழ்நாளை*
*இம்மண் ணுவக்கும் கடனாற்ற*
*இயைந்த தாகக் கொண்டுழைப்போம்;*
*நம்முள் முதுவர் இனிஇல்லை*
*நல்ல இளமை உற்றோமே!*

5 *வீசி நடப்போம்; அடைந்தகதிர்*
*வீறி எழும்பல் போலாக;*
*பேசி எழுவோம் கடன்முடித்துப்*
*பெருக்கல் அள்ளல் நீர்விடுதல்*
*தூசி தட்டல் துணிதோய்த்தல்*
*தோட்டம் பார்த்தல் பூப்பறித்தல்*
*நேசித் திவற்றைப் புரிந்திடுவோம்;*
*நேற்றை வரைக்கும் இவையெல்லாம்,*

6 *எங்கே முடங்கி எங்களுக்குள்*
*இருந்த தென்ன யாமறியோம்;*
*இங்கே பெரியர் பிச்சையிவர்*
*ஏற்றார் பொறுப்பை; அதன்பின்னர்த்*
*தங்கா வேட்கை தாவியெமைத்*
*தட்டி எழுப்பி இவ்வண்ணம்*
*மங்கா இளமைக் கிருப்பாக்கி*
*மலரச் செய்த நுணர்கின்றோம்.*

7 உண்டோம் மகிழ்ந்தோம் உவப்போடும்
ஒன்றாய் இருந்தோம் நேயமெலாம்
கண்டோம்; களித்தோம்; முன்னெல்லாம்!
கனிந்த பிச்சைப் பெரியவரால்
வண்டாய்ப் பறந்து பணிசெய்தல்
வாய்த்த தேனாய்ப் பாட்டிசைத்தல்
அண்டாச் சோம்பல் எழுச்சியெலாம்
ஆக்கி விட்டார் தம்செயலால்!

8 இன்ன செய்க என்னாமல்
ஏற்ற எல்லாம் தாம்தாமே
முன்னர் அறியத் தம்செயலால்
முழக்கும் இவர்தம் முதுமையொடும்
என்ன முதுமை, எமக்கென்றே
எண்ணச் செய்து **மோனகுரு**
துன்னி வந்தெம் தவப்பேற்றால்
தூண்டா விளக்காய் அமைந்தாரே.

9 சிட்டுக் குருவி சிறுகிள்ளை
சேரும் வண்ணப் பூச்சியொடு
பட்டுப் பூச்சி பால்வெள்ளைப்
பளிச்சுப் புறாக்கள் இவையென்ன
மட்டுத் தேனைப் பொழிமழலை
மலர்வாய்க் குழந்தைச் செல்வங்கள்
எட்டுப் பங்காய்ப் பிச்சையவர்
எய்த லாலே இன்புற்றார்.

10 ஆடிப் பாடிக் கதைசொன்னார்;
ஐந்து விரலும் போதாமல்
கூடிக் கொஞ்சும் குழந்தையெனக்
கூடி நின்றார் முருகனென
தேடித் தலையைக் கண்டறியத்
திணறும் வகையில் பிள்ளைகளால்
மூடிக்கொள்ளத் தமக்குள்ள
முதுமை தொலைத்தார் மூதாளர்.

11 எதனை நோக்கிப் பெரியவரை
இங்கண் இணைத்தோம்? இவர்போல
இதனைச் செய்ய நாம்மூவர்
ஏனோ முடியா திருந்துள்ளோம்;
இதனை இதனால் இவன்முடிக்கும்
என்னும் அருமை **வள்ளுவமும்**
இதனை உரைத்தல் தெளிவானால்
எல்லாம் தெளிவாம் எனக்கொண்டார்.

12 பிச்சைப் பெரியர் வரவதனால்
பேணும் மாதர் விழிப்புணர்வு
மெச்சு கல்வி மேற்படிப்பு
வேலை யாக்கம் இன்னபல
அச்சில் வார்த்த சிலைபோல
ஆக்கும் கடனில் தோய்ந்தார்கள்
**எச்சம் என்னல் பிறர்நலமாம்**
**எச்சம் எனல்போல் ஒன்றின்றே.**

## 9. நச்சுவளையம்

*(உறுப்பினர்: பாவை, எழிலன், திருமகள், அருளடிகள்)*

*1 செல்வநலப் பாவையவட்*
*சேர்ந்தோர்கள் உறவாளர்*
*பல்வகையில் தொடர்பானோர்*
*பரிந்துபல பெற்றோர்கள்*
*நல்லபல நாமிழந்தோம்;*
*நம்பாவை அருளடிகள்,*
*சொல்லவரு திருவென்னும்,*
*இருவரொடும் கூடியதால்!*

*2 கேட்டபடி நலம்பெற்றோம்;*
*கேளாமல் பலபெற்றோம்*
*வாட்டமிலா வளமெல்லாம்*
*வரப்பெற்றோம்; வாய்மணக்கக்*
*கூட்டமுதம் சேர்ந்துண்டோம்*
*குறையில்லா நிறைசெல்வத்*
*தேட்டவளை இழப்பானோம்*
*திரும்பியவள் வரவேண்டும்.*

*3 திரும்பியவள் வருதற்குத்*
*தேர்ந்தவழி திருவவளை*
*விரும்புதலை விட்டொழிக்க*
*வேண்டுவது செயல்வேண்டும்;*

*கரும்பனைய அருளடிகள்*
*கசப்பாக வழிவேண்டும்*
*அரும்பாவை நம்மெண்ணம்*
***ஆங்காலம் ஆம்காலம்.***

4 *எனப்பலவாய் நினைந்தார்கள்;*
*இனியவராய்ப் பாவையவள்*
*மனக்கதவம் திறந்துள்ளே*
*மறைவாகப் புகவேண்டும்;*
*நினைத்தவற்றை நிறைவேற்ற*
*நேயத்தைப் பெருக்கியவள்*
*இனக்கவர்ச்சிக் கடிமையுற*
*இளக்குதலும் வேண்டுமென,*

5 *“உறவான அத்தைமகன்*
*உள்ளாக உளன்என்றும்*
*துறவான மடத்திருக்கை*
*துணிந்துரைக்க முடியாத*
*சிறையாக உளதென்றும்*
*சிறுகுறிப்புச் செய்துள்ளாள்*
*முறையுடையான் கட்**டெழிலன்***
*முன்னிருந்தான்; இருக்கின்றான்.*

6 *வருவானேல் மறவாத*
*மனத்தகத்தான் தன்தோற்றம்*
*தருவானேல், எனைத்தருவேன்*
*தட்டாமல் காத்துள்ளேன்;*
*திருவோடு பணிசெய்தால்*
*திருவாகத் துறவெண்ணி*
*வருபாதை மறவாதீர்*
*என்றுள்ளாள், என்றார்கள்.*

7 எழிலனவன், பாவையினி
எட்டாதாள் என்றிருந்தான்;
வழிவகைகள் இல்லாமல்
வாழ்துறவு மடந்தங்கிக்
கொழிசெல்வப் பேரழிவு
கொண்டுள்ளாள்; என்றெண்ணி
ஒழிவானோன், உள்ளெண்ணம்
உவப்பேற இதுகேட்டான்.

8 உறவுமுறை மறவாமல்
உள்ளவளை உணராமல்
துறவுநிலை எனக்கொண்டு
துறந்தேனே! அறிவில்லேன்;
பிறழ்வாளை விழியாளே
பிறர்வழியாய்த் தேன்பாகு
பெறுவழியைக் காட்டியுள்ளாள்
பிறகென்னே எனக்களித்தான்.

9 யாரையோ பார்க்கவென
யாரையோ சேர்க்கவென
ஊரையோ பேரையோ
அறியாரை முன்வைத்துத்
தேரையே காணற்குத்
தேடிவரு எழிலனவன்
நேரையோ கண்டுமவள்
நிமிராமல் செலக்கண்டான்.

10 நினைப்பாகத் தானிருந்தும்
நேரிலது காட்டாமல்
வினைப்பாட்டின் அழுத்தத்தால்
விழிகாட்டா தகன்றிருப்பாள்;
நினைப்பார்க்கும் நேயமிக
நிற்கின்றேன்; என்றுமுனை
நினைப்பானேன் எனச்சொல்ல
நினைவானான் நினைவற்றான்.

11 நின்றான்முன் நின்றாள்; ஏன்
நிற்கின்றாய் நீள்பொழுதாய்
ஒன்றேதும் சொலவேண்டின்
ஓரம்போய் அருளடிகள்
முன்தோன்றி உரைஅவர்தாம்
முடிந்தநலம் செய்திடுவார்;
இன்றேல்இவ் வழியே நீ
ஏகென்றாள் இயன்முறையால்!

12 உனைப்பார்க்க வந்தேனை
ஒதுக்குவது முறையாமோ?
நினைப்பிருந்தும் நீளுரிமை
நிலையிருந்தும் நெஞ்சத்தில்
வனைப்பிருந்தும் வாயுரைக்க
மாட்டாமல் வழித்தள்ளல்
எனைத்தறமோ எம்முறையோ
இயம்பென்றான் எழிலவளே.

13 முதுவரிலம் ஈதென்ன
முன்னெழுத்தே அறிவிக்கும்;
முதுவரிலம் வரத்தக்க
முதுமையிலை உனக்கிதுகால்;
முதுவரெவர் தமையேனும்
முகம்காண வந்தகுறிப்
பெதுவதுவும் உனக்கில்லை;
என்கருதி வந்தாய் நீ!

14 உரையென்றாள்; தடுமாற்றம்
உள்ளாக "உனைஎண்ணிக்
கரையற்ற அன்பாலே
காணற்கு வந்துள்ளேன்;
வரைவறியாப் பொற்சிலையே!
வருங்காலம் வாழ்காலம்;
திரையலையாய்த் தவிக்கின்றேன்
திருமணம் நீ கருதென்றான்.

15 "அப்படியா செய்தியதை
ஆணழகன் அஞ்சாமல்
எப்பொழுதுதோ சொல்லியெனை
இன்பத்தில் ஆழ்த்தாமல்
தப்பினை நீ; தவறில்லை;
தவநிலையம் வந்தபினர்
ஒப்பியெவர் வந்தாலும்
உறவாளர் எமக்கறிநீ!

16 நேராக என்னிடமே
நீவந்து கேட்டதுதான்
சீரான முறையாகும்
சிக்கலிலா நெறியீதே!
கூரான அறிவாளர்
கொள்கையிதைக் கொண்டுள்ளாய்
நேராக நானுனக்கு
நேயமிகச் சொல்கின்றேன்.

17 மணந்தாளை மணப்பனென
மணம்பேச வரல்உலகர்
மணமுறைமை இல்லையெனல்
மறவாமல் அறிந்திடுவாய்!
மணங்கொண்டே இவண்வந்தேன்;
மணவாளன் எவனென்ன
இணங்கியவன் தனைக்காட்ட
என்பின்னே வா"வென்றாள்.

18 அருளடிகள் முன்சென்றாள்;
அமைவாக வணங்கியபின்
திருமகளை இவண்காணத்
தேடியுற்றேன் என்றாட்குப்
பெருவெளியின் பறவையவள்
பிறங்கிடுவாள்; எவ்விடமும்
உருவெளியள்; உனைக்கண்டால்
ஓடிவரத் தவறாளே!

19 எனஅடிகள் உரைகேட்டாள்;
இளமுறுவல் தனைவழங்கி,
மனமருவு மன்னவளை
மகிழ்வாகக் கண்டறிய
எனஇவரும் வந்துள்ளார்;
எழுகின்றோம் எனச்சொல்லி
முனம்நடக்கத் திகைப்புற்றான்;
முறைநடக்கப் பின்போனான்.

20 வழிபாட்டுக் கூடத்தின்
வனப்புறுத்தப் பணியதனை
விழிப்பாகச் செய்கின்ற
விழைதிருவை விளித்தழைத்தாள்;
மொழிப்பேற்றுத் திருவேவா!
முன்னிவரைக் கண்டிடுவாய்;
ஒழியாத நம்முறவை
உரைத்திடுவாய் எனச்சொன்னாள்.

21 என்னுயிரும் என்னுணர்வும்
எள்ளளவும் குன்றாமல்
தன்னுயிரும் தன்னுணர்வும்
தானாய திருமகளே!
இன்னுயிரின் துணையாக
இணைகணவன் என்பதனை
என்னுயிரே இவரறிய
இசையென்றாள் இசைச்சொல்லாள்.

22 எனைமணந்தாள் இப்பாவை,
எனைப்பிரியாப் பாவையவள்
தனைமணந்தேன் யானானேன்;
தடியுடல மணமில்லை.
நனையரும்பு தேனாய
நற்றொண்டு நாயகனார்
தனைமணந்தோம் இருவருமே;
தவஅடிகள் திருவருளால்!

23 திருத்தொண்டு மணங்கொண்டார்
திளைக்குமுயர் இன்பநிலைக்
கருத்துரைக்க எம்நாவில்
கண்டறியும் சொல்லில்லை;
அருத்துகலம் அறியாத
அருஞ்சுவையை அருந்தும்நா
பொருத்தமுற அறிதலெனப்
புரிந்திடலே தெளிவென்றாள்.

24 எண்ணாத எண்ணத்தை
எண்ணிவர எடுத்துரைத்து
மண்வாரித் தலைமீது
மகிழ்வாகப் போட்டாரை
எண்ணாத வாறெல்லாம்
எண்ணினனாய் இச்சிறுமைப்
புண்ணாக்கும் புழுவாக்க
எனைஏவி விட்டாரே!

25 **இட்டுரைத்தார் சொற்கேட்டேன்;**
**இயல்கெட்டேன்;** விதைநெல்லாய்
இட்டுவைத்த விளைநெல்லை
இடித்துண்ண விழைந்தேனே!
தொட்டதுயர் தொடராமல்
தொலைந்தநலம் என்வாழ்வுக்
கட்டமைவுக் குரமாகும்
கால்வீழ்ந்தேன் எனச்சொல்லி,

26 கண்ணருவி பொழிந்திழியக்
கனிவாகி நின்றானைத்
தண்ணிலவு முன்தோன்றித்
தளிர்க்கையால் துடைத்தலெனப்
பெண்பெருமைத் திருமகளாள்
பிழையில்லை திருந்திவிடின்
எண்பெருமை எல்லாமும்
எண்ணமதே எனமலர்ந்தாள்.

27 ஒன்றறிவாய் எமக்குற்ற
உயிர்க்குழந்தை ஒன்றிரண்டா?
சென்றறிவாய்! எங்களுயிர்ச்
செல்வங்கள் இவையென்றே!
நன்றுலக விந்தையென
நவில்கின்றேன்; **கருத்துயரம்**
**இன்றியெமக் கித்துணைய**
**இன்னுயிர்கள் வாய்த்ததுவே!**

28 *பெற்றவர்கள் எமையீன்ற*
*பேற்றதனை எண்ணிநலம்*
*பெற்றேம்யாம்;* ***யாம்பெறாமல்***
***பெற்றவராம் எம்மக்கள்***
***பெற்றோராய் எமையாக்கப்***
***பிறந்தோராம்;*** *இதைஎண்ணப்*
*பெற்றோமேல் பெறாததெனப்*
*பிறிதொன்றும் உளதாமோ?*

29 *கொள்ளிக்குப் பிள்ளையெனக்*
*கொள்வதுவோ மகப்பேறு?*
*பிள்ளையிலாப் பழிதீர்க்கப்*
*பிறந்ததுவோ மகப்பேறு?*
*வெள்ளமென வருசெல்வ*
*வேந்தெனவோ மகப்பேறு?*
***உள்ளநிறை வொன்றன்றோ***
***உயிர்ப்பேறாம் மகப்பேறே!***

30 *முருகனவன் எம்பிள்ளை;*
*முச்சியெழில் கண்ணனவன்;*
*அருகனவன், புத்தனவன்,*
*அருளேசு, நபிகளவன்*
*பெருகுலக வாழ்வாகப்*
*பெறவாய்க்கும் பேறெல்லாம்*
*திருவடிவாய்த் திகழ்கின்ற*
*திருச்செல்வம் இவரலரோ!*

31 *ஆண்டாளார் எம்பிள்ளை;*
*அமைவான தொண்டாலே*
*நீண்டாளாம் நெடுவாழ்க்கை*
*ஔவையவள் எம்பிள்ளை;*
*ஈண்டு புகழ்க் கண்ணகியும்*
*இனியமணி மேகலையும்*
*வேண்டிவரு பிறப்பெல்லாம்*
*வீற்றுள்ள எம்பேறே!*

32 ***பெற்றோர்க்கே பிள்ளையெனல்***
***பெருங்குற்றம்;*** *நினைவாரேல்,*
*உற்ற நலம் எல்லாமும்*
*ஒருபெற்றோர் தருமக்கள்*
*முற்றளிக்கப் பெற்றனவோ?*
***முப்பாலில் உலகமகப்***
***பெற்றவரே பெற்றவராய்ப்***
***பேசுவதே பேச்சென்றாள்.***

33 *மாநிலத்து மக்களெலாம்*
*மகவென்றே தாம்கொண்டு*
*தானினித்த தவமாகித்*
*தவம்தந்த தாயாகித்*
*தேனினித்த திருவாகித்*
*திகழ்ந்தவராம் அன்னையரை*
*நீ நினைத்துப் பார்ப்பாயேல்*
*நேர்ந்தறிவாய் எனச்சொன்னாள்.*

34 *புரியாத எவ்வெவையோ*
*புரிவாக உரைத்தாளைச்,*
*"சரியாக உணராத*
*சால்பற்ற எளியேற்குப்*
***பிரியாத குருவானீர்!***
***பிழைபொறுக்க வேண்டு**"மெனப்*
*பிரியாமல் பிரிவுறுவான்*
*பெருந்துயரம் மாற்றினராய்,*

35 *முப்பேரும் அருளடிகள்*
*முன்னின்றார்; புதுப்பிறவி*
*இப்போது பெற்றவனாய்*
*எழிலனவன் தன்குற்றம்*
*தப்பாமல் சொல்லியவன்*
*தவக்குடிலுக் கொருகாலம்*
*ஒப்பாகக் கூடுமென*
*உள்ளெண்ணி விடைகொண்டான்.*

## 10. தொழிலக ஆக்கம்

*(உறுப்பினர்: அருளடிகள், திருமகள், பாவை, பெரியவர் பிச்சை, தங்கத்தாய், சிலம்பாயி, மருத்துவர், குழந்தை)*

1 *வெள்ளமாய்ப் பெருகி வேண்டும்*
*விளைவெலாம் வாய்க்கும் என்று*
*கொள்ளையாய் மகிழ்ந்து நின்றோர்*
*கூனிய எழிலற் கண்டு*
*துள்ளினார் துடித்தார் தூய*
*துறவியர் தொடர்பில் பாவை*
*உள்ளநாள் எல்லாம் நங்கட்*
*குரித்திலா நாளாம் என்றார்.*

2 *எழிலனைத் தூண்டில் ஆக்கி*
*இரைபெற வாய்க்க வில்லை;*
*வழிவகை வேறும் இல்லை;*
*வன்முறை காட்டிப் பாவை*
*இழிவுறச் செய்தல் தீதாம்*
*இறையருள் அடிக ளார்மேல்*
*பழியுரை எவரும் நம்பார்;*
*பார்க்கலாம் வழிதான் ஒன்றே.*

3 என்றனர் இருந்தார்; தேவைக்
கேதனையும் செய்தல் நேரே
என்பவர் உள்ளம் தீமை
உருவினை அன்றி வேறு
நன்றுறக் கருதல் உண்டோ?
நாடினர் வேறு வேறாய்;
ஒன்றுத லாகிப் பின்னர்
உரியதைத் தேட நின்றார்.

4 **மாதுயர் வாழ்க்கை** என்று
மறுகிடு மாதர் கூடி
**மாதுயர் வாழ்க்கை** எய்த
வழிவரும் என்று நம்பி
மீதுயர் வேட்கை யோடு
மேவினர் அருள கத்தை
**யாதுயர் வெய்தல் இல்லை**
**யாவரும் ஒன்றி நின்றால்!**

5 திருமகள் மேடை ஏறித்
திரண்டுள மகளிர் தம்மை
வருகென வரவு கூறி
வழிவகை வழங்கு மாறு
திருவருள் அடிக ளாரைத்
தேனிசைப் பாடல் வல்ல
பெரியவர், பாவை யாளைப்
பெருமையாய் அழைத்தாள் மேடை.

6 *பெரியவர் பிச்சை வள்ளற்*
*பெருமகன் இசைத்த பாடல்*
*வரிசையில் தோய்ந்தார் வாய்த்த*
*'மண்ணுல கதிலே' என்னும்*
*அரியநற் பாடல் கேட்டோர்*
*அஞ்செவி இனிக்கச் சொட்டும்*
*அருவியாய் வழியக் கண்ணீர்*
*அடிகளை அசைக்க ஆழ்ந்தார்.*

7 *அவையெலாம் மரமா கல்லா*
*அசைவற நின்று கேட்கச்*
*சமைவுறு மரங்கள் தாமும்*
*சரிந்துமெல் லசைவு கூரச்*
*சுவைமிகு தேனாய்ப் பாய்ந்த*
*திருவருள் இசையைக் கேட்க*
*அமைவதே பேறாம் என்று*
*வணங்கினர் வாழ்த்தி நின்றார்.*

8 *அழுதனர் வழிந்த கண்ணீர்*
*அமையுமோ என்பார் உள்ளுள்*
*விழுந்தது தெய்வ மாரி*
*விடிந்தது காலை; ஞாயி*
*றெழுவதும் எழுச்சி வெள்ளம்*
*என்றிதை உணர்வோம் என்ன*
*முழுவதும் அமைதி கொண்டார்;*
*முழங்கினாள் திருவின் செல்வி:*

9 தாயினை அறியேன்; அன்புத்
தந்தையை அறியேன்; இந்தத்
தாயுமா னாராம் தெய்வத்
திருவருள் பெற்றேன்; பெற்றோர்
**ஆயுமாய்ச் சுற்றம் தாமாய்**
**அமைந்துளார்; எனக்கே அன்றி**
**ஆயினார் தங்கட் கெலாம்**
**ஆவரால் அண்ணல் தாமே!**

10 "பெண்ணினம் விழித்தல் இன்றிப்,
பெற்றிடல் எதுவும் இல்லை
மண்ணென எண்ணிப் பெண்கள்
மதியுறப் பள்ளி கண்டார்;
எண்ணரும் கலைகள் கற்க
எழிற்கலை நிலையம் கண்டார்;
நண்ணிய தொழிலால் வாழ
நடத்துசீர் முயற்சி கொண்டார்.

11 உழைப்பினால் உலகம் உய்யும்
உழைப்பினால் உயர்வும் எய்தும்
**உழைப்பிலார் ஒருவர் இல்லை**
**உலகினில் என்னின் தீமை**
**இழைப்பதற் கெவரும் இல்லை**
**எனும்நிலை எய்தும்**; பெண்கள்
உழைப்பினால் உலகம் தானே
ஓங்கிடும் உண்மை கண்டீர்.

12 ஆடவர் எழுச்சி யுற்றால்
அவர்தமோ டமையும்; பெண்கள்
கூடிய எழுச்சி வீடும்
குடிமையும் உலகும் மேலாய்
நீடிய நன்மை எய்தும்
நெறிமுறைக் கேடும் வன்பும்
ஓடிய தாகும் என்றே
உன்னிநாம் உழைப்போம் வாரீர்.

13 பெண்களைப் பெண்கள் போலப்
பெருந்துயர்க் காக்கு வோர்கள்
உண்மையாய் ஆண்கள் இல்லை.
உரிமைகள் ஒடுங்கிப் போகக்
**கண்களே கண்கள் தம்மைக்**
**கடிப்பதே போல உள்ள**
**பெண்களே பெண்கள் தம்மைப்**
**பெருந்துயர்க் காக்கல் கண்டீர்.**

14 இன்னலை ஒழிப்ப தற்கும்
இனியவை பெருக்கு தற்கும்
மன்னிய விழிப்பு வேண்டும்;
மடிவிலா முயற்சி வேண்டும்;
உன்னிய இதற்கே உங்கள்
உறுதுணை வேண்டும் வேண்டும்;
என்னெனில் சொல்லில் இல்லை
செயலதே வேண்டும் என்றாள்.

15 அருட்பெரும் அடிகள் வாழ்த்தி,
“அமையுறு கழகம் உங்கள்
பொருட்டது வாகும்; உங்கள்
பொறுப்பது மாகும்; கூடி
வெருட்டுக வறுமை நோய்மை;
வீழ்ந்தது மடமை என்றே
இருட்டறை விட்டு வாரும்;
இணைந்திடும் வெளிச்சம்” என்றார்.

16 ஆக்குவெம் பயிற்சி; பின்னர்
ஆக்குவெம் ஆக்கும் எல்லாம்
தேக்குதல் இன்றி நங்கள்
தேவையைப் பஞ்சம் இன்றி
ஊக்கிய உழைப்புக் கொண்டே
உற்றிடக் கூடும்; **நங்கள்**
**நோக்கெலாம் நமக்கு நாமே**
**நோன்மையாம் வாழ்க்கை என்றார்.**

17 பயிற்சியில் சேர்வோர் தங்கள்
பதிவினை இன்று தொட்டே
இயற்றுக விரைவில் கூடி
இவை இவை தக்க என்று
முயற்சியைத் தொடர்ந்து செய்வோம்;
**முயற்சியில் முனைவோர் தம்மை**
**இயற்பெருந் தெய்வக் கையும்**
**இனிதழைத் தேகும் என்றார்.**

18 *"புதியதோர் உலகம் செய்யப்*
*புறப்படும் எழுச்சி வாழ்க!*
*முதியரும் இளையர் தாமும்*
*முன்னுற உழைத்தல் வாழி!*
*பதிவுறு நலங்கள் எல்லாம்*
*பயனுற ஓங்கி வாழி!*
*எதிர்வரும் எல்லாம் வாழி!"*
*என்றனள் பாவை நல்லாள்.*

* * *

*நூற்றல் நெய்தல்*
*பின்னல் தையல்*
*ஏற்றுச் செய்வார்*
*எண்ணி வந்தனர்;*
*கீற்றுப் பின்னக்*
*கூடை முடையத்*
*தோற்ற முற்றோர்*
*தொடுத்து நின்றனர்;*

5 *பின்னே நாமும்*
*வேறு வேறு*
*நன்னயப் பயிற்சிகள்*
*நாளும் பெறலாம்;*
*என்றிரு பயற்சிகள்*
*ஏற்றனர் முதற்கண்;*
*ஆவன வெல்லாம்*
*அமைத்தனர் கூடி*
*ஆக்குதல் மூலம்,*
*ஆக்குதல், விற்பனை*

நோக்கமும் கொண்டனர்;
நூலறி பண்பர்
மேலாண் திறத்தர்
இவரெனத் தேர்ந்து
கோலி முடித்தனர்;
கூட்ட முடிவில்
பாவை பூட்டிய
பற்பல அணிகளும்
யாவரும் அறிய
ஒவ்வொன் றாகக்
கழற்றினள்; திருமகள்
கண்டதும் என்னன
மிழற்றினள்; மேல்வரு
பணிக்கிவை உதவும்;
மேனி எழிலே
மேலென இருந்தநாள்
தானிவை இருந்தமை
தகுவதாம்; இந்நாள்
பயன்பொருள் அணியாய்ப்
பயன்படா திருத்தல்
நயனிலை ஆதலால்
நானிவை கழற்றினேன்;
திருவே பெறுவாய்
என்றாள்; திருமகள்
**ஒருமா மணிமே**
**கலையே உருவாய்த்**

தணியா உறுதியில்
நிற்கும் தக்கோய்!
துணிவா? தூய்மையா?
தொண்டா? எல்லாம்
தொடர்தொட ராகத்
துலங்கிடும் வளமா?
நடைபெற லுண்டோ?
‘நன்றிது’ என்றாள்
பெருமகன் பிச்சை
பெருந்தவ அடிகள்
இருவரும் அங்கே
எய்தினர்; என்னெனப்
பாவையைப் பார்த்தனர்
பரிவாய் உருகினர்;
யாவர் தம்மையும்
வெல்லும் ஒப்படை
இவையெனல் உண்மை;
இல்லா ஒன்றனை
எவர்தாம் இழப்பினும்
இழப்பெனல் ஆகா;
இருப்பதை வேண்டா
எனப்புறம் தள்ளல்
விருப்பினை வென்ற
விடுதலை வீறாம்.
என்றருள் அடிகள்
இனிதுற நோக்கத்,
தன்னுயிர்க் கிடுக்கணாம்
பொழுதிலும் பாவை

தன்னுயிர்க்கெதுவும்
தருதலைக் கருதாத்
திருமகள் செயலினும்
திருச்செயல் இதுவோ?
திருமகள் இளமையில்
தீயாய்ப் பொரியும்
காயலில் பட்டுக்
கண்ணதும் இடுங்கி
வாயதும் வறண்டு
தலையதும் தாழ்ந்து
முடிந்தனள் கொல்லோ
மூச்சினள் கொல்லோ
விடிந்தகால் தெரியும்
வெளியுறப் போமென
மருத்துவர் கூற
மாறாத் துயரொடு
திருமகள் வாழத்
தெய்வமே நீவிர்
அருளுக அருளுக
ஆவன செலவு
பெருகுதல் பற்றிக்
கருதுதல் வேண்டா
திருமகள் உயிரே
என்னுயிர் என்ற
பெருமகன் அடிகளார்
மருத்துவ மனையில்

*பாடு கிடந்து*
*பருவரல் இல்லென*
*வீடுபேற் றின்பம்*
*எய்தினர் போல*
*இருந்தநம் அடிகளார்*
*இணையறு செயலினும்*
*அரியதாம் ஒன்றோ*
*ஆற்றினேன் பெரிதாய்?*
*எனக்கணி கலமாய்*
*ஏற்ற இவற்றை*

***மனத்துற வதனால்***
*மாற்றினேன்; ஆனால்*
*ஏற்றுள அணிகள்*
*என்றும் அழியாப்*
*பேற்றுப்* ***பணிவும்***
***இன்சொலும்*** *எவர்க்கும்*
*துணிவு பெருக்கும்*
*துணிவும் தாழாத்*
*துணையாய் நிற்கும்*
*தூய்மையும் வாய்மையும்*

*மாறாத்* ***தொண்டில்***
*மகிழும் மாண்பும்*
*ஏறா மேட்டில்*
*ஏறிடும்* ***பார்வையும்***
*பேரா அணிகளாய்ப்*
*பெருந்தகை அடிகளார்*

*சீராம் சார்பினும்*
*செழுந்துணைத் திருமகள்*
*நீராய் உருக்கும்*
*நேயப் பேற்றினும்*

*பெற்றவை என்னின்,*
*பேசிய* ***அணிகள்***
***அற்றமை அணியே***
*என்றனள் பாவை.*
*இருவர், "தனியே*
*இவற்றைக் கழற்றி*
*ஒருவரும் அறியா*
*இடத்தில் நமக்குக்*
*கொடுத்திருப் பாளேல்*
*கெடுத்திட என்றுநாம்*

*அடுத்திடும் நிலையே*
*அமைந்திரா" தென்று*
*தமக்குள் பேசினர்;*
*தம்குறிப் பதனை*
*இமைப்பினுள் மறைத்தனர்*
*இயல்பாய் இருந்தே.*

* * *

*எந்தப் பொருளும் வீணின்றி*
*எந்தப் பொழுதும் வீணின்றிச்*
*சொந்தத் தொழிலின் மேலாகச்*
*சொல்லி வைத்த சொற்போல*

வந்து தொடங்கி முழுப்பொழுதும்
வாய்ப்பேச் சில்லா மூங்கையெனத்
தந்தம் கடமை புரிந்தார்கள்
தக்க பார்வை வேண்டாமல்.

2 நூலோ பஞ்சோ சிறுநாரோ
நொய்தின் நொய்ய அளவேனும்
மேலாய்க் கீழாய் வீணாகி
மேவும் வருவாய் குறையுமெனின்
வேலாய்த் தம்மைக் குத்துவதாய்
வேலை புரிவோர் எண்ணியதால்
**பாலாய்ச் சுரக்கும் தேன்பசுவே**
**பார்க்கும் பணியாம் எனக்கொண்டார்.**

3 மூலப் பொருள்கள் வந்திறங்கும்
மூடை பெட்டி கூடையெனச்
சாலப் புரிந்த வினைத்திறத்தால்
சரக்காய்ச் செல்லும் அவ்வாறே;
காலக் கொடையோ கார்மழையோ
கையில் காண வாய்த்ததென
ஆலைப் பாகாய் உணர்ந்தார்கள்
ஆக்கப் பெருக்கில் திளைத்தார்கள்.

4 ஒருமைப்பாடு காணாதார்
ஒன்றைத் திறமாய்ச் செய்யாதார்
பெருமைப் பேறு காணாதார்
பெரிய விரிவு புரியாதார்
வருநாள் எண்ணி வாழாதார்
வாழப் பாரார் தாமென்று
பொருமல் கொள்வார் தாம் கூடப்
பொறாமை கொள்ளச் செயல்புரிந்தார்.

5 விடியற் போதில் விழித்தெழுந்து
வீட்டுக் கடன்கள் குறைவின்றிக்
கடிதில் முடித்துப் பிறர்பிறரும்
கருத்தாய்ச் செய்யும் பணிக்காக்கி
துடியாய்த் துடித்து வேலைக்குத்
தூண்டல் இன்றி வந்திடுவார்;
முடியும் கிழமை இறுதியிலே
முயற்சி அளவு கலந்தறிவார்.

6 இன்ன செய்தால் பணிஇன்னும்
இனிதாம் என்று தெளிந்திடுவார்;
முன்னர் எடுத்த முயற்சியிலே
முட்டுக் கட்டை ஈதென்றும்
பின்னை முயற்சி இத்தகைத்தாய்ப்
பிறங்க வேண்டும் என்றென்றும்
சொன்னார் சொன்ன குறிப்பெல்லாம்
சுடரக் கண்டார் அடுத்தடுத்தே.

7 கையில் குழந்தை தவழ்குழந்தை
கனியும் மழலை பயில்குழந்தை
பையில் சுவடி கொளும்குழந்தை
கனிவாய்த் தத்தம் நிலைகளிலே
மெய்யாம் வளர்ச்சி மேல்நலங்கள்
மேவும் வகையில் **களிக்கூடம்**
செய்தல் தேர்ந்தார்; சிறப்பாகச்
செயலும் புரிந்தார் ஒருங்கிணைந்தே.

8 கொஞ்சும் திருவும் பாவையளும்
கொள்ளை கொள்ளும் பாவிசைத்து
நெஞ்சம் குளிர்ந்து நெக்குவிட
நேய வடிவாய்த் திகழ்கின்ற
பிஞ்சுத் தாத்தா பெரியவரும்
பிறப்பே தொண்டுப் பிறப்பென்னத்
துஞ்சும் போதும் அருள்துஞ்சாத்
தூய அடிகள் ஆயோரால்,

9 வளரும் போதே எவ்வெவர்க்கும்
வாய்த்தற் கரிய பேறுற்றார்;
தளரும் எண்ணம் தளர்ந்தோடத்
தாயர் தாமும் பிறர்பிறரும்
கிளரும் உள்ள நிறைவினராய்க்
கிடைத்த பேற்றை வியந்தனராய்
வளரும் குழந்தை தமைநோக்கி
வாழ்க இறைமை எனவாழ்ந்தார்.

10 செல்வம் பெருக்கல் **தேவைக்கே;**
செயல்கள் அனைத்தும் **சேவைக்கே;**
கல்வி அனைத்தும் **கனிவுக்கே**
கனிதல் அனைத்தும் **கடவுட்கே**
சொல்லல் அனைத்தும் **உயர்வுக்கே**
சுடர்தல் அனைத்தும் **உலகுக்கே**
வெல்லல் எல்லாம் **பொதுவுக்கே**
வெற்றி தோல்வி **நமக்கிலவே**

11 என்று பாடக் கேட்டொருத்தி
எல்லாம் சரிதான்; ஆனால்நம்,
ஒன்று பட்ட உழைப்புக்காம்
ஓங்கு பயனில் ஏதோஓர்
தின்று தொலைக்கும் அழிவதுவும்
திருட்டுத் தனமாய்ப் புகுந்துளதோ
நின்று நாமும் நினைத்தால்தான்
நிலைமை தெளிவாய் வெளியாகும்.

12 இருப்புக் கணக்கு, குறைந்திடலும்
எடுப்புக் கணக்கு, மிகுந்திடலும்
விருப்பு வெறுப்புச் சேராத
விழுப்ப மிக்க நிறுவனத்தில்,
நெருப்புப் பற்றல் இல்லாமல்,
நேரும் கரியும் உளதென்று
திருப்பிப் பார்த்தல் நன்றென்று
தேர்வோம் என்றாள் **சிலம்பாயி.**

13 பணிக்கு வந்தோர் எல்லோரும்
பணிக்கு வருமுன் கொண்டிருந்த
கணக்கு வழக்கு சொத்துகளும்
கடந்து வந்த ஆண்டுகளில்
இணைக்கிக் கொண்ட சொத்துகளும்
இருப்பும் எல்லாம் பார்த்தால்தான்
மணக்கும் உண்மை வெளியாகும்
மதிப்பீர் என்றாள்; ஓரிருவர்,

14 முகத்தில் முகமாய் முகம்பதித்தார்
முன்னும் பின்னும் விழிப்புற்றார்;
**அகத்தில்** புதைந்த வஞ்சம்போல்
**அகத்தில்** உள்ள பொருட்குவிப்பும்
நகத்தில் சதைபோல் ஒட்டியுள
நயக்கும் சொத்து வீடுகளும்
புகத்தம் வஞ்சக் கையாடல்
புலப்பா டாகும் எனநைந்தார்.

15 குடத்துப் பாலில் துளிநஞ்சு
கூடின் அந்தப் பால்முழுதும்
கெடுக்கும் நஞ்சாம் நிலையென்னக்
கேடு சூழும் முன்னாகத்
தடுத்துக் காத்தல் கடனென்றே
தக்க நால்வர் தமைத்தேர்ந்து
விடுத்தார் ஆய்வு மேற்கொள்ள;
வியர்த்தார் வஞ்சர் கேட்டதுமே!

16 கரவாய்ச் சென்றார் கையிருப்பைக்
காணா அளவில் மறைவாக்க;
இரவோ டிரவாய் எவ்வெவையோ
எங்கோ கடத்தி முடித்தாலும்
திரண்டு கிடந்த நிலையமைப்பைத்
திறமாய் மறைக்க வழியின்றி
அரண்டு கிடந்தார் ஆட்டமெலாம்
அடங்கிப் போனார் ஆம்பழிக்கே.

17 பாவை வந்தாள் நேராக;
பதுக்கல் மறைத்தல் ஒன்றின்றிப்
பூவைப் பறித்துப் படைப்பதெனப்
புகழைப் பெறலாம்; நும்முரிமை
யாவை அவற்றை அல்லாத
அனைத்தும் நீரே ஒப்படைப்பின்
பாவம் இல்லை; பழியில்லை;
பாராட் டெடுப்போம் எனச்சொன்னாள்.

18 முன்னர் இருந்த நிலையறிய
மூச்சுக் காற்றும் தேவையில்லை;
நன்னர் யானே அறிந்ததுதான்;
நயமாய் நடக்கத் தவிர்வீரேல்
பின்னர் வருந்திப் பயனில்லை
பெரிதாம் பழியைத் தேடாமல்
இன்னும் எவரும் வாராமல்
இனிது முடிப்பீர் என்றுரைத்தாள்.

# 11. அன்பின் வழி

*(உறுப்பினர்: சிலம்பாயி, பாவை, திருமகள், அருளடிகள், தங்கத்தாய், மகளிர் கூட்டம், பொதுமக்கள், காவல் துறையர்)*

1 *உணர்ந்தாள் ஒருத்தி; "உண்மையுற*
*ஒப்ப டைப்பேன்" நானென்றாள்;*
*"வணங்கித் தொழுதேன் உனை"யென்றாள்;*
*"வாரா துனக்கோர் பழி"யென்றாள்;*
*"இணங்கி உண்மை எற்பதனால்*
*இழிமை வாரா தெக்காலும்*
*குணத்தில் சிறந்தால் குறைமறையும்*
*கூடும் பெருமை வருமென்றாள்.*

2 *ஒருத்தி வெடித்தாள்; அவட்காக*
*ஒருவன் வந்தான்; பழிகாரி!*
*வருத்தி வாட்ட வருபிறவி!*
*வாழாப் பிறவி! நீ ஒழிவாய்!*
*திருத்திக் கொள்ளாத் திமிருனக்குத்*
*தீரா தென்றால் பார்த்திடுவோம்;*
*பொருத்தி வைத்த சிலம்பாயி*
*புழுத்துப் போவாள் பாரென்றாள்.*

3 பொல்லாப் பழியைச் சுமத்துவதைப்
பொறுத்துக் கொள்ளப் போவதிலை;
எல்லாப் பழிக்கும் ஆளாக்கி
எங்கள் குடியைக் கெடுக்கவரு
நில்லாக் காலி நீயேதான்;
நேர்ந்த படியாய்ச் செய்; நாங்கள்
புல்லாய் மிதிக்க விட்டுவிடோம்;
புலியாய்ப் பாய்தல் காண்குறுவாய்.

4 போவாய்! என்ன செய்வாயோ
போய்ப்பார்; நாங்கள் உங்கள்போல்
நாவால் பழியோம் பழிவழக்கு
நாளைப் பொழுதே தொடுக்கின்றோம்;
காவாய் அமைந்தாள் உங்கட்குக்
கள்ளி ஒருத்தி அவள்தானும்
வேவாள் விரைவில் இடிதலைமேல்
விழவே நிற்பாள் எனவெந்தாள்.

5 உண்மை உணர்த்தி உயர்வுணர்த்தி
உள்ளம் திருந்த வழிகாட்டல்
எண்மை இல்லை; எவ்விடத்தும்
ஏற்பார் அன்றி எதிரிட்டு
விண்ணைத் தொட்டுக் குதிப்பாரை
விளங்க வைத்தல் அரிதென்று
மண்ணை நோக்கி நடையிட்டாள்
மண்ணே முடிவென் றறியாரின்,

6 புன்மை நினைத்து; தன்னலமும்
பொய்யும் புரட்டும் உடையாரை
என்ன சொல்லி என்செய்வோம்?
எதுவும் கேளாக் கயமையரின்
கன்னம் உடைத்தல் அல்லாமல்
கண்ட வழியொன் றின்றென்றே
சொன்ன உரையை நினைந்தவளாய்ச்
சோர்ந்தாள் சேர்ந்தாள் அருளகத்தே.

7 திருவைக் காணாள்; அருளகத்தே
திகைப்பில் இருந்தாள்; அருளடிகள்
வருமுன் கேட்டார்; திருவுன்னை,
வாய்க்கு வந்த வாறெல்லாம்
உருமிப் பேசி அலைக்கழித்தார்
உதையும் போட்டார் எனக்கேட்டு
வெருவித் தேடி அவண்வந்தாள்;
விளைவை அறியேன் எனத் துடித்தார்.

8 யாரும் இன்றி நீதனியே
போதல், திருவும் உனைத்தேடி
யாரும் இன்றித் தனியேகல்,
இனிமேல் கூடா திங்குள்ளார்
யாரும் இலரோ உடனெய்த
எந்தப் பொழுதும் எதுவெதுவும்
நேரும் என்னும் விழிப்பதனை
நீங்கள் அறிக எனும்போது.

9 துடித்துக் கன்றைக் காணவரும்
தூய ஆவை அன்னதிரு
கடிந்து கொண்டாள் நீயாகக்
கருதிச் சென்றாய் எனக்கேட்டுக்
கடிதில் யானும் சொல்லாமல்
காண வந்தேன்; நீ வந்த
படியை அறிந்தேன்; "பொறுத்தருள்க;
பற்றும் பற்றை" எனநின்றாள்.

10 மகளிர் கூடிப் பலபேசி,
"மற்றை யோர்க்கும் பாடமெனத்
தகவாய் எடுக்கும் நடவடிக்கை
தளரல் ஆகா" தென்றுரைத்தார்.
நிகழ்வு தெளிவாய்க் கண்டறிய
நேர்ந்தும் விடுதல் தவறாகும்;
**பகலை இரவாய்க் காட்டுதலைப்**
**பாரா திருத்தல் தீதென்றார்.**

11 மகளிர்க் காகக் தோற்றுவித்த
மன்றம் இயக்கம் தொழிலகமும்
பகரும் சந்தை வாணிகமும்
பாடு படுவார் தமக்கென்றே
தகவாய் எழுதிப் பதிந்துள்ளோம்;
தக்க தெதுவோ அதைப்புரிய
அகலா உரிமை உங்களுக்கே
ஆகும் என்றார் அருளடிகள்.

12 அப்பால் நின்று நிறுவனத்தின்
ஆக்கம் பேணல் எம்கடமை;
வைப்பா எடுப்பா சம்பளமா
வருவாய்ப் பங்கா எதுவேனும்
முப்பால் ஆய எங்களுக்கு
முழுதாய் இல்லை; நீர்எடுக்கும்
தப்பா வழியில் யாமொன்றித்
தருவோம் வேண்டும் துணைஎன்றார்.

13 "தொடக்க நாளே இச்செய்தி
துலக்கா திருந்தோம்; ஏனென்றால்,
நடக்கும் பருவம் வரும்போதே
நடைக்காம் வண்டி தந்திடுவார்;
தொடக்கம் துணைமை தொடர்தலெனத்
துணிவு கொள்ளும் நாள்வரையும்
எடுக்கும் முயற்சிக் கெல்லாமும்
இணைந்து நிற்பார் எனச்சொல்ல.

14 "நடக்கும் போதே இடறியுளோம்
நலிதல் இன்றிச் சென்றிடவும்
கடக்கும் தொலைவு கடந்திடவும்
காணும் நலங்கள் கண்டிடவும்
அடக்கி ஒடுக்கி ஆம் வழிகள்
அனைத்தும் காட்டல் பொறுப்பென்று
நடக்கும் உவமை விளக்குதலால்
நாடி அருள்க" எனமொழிந்தார்.

15 "மாதர் கூடி முடிவெடுங்கள்;
மற்றவ் வழியே தொடர்ந்திடலாம்;
**யாதும் யார்க்கும் துயரின்றி**
**யாவும் நலமாய் முடிந்திடவும்**
**மோதும் வழியை விலக்கிடவும்**
**முயல்வோம்"** என்றார் அருளடிகள்;
தீது நீங்கச் சிலம்பாயி
திறமாய்க் கூற முன்வந்தாள்.

16 வாங்கல் சுரண்டல் விற்பனையில்
வந்த சுரண்டல் பிறவழியால்
யாங்கள் கூடி எடுத்துள்ள
ஆள்கள் கூலிச் சுரண்டலெலாம்
நீங்கல் இன்றி யானறிவேன்
நேரில் செல்வோம் எல்லோரும்;
வீங்கி வெடித்தால் முற்றுகையே
வேண்டும் தொடர்வோம் என்னென்றாள்.

17 ஏற்ற வழியே இதுவாகும்;
ஏற்றால் எவர்க்கும் துயரில்லை;
மாற்று வழியை வேண்டாமல்
மறந்தும் தீமை இல்லாமல்
போற்றிக் கொள்வோம்; "சிலம்பாயி
புகலும் குற்றம் சான்றோடு
சாற்றல் கடனாம்" எனத்திருவும்,
சால்போ டுரைத்தாள்; 'சரி' என்றாள்.

18 காவல் துறையைக் கைக்கொள்வாள்;
கரவாய்ப் பதுக்கி வைத்திடுவாள்;
ஆவல் மிக்கு முறைமன்றத்
தலைக்கச் செல்வாள் அட்டியிலை;
நோவச் செய்தல் வல்லளவள்
நூறு பேரும் தடியெடுக்கக்
கூவ வல்லான் கூடியுளான்
கொலைக்கும் அஞ்சான்; அதனாலே,

19 அச்சம் உடையார் வரவேண்டா;
ஆர்த்துப் பேசிச் சண்டையிட
இச்சை உடையார் வரவேண்டா;
என்ன வரினும் வருகஉயிர்
துச்சம் என்பார் ஒருங்காகத்
துணிந்து செல்வோம்; துணைநமக்கு
மெச்சும் அறமே ஆமென்றாள்
மேலாம் அடிகள் சிந்தித்தார்.

20 அறத்திற் குரிய அன்பதுவும்
அமைந்து வீறு காட்டுவதாம்
மறத்திற் குரிமை பூண்பதுவும்
மாறா இயற்கை யாமென்னச்
சிறக்க மொழிந்த **சீர்த்தியுரை**
செழிக்க நினைந்தார்; எல்லோரும்
பறக்க வானில் அரைவட்டப்
பறவை போலக் கிளர்ந்தார்கள்.

21 தங்கத் தாயின் முற்றத்தில்
தாங்கும் ஒலியே இல்லாமல்
பொங்கு கடலும் அலையின்றிப்
போகும் அமைதி பூண்டதென
நங்கள் கருத்தை வெளிப்படுத்தும்
நன்றாம் இறைமை ஈதென்றே
தங்கி யிருந்தார்; உண்ணாமை
தாங்கு நோன்பு மேற்கொண்டே.

22 சொல்லி வைத்த காவலரும்
சூழ்ந்து நின்றார்; ஊராரும்
சொல்லல் இன்றித் தெருவடைத்துச்
சோரா திருந்தார்; நிலைமையிது
நல்ல படியாய்த் துயரின்றி
நடத்தல் வேண்டும் எனஎண்ணி
அல்லல் கருதா அருளடிகள்
அமைந்து நின்றார் பகல்முழுதும்.

23 பொழுது வீழும் போதத்தும்
போவார் ஒருவர் இல்லாமல்
அழுது வழியும் குழந்தைக்கும்
அங்கே அமைவு செய்திருந்தார்;
தொழுது வேண்டிச் சொல்கின்றோம்;
தொழிலின் கழுத்தை அறுக்காதீர்!
முழுதூர் நலமும் முற்றொடுக்க
மூண்டு கேடு செய்யாதீர்!

24 எழுதும் கணக்கு தங்கத்தாய்
எழுத்தில் உள்ள தெங்களிடம்
முழுதும் படித்தோம்; அத்தனையும்
மொத்தப் பொய்யே வடிவாக
எழுதப் பட்ட கணக்காகும்;
எவரும் ஒருவர் இருப்பார்மேல்
எழுதப் படாத கணக்கதுவாம்
எண்ணிச் செய்க எனச்சொன்னார்.

25 அடைந்தால் போவோம் எனநினையீர்!
அலைத்தால் போவோம் எனநினையீர்!
உடைதல் ஆவோம் எனநினையீர்!
ஒலிப்போம் என்றும் நினையாதீர்!
துடைத்துப் போட்ட பஞ்சாகத்
தூக்கி எறிய நினையாமல்,
துடைக்க உங்கள் பழியதனைத்
துணிவாய் நினைப்பின் நலமாமே!

26 மக்கள் கொதிப்பை மதியோடு
**மதியார், மதியார் ஆகாராம்.**
**மக்கட் பொதுவைப் பகையாக்கி**
**வாழ்ந்தார் எவரும் வாழ்ந்ததிலர்;**
மிக்க சாவிப் பிதுவில்லை
மேலை நலத்தை எல்லவர்க்கும்
தக்க வைக்கும் தகவென்றே
தயையால் சொன்ன சொல்லென்றார்.

27 நூற்றுக் கணக்கில் முற்றத்தில்
நோன்பு கிடப்பார் தமைச்சூழ
ஊற்றுச் சுரப்பாய் ஊர்முற்றும்
உற்றுப் பார்த்துக் கொதித்திருக்கச்
சோற்றுக் கலங்கள் நிறைந்திருந்தும்
சோரத் தனமாய் உண்ணற்கும்
ஏற்று வாரா திருந்தாரை
ஏசிப் பேசற் கென்செய்வார்!

28 திட்டல் முட்டல் இல்லாமல்
தெருவில் கூடி ஊமையெனக்
கட்டிக் கிடப்பார் தமையெந்தக்
காவல் கடமை காக்கவெனத்
தட்டிக் கொட்டிப் பார்த்தற்குத்
தக்க தொன்றும் இல்லாமல்
பொட்டுப் பொட்டென் றிரவெல்லாம்
பொறுமி நின்றார் காவலரே!

29 விடியும் போதில் ஒவ்வொருவர்
வெளியிற் சென்றார்; உடனேயே
கடிதில் வந்தார்; கலங்காமல்
களிப்பாய் அமைந்தார்; கதவதுவும்
வடிவாய் ஒருநாள் திறவாமல்
வாயில் பக்கம் பாராமல்
முடிதல் ஆக இப்படியே
**முடியின்** எவரும் **முடிவாரேல்**

30 என்ன சொல்லி என்செயலாம்?
எடுக்கும் முடிவு யாதென்று
சொன்ன அளவில் அல்லாமல்
சொல்லும் தீர்வு வாயாதாம்!
என்னக் கருதித் தங்கத்தாய்
எழுத்தைக் காட்டி மெய்ப்பிக்கச்
சொன்ன போதில் விதிர்ப்புற்றாள்;
'சொல்லும் உண்மை;' நலமென்றார்

31 உரிமைப் பாவை தனையழைத்தாள்;
ஒன்றித் திருவும் உடன் சென்றாள்;
பரிவாய் அழுதாள்; "எனைப்பொறுப்பீர்
பார்ப்பேன் கணக்கை இன்றைக்கே;
சரியாய்த் தீர்ப்பேன்; **என்குழந்தை**
சாவக் கிடக்கும் நிலையுற்றான்;
உரியார் தாமும் ஊரிலிலை;
உங்கள் முடிவாம்" என்றாளே!

32. பாவம் கேட்க வந்தோமா?
பாவம் செய்ய வந்தோமா?
பாவம் தங்கம் உன் செய்கை;
பகலே இதனை எமக்குரைத்தால்
யாவும் யாமே செய்திருப்போம்;
நங்கள் பேச்சில் இக்குழந்தை
நாவும் அறியாப் பங்கதற்கோ
நாமும் இங்கே இருந்துள்ளோம்?

33 என்றார்; ஓடித் திருப்பாவை
எடுத்தார் ஒட்டம்; மருத்துவத்தில்
ஒன்றி நின்றார்; தங்கத்தாய்
ஓவென் றழுதாள்; எல்லாமும்
நன்றாய் முடியும் பொறுத்திடுவீர்
நானும் மாந்தப் பிறவியென
இன்றே உணர்ந்தேன்; இதில்மாற்றம்
இல்லை என்றாள்; செலலுற்றார்.

34 நேற்றைப் பகலே குழந்தைக்கு
நேர்ந்த மருந்து தந்திருப்பின்
தோற்று துயரம் இல்லாமல்
தோய்ந்த நலத்தில் இருந்திருக்கும்;
போற்றும் காலம் நோயர்க்குப்
பொருந்தும் மருந்தென் றறிதற்கு
நூற்றில் ஒருவர் தாம்கூட
நுவலற் கில்லை என்றுரைத்தார்.

35 உள்கி வருந்தி நிகழ்ந்ததனை
உருகி எண்ணிப் பரிவுற்றார்;
வெள்கி இதற்குத் தீர்வறிய
வேண்டும் திறந்தான் நமக்கில்லை;
தெள்கும் அறப்போர் அமைதிப்போர்
தேர்ந்தும் நேர்ச்சி ஈதென்றால்,
நள்கும் போராம் வன்முறையால்
நண்ணும் தீமை என்சொல்வாம்?

36 என்ன வருந்தும் போதத்தில்
இறைமை வடிவாம் அருளடிகள்
துன்னி நின்றார்; துயர்கேட்டேன்
துடித்தேன் நினைத்த தெதுவோதான்!
முன்னி நின்ற தெதுவோதான்!
முடிவு நன்றே குழந்தையதும்
இன்ன லின்றி உய்ந்ததெனும்
இனிக்கும் சொல்லே நிறைவென்றார்.

37 சாலைப் போக்கில் மகிழ்வுந்தில்
சாய்ந்த போது நெடுமரத்தின்
காலை வீழ்த்தி முழுதாகக்
கடக்க விடாமல் தடைசெய்து
மேலைத் தடையைக் கடந்தெவரும்
மேவற் கின்றித் தடுத்தார்கள்
கூலித் துயரால் துணுக்குறுமோர்
சுடரைத் தானும் விடலின்றே!

38 தடுத்தார் உந்தில் உள்ளவர்கள்
தாமே தடுப்புக் கட்டியவர்
துடித்துத் துள்ளற் கஞ்சியவராய்த்
தொழுதும் விடாமல் எம்தலைவர்
அடுத்தால் அன்றி அவர்சொல்லி
ஆணை கொடுத்தால் அன்றியிவண்
விடுதற் கில்லேம் என்றார்கள்
விழிநீர் பெருக்கி அழுதுள்ளேன்;

39 *தலைவன் ஆணை இம்மகளின்*
*தவிப்பை மாற்றி அமைத்திடுமோ?*
*நிலையில் குலைந்து நடுநடுங்கும்*
*நிலையைக் காக்க உதவிடுமோ?*
*அலைப்பில் குழந்தை தாய்தாமும்*
*ஆவி இழப்பின் ஆரளிப்பார்?*
*இலையோ இரக்கம் எண்ணுநலம்*
*இலையோ என்று நைந்துள்ளேன்.*

40 *உண்ணா நோன்பு மேற்கொண்டோம்;*
*உண்மை உணர்த்தல் ஒன்றேதான்*
*எண்ணி நாமும் செயலுற்றோம்;*
*என்ன தீமை அகநெருப்பாய்*
*நண்ணி யுள்ள திதைஎண்ணின்,*
*நாட்டில் நிகழும் வன்முறையைப்*
*பண்ணி நிற்போர் தாமேயும்*
*படுதல் இன்றி உய்வாரோ?*

41 ***வெறியால் வெறியை அழித்திடுவார்***
***வெல்லார் என்றும் மற்றொருவர்***
***வெறியால் அழியத் தூண்டியவர்***
***வெறிக்கே பலியாய் முடிந்திடுவார்;***
*நெறியே செல்வார் தமக்கேயும்*
*நேரும் நலங்கள் இல்லாமல்*
*வெறியால் அழிவே நேர்ந்துவிடும்*
*வேகும் தீயால் நீறாவார்.*

42 *நீராய் அமையத் தெரிவாரோ?*
*நீர்மை யுடையார் நெறியறிவார்.*
*போராய் நிற்கும் நிலைக்கண்ணும்*
*பொறுமை காப்பார்; பகைவர்க்கும்*
*சேராத் துயரம் சேர்தலுறின்*
*செய்வர் பெரிய செந்தண்மை*
*நேராய் நீவீர் செய்ததுதான்*
*நெஞ்சம் குளிரும் செயலென்றார்.*

43 ***அடிகள் நும்மை அடுத்திருக்கும்***
***அடியேம் யாமும் இதுவன்றிக்***
***கொடிய துயரம் எமையடுத்துக்***
***கொல்ல வரினும் யாம்செய்யும்***
***முடிவொன் றில்லா அருள்நெறியை***
***முன்ன லன்றிப் பிறவழியில்***
***அடிகள் வைக்க அறிவேமோ?***
***அடிகள் அருளைப் புரியேமோ?***

44 ***தாக்க வந்த தடியனையும்,***
***"தம்பி வருக என்றழைத்துக்***
***காக்க வந்த காவலனே,***
***கருதி என்னைத் தாக்கற்கே***
***ஊக்கி எவரும் விட்டாரோ?***
***உண்மைத் தொண்டன் நீயேதான்***
***தாக்கி அழித்துத், தருகொடையைத்***
***தாங்கி மகிழ்க" என்றுரைத்த,***

45 **குமண வள்ளல்** நீராகக்
கொஞ்சும் இளமைப் பருவத்தே
அமர்ந்து கேட்ட வரலாற்றை
அடியேன் என்றன் ஆவியுடல்
சுமந்து திரியும் காலமெலாம்
சொல்லிச் சொல்லி மகிழ்வேனை
அமைந்து புகழ்தல் அழகேயாம்!
அடிகட் கியற்கை இஃதென்றாள்.

## 12. உருகிய உருக்கு

*(உறுப்பினர்: பிச்சைப் பெரியவர், தங்கத்தாய், அவள் குழந்தை, சிலம்பாயி, அருளடிகள்)*

1 *நிகழ்ந்தது நினைந்தார்; மேலும்*
*நிகழ்வதும் நினைந்தார்; பின்னர்*
*நிகழ்வன மாறொன் றின்றி*
*நிகழ்வது கருதித் தங்கள்*
*அகமுறத் தொழிலில் ஊன்றி*
*அயர்வறச் செய்த லானார்;*
*மகவொடும் தங்கம் வந்தாள்*
*வாரமொன் றாய போதே.*

2 *நிறுவன அடிகள் பாவை*
*நிறைதிரு பெரியர் நால்வர்*
*செறிவுற இருந்த போது*
*சேர்ந்தனள்; கரவில் கொண்ட*
*உறுபெருந் தொகையில் உள்ள*
*தொகையினை ஒன்று கூட்டிப்*
*பெறுமுறை வழங்கி, வந்த*
*பெற்றிமை உரைக்க லானாள்.*

3 *இளமையில் மணந்த கேள்வன்*
*இறந்ததும், பிள்ளை யோடு*
*வளமையில் இருத்தல் கண்டு*
*வயமுறு வஞ்சன் துன்னி*

உளமுறச் செய்து சொத்தை
உறுஞ்சிய தோடு மன்ற
வளமதும் சுருட்டு மாறு
வழிவகை சொன்னான் கெட்டேன்;

4 அன்னவன் சொன்ன வாறே
ஆக்கிய வஞ்சத் தேட்டை
இன்னதென் றில்லா வாறாய்
இறைத்தனன்; தீய கூட்டம்
சொன்னவா றெல்லாம் சொத்துத்
தொலைந்திட மகளிர் மன்றம்
துன்னுறும் என்று முன்னே
துடித்தனன் ஓடிப் போனான்.

5 கரவினில் கொண்ட எல்லாம்
கரைந்திட மேலும் மேலும்
வரவினில் கருத்தே யாகி
வாட்டிய போதில் என்னை
விரவிய சிலம்பி குற்றம்
விளக்கினாள்; விலகி உண்மை
நிரவிய வழியில் நில்லேன்;
நெறியதும் அறிந்தேன் இந்நாள்.

6 உள்ளதை ஒழிதல் இன்றி
ஒப்படைத் திடுவான் வந்தேன்;
கொள்ளையைக் கொள்ளை தந்த
கொடியவள் என்னை நீங்கள்
தள்ளுதல் இன்றிக் காப்பீர்!
தலைதனக் கிறுதி யேனும்
எள்ளுவ புரியேன் என்றாள்;
இனைந்தனர் உருகி நின்றார்.

7 *பெரியவர் பிச்சை கண்ணீர்*
*பெருக்கிய நிலையில் தேம்பி*
*எரியிடை மெழுகே என்ன*
*உருகினார்; தாயு மானார்*
*உருகிநின் றோது பாடல்*
*உந்திய தாகத் தாமே*
*மருவிய அன்பால் பாடி*
*மறுகினார் வழக்கம் போன்றே.*

8 *"அன்புநெறி அறியா என்னை*
*அறியாத பக்கு வத்தே*
*என்னுமொரு சுகவா ரிப்பா"*
*இசைத்தனர்; விம்மி விம்மி*
*நின்றனள் தங்கத் தாயும்;*
*நெகிழ்ந்தனள் புதிது தோன்றி*
*இன்றவள் வந்தாள் என்ன*
*எண்ணினள் புதியள் ஆனாள்.*

9 *இங்கினிப் பணியும் வேண்டா*
*என்றிட வந்தேன்; ஆனால்*
*இங்கினி வாழத் தக்க*
*இயற்கொடை ஈதோ என்று*
*தங்கிய தாயு மானார்*
*தந்தருள் பாடல் காட்டிப்*
*பொங்கலாய் வழங்கி யுள்ளார்;*
*புரிந்தனென் வாழ்வேன் என்றாள்.*

10 *ஐந்துநாள் அழுதேன்; பின்னர்*
*அழுதலால் கரையும் தீமை*
*நொந்துளார் தமக்குத் தாமே*
*நோய்தவிர் மருந்து வல்லார்*

வந்துளர் என்னத் தேறி
வந்தனென்; அருளும் பெற்றேன்;
இந்தநற் பேற்றுக் கெல்லாம்
இச்சிலம் பாயி மூலம்.

11 இடித்தனள் சொன்னாள்; யானும்
என்னெனக் கேட்டேன் இல்லை;
குடித்தனக் கேடு நீங்கிக்
குழந்தையும் இனிது வாழப்
பிடித்திடும் அடிகள் தம்மை;
பெறலரும் பேறாம் என்றாள்.
படித்தவள் சொன்ன எல்லாம்
பாவியேன் கேட்டேன் இல்லை;

12 கெடுப்பதே வாழ்க்கை யானோன்
**கேட்டவை, கேட்ட** வேனும்
கொடுப்பதே வாழ்க்கை யான
குற்றமே பேயாய் மாற்றி
வடுப்படச் செய்த தென்ன
வருந்திநான் தப்ப மாட்டேன்;
தொடுத்தொரு மாசு தோயாத்
துலக்கமே கழுவாய் ஆகும்.

13 என்மகன், அடிகள் தத்தாய்
இருந்துசீர்க் கல்வி கற்பான்;
என்பணி இறைமைத் தொண்டாய்
இயைந்திடும் தூய்மை பேணல்
முன்புள தோட்டம் தோப்பு
முறையுறப் பேணிக் காத்தல்
இன்புற மலர்தொ டுத்தல்
இறைவழி பாடு செய்தல்.

14 சமையலில் கருத்து வைத்தல்
சஞ்சலப் படுவோர்க் காய
அமைவினை புரிதல் என்ன
ஆவன புரிவேன்; மாதர்
தமையவர் அழைத்தால் அன்றித்
தவறியும் காணேன்; யார்க்கும்
சுமையென ஆகேன் என்றாள்
சுடர்ந்தெழு வாய்மைத் தங்கம்.

15 இசைவளம் கொழிக்கும் பாடல்
இன்பெருந் தென்ற லோடும்
அசைந்தெவர் செவிக்கும் பாயும்
அமிழ்தெனப் புகுந்த காலை
திசையுற வணங்கித் தாவிச்
சிலம்பியும் வந்து நின்றாள்;
பசைவுறத் தங்கத் தாயைப்
பனித்திடத் தழுவிக் கொண்டாள்.

16 கனவுகள் வந்து போகும்
கலைந்துபோம் கனவும் உண்டு;
நினைவினில் அகலா நீர்மை
நிலைபெறு கனவும் உண்டு;
முனமிவண் கொண்ட வாழ்க்கை
முடிந்தது புதிய பேறாய்
வனைகுவம் வாழ்வுச் சீர்மை
வாழ்கென வாழ்த்திச் சொன்னாள்:

17 *பிச்சையார் பாட லெல்லாம்*
*பேசிய வீடு பேற்றை*
*இச்சையாய் உறுக என்றே*
*ஈவதே யாகும் ஐயோ!*
***விச்சையில் வருவ தாமோ***
***விழுமிய இன்ப வெள்ளம்!***
*மெச்சிட வல்லேன் அல்லேன்*
*மேலொரு வேட்கை சொல்வேன்.*

18 *ஒவ்வொரு நாளும் காலை*
*ஓதுக தாயு மானார்*
*செவ்விய பராப ரப்பா*
*செவியினில் இன்ப வாரி*
*கவ்விய வடிவ ராகிக்*
*கடமைகள் புரிதல் வேண்டும்*
*இவ்வகை அருள்க என்றாள்!*
*இசைந்தனர் அடிகள் தாமே!*

# 13. ஒருநாள்

*(உறுப்பினர்: அருளடிகள், வருவோர், போவோர், அருள் மலர், அங்கயற்கண்ணி, திருமகள், பாவை, பிச்சை, சிலம்பாயி)*

*அருளகம் நாடி*
*ஆர்வமாய் வருவார்*
*பெருகினர்; வெள்ளப்*
*பெருக்கென லாயினர்;*
*விழுந்தது; எழுந்தது;*
*எழுந்தது விழுந்தது*
*முடிந்தது; விடிந்தது;*
*விடிந்தது; முடிந்தது*

*எனவோ ஆயின*
*பொழுதுகள்? நாள்கள்?*
*நினைவு கூரும்*
*நிகழ்வுகள் எழுதின்*
***ஒவ்வொரு நாளும்***
***ஒவ்வொரு நூலாய்,***
***செவ்வியல் வளமாய்ச்***
***சிறந்திடல் மெய்யாம்.***
*அடிகளீர்! வாழ்த்தி*
*அருள்கென வருவார்!*

படியுறத் தோய்ந்து,
பணிந்தருள் பெறுவார்!
ஒருவரா? இருவரா?
வரிசை வரிசையாய்!
ஒருபொழு தென்ன
வருபொழுது துண்டா?
என்றும் திருநாள்!
இனிய திருநாள்!
"நன்றெமக் குற்றது
நன்றியெம் அடிகள்:
அன்றெமக் குதவிய
ஆக்கப் பேற்றால்
இன்றெமக் கெய்திய
பேறுகள் இவைகாண்"
கென்று மொழிபவர்
இனிய வருகையும்,
பார்த்திட வந்தேம்;
பயிற்சியில் இவரைச்
சேர்த்திட வந்தேம்;
செறிவுறும் ஆணையால்
சேர்ந்திட வந்தேம்;
செய்தவப் பேறாம்
மன்றம் மண்டபம்
ஒன்றிக் களித்திட
உற்றனெம்; மாறி
ஊர்செலும் நிலைமை

பெற்றமை உரைக்கப்
பேணி வந்தனெம்;
என்பவர் நிலையும்
எவரெவர் தாமும்
நன்றுறக் கேட்டும்
நல்லுரை பெற்றும்
சென்று வருதலின்
செப்பமும் ஒழுங்கும்
அமைதி போற்றும்
அருமையும் பெருமையும்
தமைத்தமைப் பேணும்
தகைமை போல
வந்தவர் தமக்கெலாம்,
வரிசை வழாமல்
சிந்தை சிறந்திடப்
பருகவும் உண்ணவும்
பரிந்தருள் தாயெனப்
பாலித் திடவும்,
புரிந்தருள் அமுத
சுரபியாய் எண்ணவும்,
நாடுவோர் தமக்கெலாம்
நாளும் வாய்த்திடும்,
வாடுதல் இன்றி
வாழ்வோர் தாமும்
வருமொரு பேறாய்
வழங்கிய உணவை,

அருந்தி மகிழ்தல்
அருளேண் ஈதெனக்
கருதிய பேறெனக்
கமழும்: அடிகள்
‘**வைகறை**’ வருமுன்
‘**வைகறை**’ விடுத்து,
மெய்யுற இறைமை
மேலருள் போற்றிக்

காலைக் கடன்கள்
கடிதுற முடித்துத்
தோட்டம் தோப்பு
துரவெனக் கண்டு
கூட்டும் பணிகள்
கூர்ந்தெணி எழுதி
ஏழு மணியில்
ஏற்கும் ஊணதை
வாழ அருந்தி
வருவோர் தமக்கெலாம்

**அருளகம்** ஆகிய
அருளகம் புகுந்தால்
பொருளுறு பொழுதாய்ப்
பொருந்து நண்பகல்
பன்னிரண் டாகப்
பரவி வழிபடும்
இன்னியல் பொழுதாய்
இலங்கிடும்; வந்தவர்

இருந்தவர் தம்மொடும்;
இணைந்திருந் துண்ணல்

திருந்திய **அறிதுயில்**
தெளிகெனச் சொலல்போல்
ஒருமணி யமைந்து
பிற்பகல் இரண்டில்
அருளக இருக்கை
அமைத லுற்றிடின்
துறைதுறை வரிசையில்
தத்தம் பணிகளை
நிறைவுறச் செய்யும்
கடமையும் நேய

மயிலும் மானும்
பறவையும் பிறவும்
பயிலக் கண்டு
பரிவுடன் பேணி
காணுவ கண்டு
பேணுவ புரிந்துபின்
ஏணுற நடந்துடன்
இயைந்தவை இவற்றை
இவ்வணம் புரியின்
எழிலாம் என்றதைச்

செவ்வணம் புரியத்
திட்டமும் தீட்டி
நாளை எனாமல்
வேளையே புரிய

*வேண்டிய ஆணை*
*விதித்தனர் செல்வார்;*
*ஊண்பொழு தேழென*
*உண்டு முடித்தபின்*
*ஓதுதல் எழுதுதல்*
*ஒருமுகப் பாட்டொடு*

*மீதுறு கடமைகள்*
*மேல்வர முடிக்கும்*
*வகைகளை எண்ணி*
*வழிபாட் டொடுமணி*
*பத்தள வுறக்கம்*
*பயின்றிடு வழக்கமாம்.*
***ஒருநாள் பணிதான்***
***ஒருநாள் பணியா?***
***எழுநாள் பணியும்***
***இதனை ஒப்பதோ?***

***வாழ்வில் எவர்க்கும்***
***ஒருநாள் இந்நாள்***
***வந்திடல் உண்டோ?***
*வருமோர் நாளில்,*
*அப்பனை இழந்தேம்;*
*அன்னையை இழந்தேம்;*
*ஒப்பிய இருவரும்*
*இழந்தேம்; மற்றும்*
*சூழலும் இல்லேம்;*
*சுற்றமும் இல்லேம்;*

*வாழலும் இல்லா*
*வகையிலா வாழ்விேனம்;*
*கல்வி நிலையம்*
*காலடி, வைப்பான்*
*செல்வியைக் கொணர்ந்தேம்;*
*செய்தி ஈதென*
*வேண்டி நிற்பவர்*
*வேண்டுகைக் கெல்லாம்*
*பேரருள் சுரத்தல்*
*ஒன்று மட்டுமோ?*

*நேருற வந்து*
*நின்றனர் ஒருநாள்:*
*பெரியவர் நால்வர்;*
*பெற்றதாய் ஒருத்தி;*
*உரியதாம் குழந்தை*
*ஒன்றாய்; பெற்றதாய்*
*கண்ணீர் வழியக்*
*கதறி அழுதாள்;*
*பெண்ணின் பெருமை*
*பேசிய இந்த*

*மண்ணின் நிலைமை*
*மாய்ந்ததற் கழுதாள்;*
*இந்தக் குழந்தை*
*என்றன் குழந்தை*
*சொந்தக் குழந்தை*
*ஐயா உண்மை!*

*எடுத்த குழந்தையோ*
*எவரோ எனக்குக்*
*கொடுத்த குழந்தையோ*
*இல்லை தெய்வமே!*

*பெற்ற பிள்ளையைப்*
*பிரிக்கப் பார்க்கிறார்;*
*உற்ற உயிரை*
*விடினும் விடுவேன்;*
*பெற்ற உயிரை*
*விட்டிட மாட்டேன்;*
*கட்டிய மனைவியை -*
*பெற்ற பிள்ளையை -*
*விட்டிவள் அப்பன்,*
*ஓடிப் போனான்;*

*எட்டு மாதமாய்*
*எனக்குறு துயரம்*
*செத்துச் செத்துப்*
*பிழைத்தலே ஆகும்;*
*பெற்ற பிள்ளையை*
*விட்டுயான் என்னைப்*
*பெற்றவர் வீட்டைச்*
*சேர்ந்திட வேண்டுமாம்!*
*பிள்ளையைக் கொண்டு*
*போகிறேன் என்றால்*

*கொள்ளியால் சுட்டதைக்*
*கூடிய கூட்டமே*

கூறித் தடுத்தும்
அசைத்திட வில்லை!
**நாறிய புண்ணை**
**நைய மிதித்திடும்**
**இவர்கள் சுற்றமாம்!**
இவர்தாம் மாமனார்;
இவரெலாம், இவர்வழி
நிற்கும் எடுபிடி;

"உன்னால் ஓடினான்
என்மகன்; மீட்டல்
உன்கடன்; இலையுனை
ஓட்டல் எம்கடன்;
பிள்ளை இருப்பின்எம்
பிள்ளை வருவான்;
பிள்ளையை விட்டொழி;
பிள்ளை வேண்டுமேல்
வளர்ப்புக் கூலியாய்
வைத்திடு சுளையாய்

ஆறா யிரத்தை;
அதன்பின் இவளொடும்
ஆறோ குளமோ
அழிந்துபோ" என்றனர்;
ஆங்கொரு நல்லார்
அடிகளை அறிந்தவர்
"தீங்ககன் றிவனொடும்
திடமுற வாழ்ந்திட

அருளூர் செல்க
அடிகளைக் காண்க
இருளெலாம் தொலையும்
இறையருள் எய்தும்"
என்றனர்; இவர்களும்
"எங்களுக் குரியதைக்
குன்றியும் குறையா
தளித்திடின் ஒப்புவேம்
என்றனர்; வந்தனர்;
என்றாள்; அடிகள்
**தெய்வமே ஏவ**
**வந்தனை; அம்மா!**
**தெய்வம் காக்கும்**
**திகைப்பெதும் வேண்டா!**
**ஏனெனக் கேளேன்!**
**எதற்கெனச் சொல்லேன்!**
**ஊனுயிர்க் குதவல்**
**ஊனுயிர் கடமை;**
**யானது செய்தல்**
**என்கட னாகும்;**
என்றனர் கொடுத்தார்;
எடுத்தனர் தொகையை;
நன்றென வாங்கி
நடந்தனர் நால்வரும்;
ஒன்று செய்க:
"உயிர்க்கொலை ஒப்பவை

*என்றும் கருதீர்!*
*ஈதென் வேண்டுகை"*
*என்றனர் அடிகள்!*
***எண்ணிப் பார்த்தனர்!***
***ஆறா யிரமும்***
***உளதா எனவே!***
***மாறா உளங்கள்***
***மாறுதல் எந்நாள்?***
*வந்தாள் திருமகள்*
*வாரி அணைத்தாள்!*
*என்னின் நல்லாய்*
*இனிய தாயொடும்*
*உள்ளாய்! உள்ளவை*
*எல்லாம் உள்ளாய்!*
***தாயு மானவர்***
***தளிரடி நிழலாய்***
***ஆயவர் அனைவரும்,***
***சேயவர்; செய்யவர்;***
*பெற்ற பேற்றொடும்*
*உற்ற பேறதும்*
*உற்ற தாலே*
*உடன்பிறப் பானாய்!*
*அடிகளே! பாவை*
*ஐயா இருவரும்*
*பிடிபடா அன்பில்*
*பேசி வருகிறார்;*

சேய்க்கும் தாய்க்கும்
செம்பெயர் சூட்டல்
வாய்க்கும் அமிழ்தாம்;
சேய்க்கு நான் பெயரிடத்
தாயு மானார்
அருளுக" என்றாள்;
நல்லதே என்றார்
நயனுறும் அடிகள்!
சொல்லுவேம் மும்முறை
வாழ்த்துக என்றாள்;
"**அருள்மலர்** வாழ்க"
அருள்மலர் வாழ்க
"அருள்மலர் வாழ்கென"
அமுதம் பொழிந்தாள்!
அடிகள் முதலோர்
அதனை மொழிந்தனர்;
பாவை இயம்பினாள்;
பரிவுகூர் அடிகள்
தேவை எனக்கோர்
ஆணை; அருள்மலர்
தாய்பெயர் வைப்பேன்
தயைகூர்ந் தருள்கெனப்
"பாவை பெரும்பெயர்
நீ, வை என்றதும்
**அங்கயற் கண்ணி**
அம்மை பேரெனப்

பொங்கினார் பிச்சைப்
பெரியவர்; அடிகளே!
எனக்கும் இனியதோர்
பங்கினை அருள்க!

மனத்திற் கினிய
குமரனும் அவனே;
குருவனும் அவனே;
பரனும் அவனே;
என்ன வாழ்ந்த
இனியவன் **அன்னை,**
**என்னை அங்கயற்**
**கண்ணியை இசைத்த**
**பாடல் ஒன்றைப்**
**பாட வேட்டேன்**

என்றார்; கேட்கவா
வேண்டும் தேனிசை
சென்றெமைத் திளைத்திடச்
செய்தலை என்றதும்
பாடினார் பிச்சையார்
கூடினோர் வரவே!
“தென்னன் தமிழின் உடன்பிறந்த
சிறுகால் அரும்பத் தீயரும்பும்
தேமா நிகறக்கண் துஞ்சுமிளம்
செங்கண் கயவாய்ப் புனிற்றெருமை
இன்னம் பசும்புல் கறிக்கல்லா
இளங்கன் றுள்ளி மடித்தலநின்

*றிழிபால் அருவி உவட்டெறிய*
*எறியும் திரைப்பூம் புனற் பொய்கைப்*
*பொன்னங் கமலப் பசுந்தோட்டுப்*
*பொற்றா தாடிக் கற்றைநிலாப்*
*பொழியும் தரங்கம் பொறையுயிர்த்த*
*பொன்போற் றொடுதோட் டடிப்பொற் சூட்*
*டன்னம் பொலியும் தமிழ்மதுரைக்*
*கரசே தாலோ தாலேலோ*

***அருள்சூற் கொண்ட அங்கயற்கண்***
***அமுதே தாலோ தாலேலோ!"***
*பாடி முடித்தார்*
*ஐயா; அடிகள்:*
*"ஐயா ஐயாவே!*
*அரிய பாடல்*

165 ***மெய்யாய்ப் பொருந்தி***
***மேவிய இன்பம்***
***தமிழின் இனிமை***
*தழையத் தழையக்*
*குமிழும் குருபரன்*
*குலவிய பாடலில்*
*தாயும் சேயும்*
*தகவுற அமைந்துள*
*வாயும் வனப்பும்*
*வரைந்திடல் அரிதெனச்*

சிலம்பி அம்மை
கையொடு கையை
நலம்பெறத் தட்டி
ஆர்த்தனள் வந்தாள்!
"ஐயா பாடலால்
ஆயி வந்தனள்"
என்றாள் திருமகள்;
"ஆமாம்"
என்றனள் சிலம்பி,
இசையொடும் கலந்தே

# 14. பனிமலர் வரவு

*(உறுப்பினர்: பனிமலர், திருமகள், பாவை, அருளடிகள்)*

*பள்ளித் தோழி*
*பனிமலர் என்பவள்*
*தெள்ளிய அன்பின்*
*திருமகட் காண*
*அருளகம் எய்தினள்;*
*அடிகளைக் கண்டனள்;*
*அருமையாய் அமைந்த*
*அந்நாட் பயிற்சி*
*பெரிதுற உதவும்*
*பெற்றியை உரைத்துத்*
*தவப்பெரும் அடிகளீர்!*
*"தாங்கிய இறைப்பணி,*
*உவப்புறும் அறப்பணி,*
*ஒன்றிய எவையெவை*
***என்னினும் ஏழைக்***
***கெழுத்தறி விக்கும்***
***பொன்னுயர் பணியைப்***
***போல்வ தரிதெனும்***

பொற்பிடம் இவ்விடம்
புகழிடம் இதுவும்
மகளிர் தமக்கென
மாணுற வாக்கித்
தகவுறப் போற்றித்
தண்ணளி செய்து,
மணியென ஆக்கும்
மாப்பெரும் பணியே,
**அணியெனப் பூட்டும்**
**அணிகளுள் அணியாம்;**

**இவண்பெறு பயிற்சியே**
**இந்நாள் வரையும்**
**உவப்புற ஓங்கி**
**உள்ளகம் நிரம்பி**
**ஊருக் குழையென**
**உந்துகோள் ஆகிப்**
**பாருக் குழையெனப்**
**பாடம் பயிற்றுதல்**
**கண்டறி கின்றேன்;**
கல்வி மட்டும்

இளமையில் இல்லை;
இனிய ஒழுக்கமும்
வளமைத் தொண்டும்
வாய்மையும் தூய்மையும்
வழிவழிச் சிறக்க
வாய்த்திட வேண்டின்

*ஒழிவிலா திளமையில்*
*உற்றிடச் செய்யும்*
*இத்தகு நிறுவனம்*
*எங்கணும் வேண்டும்;*

*ஒத்தியல் நெறியொடும்*
*ஒன்றிய அந்நாள்*
*யான்பெறு பேறே*
*என்னை உணரவும்*
*மேன்மைகள் ஒன்றவும்*
*செய்தன என்றாள்.*
*அடிகளை வணங்கினேன்;*
*ஆருயிர்த் தோழி*
*முடிவிலா அன்பின்*
*முகிழ்ப்பாம் திருமகள்*

*தன்னைக் காண*
*அவாவினேன் அருள்கெனத்*
*துன்னிய தோழமைத்*
*துலக்கம் போற்றித்*
*திருமகள் பணிபுரி*
*வளாகம் உரைத்திட*
*பெருகிய விருப்புடன்*
*சென்றனள்; திருமகள்*
*பனிமலர் வருவது*
*பார்த்தனள் இமைத்திலள்*

*கனிவுற வாவெனக்*
*கரைந்திலள்; தன்முன்*

வண்ண ஓவியம்
        வனப்புற நடந்து
நண்ணுவ தென்ன
        நாடினள் நின்று
பார்த்த பார்வை
        பார்வையாய் இருக்கக்
கூர்த்த நோக்கால்
        குத்தி எடுக்கும்

கொக்கது போலக்
        கொள்ளை கொண்டனள்;
**மிக்க ஆவலில்**
        **தழுவி யுன்னை**
**எடுத்துச் சூடி**
        **எக்களிப் போடும்**
**நடக்க நினைந்தேன்;**
        **நாணும் என்னுளம்;**
ஏனெனில்,

**பனிமலர் எடுக்க**
        **மனமும் நண்ணேன்**
**எனுமுயர் பெருமான்**
        **தாயு மானவர்**
**தடுத்து நிறுத்தலால்**
        **எடுத்துச் சூடிடேன்;**
என்னடி! இன்றுன்
        பொன்னடி இவணுற
என்னவோ பேறு?
        யாங்கள் பெற்றனெம்;

பனிமலர் எங்குளாய்?
பணியென? இல்லுளார்
இனிதுளர் தாமே!
எத்துணைக் காலம்!
அம்மவோ! அந்நாள்
எத்துணை இனியநாள்!
நம்பவோ முடியும்
நடந்தவை எல்லாம்!
என்றனள் திருமகள்
பனிமலர் உரைத்தாள்;

திருவே வளர்ந்துளாய்
ஆமாம் அருமையாய்
உருவில் மட்டுமோ?
உழைப்பில் தொண்டில்
உயர்ந்துளாய் நீயே!
உண்மையில் பெறத்தகும்
உயர்வற உயர்ந்த
பேறுகள் எல்லாம்
ஒருங்கே பெற்றவள்
திருமகள் என்னும்

ஒருபெயர்க் குரிமை
யாயினை; **பிறவிப்**
**பயனென வாழ்ந்திடப்**
**பணியும் வாய்க்குமோ?**
**நயனுற வாழ்க!**
நானிவண் வந்தது

**கோயிற் குள்ளுறு**
**சிலையாய் இருந்திட**
**ஆயிற் றில்லை!**
**ஆயினும் கோட்டைச்**
**சுற்றிலே நிற்கும்**
**கற்களுள் ஒன்றாய்**
**நிற்பதற் கேனும்**
**நினைந்திவண் வந்தேன்;**
பொறிஞர் **எந்தை;**
புகழுறச் சுற்றம்
செறிவுறத் தாங்கும்
செவ்வியர் **அன்னை;**
பேரூர்ப் பிறந்தும்
பேசிடும் சிற்றூர்
ஓரூர் தேடி
உறவெனக் கொண்டு
மருத்துவம் புரியும்
மாண்பினர் வாய்த்த
**சிறிய தந்தை**யார்;
சீரிய குடிமையர்
நறியஎன் **சித்தியார்;**
நானொரு மகளேன்;
அந்நாள்; எம்குடிக்
கிந்நாள் **நால்வர்;**
நால்வர் தாமும்
மகளிரேம்; தந்தையார்

என்னிடம் கேட்டார்;
**என்ன கற்றிட**
**விரும்புவை என்றே;**
விரும்புதல் ஒன்றே
**துரும்பள வேனும்**
**தொண்டு செய்திட**
**வேண்டும் என்றுளேன்;**
**வேண்டும் அதற்கென்**

சிறிய தந்தையார்
செய்திடும் **மருத்துவம்;**
பொறியியல் நுங்களைப்
பொருந்திய தெனினும்
மருத்துவம் ஒன்றே
மனனுறும் என்றேன்.
இளைய தந்தையார்
இருப்பிடம் மருத்துவ
வளாகம் கண்டுளேன்;
வாழ்வெலாம் அவ்விடம்

தங்கிப் பணித்துணை
தாங்கி நிற்கலாம்;
**இங்கே வருபவர்**
**எத்துயர் மல்கி**
**உள்ளே வருகிறார்?**
**உடனே அவர்கள்**
**உள்ளகம் எப்படி**
**அப்பா புகுகிறார்!**
**இரண்டறச் சென்றவர்**
**இன்னலை ஒழிக்கிறார்!**

நேயராய் நின்று
நோயகற் றாளராய்க்
நொடிப்பொழு தளவில்
மாறி விடுகிறார்!
கூடு விட்டுக்
கூடு பாய்தலை
ஊடு நின்றுயான்
உவந்துவந் துள்ளேன்;
அவரிடம் கண்டதாம்
அத்திறம் அவர்போல்

எவர்க்கும் அரிதென
எண்ணுவேன் அதனால்
மருத்துவம் கற்க
விழைவதை உரைக்க
விருப்பொடும் ஏற்றனர்;
ஈராண் டாயது;
மருத்துவ ஆய்வில்
மனங்கொள ஒருவர்
பொருந்திய இயல்பால்
புரிந்தனர் உதவினார்;

என்னை அவரும்
எண்ணினர் போலும்;
என்னுளம் தானும்
அவருள் படிந்தமை
தன்னையும் எண்ணினர்
போலும்! இருவரும்

பேசுவோம்! பேசுவோம்!
என்ன பேசுவோம்!
பேசாப் பேச்சைப்
பேசிய தில்லை!

பேசும் பேச்சே
பேசினோம் நாளெலாம்;
ஊருக் குழைப்பதே
உயர்தவம் என்பதை!
யாருக் கதுமுன்
இருந்த தென்பதை
அறியா வகையில்
இருவரும் எண்ணினோம்;
சிறிய தந்தையார்
சிரிப்பொடும் நின்றார்!

நெறிகள் பலவும்
நெஞ்சில் நின்றன;
பொருளும் தேடுவோம்;
பொருளுக் காக்கமாம்
அருளும் தேடுவோம்;
தனித்தனி செய்தலில்
கூட்டாய்ச் செய்தல்
குவியும் நலமாம்!
கண்கள் இணைந்து
காட்சியில் ஒன்றலும்

செவிகள் இணைந்து
கேள்வியில் ஒன்றலும்

மூக்கும் நாக்கும்
முழுதுற இணைந்து
முகர்தலும் சுவைத்தலும்
முடங்குத லின்றிக்
கால்களும் கைகளும்
கலந்தே இயங்கலும்
காண்பார், இணைந்து
கலந்து **பணிசெயல்**
**பூண்பார்; நாமும்**
**புரிவோம் அதுவென;**
**இதற்கு மணமதும்**
**இயக்கத் தடையிலை**
**பதனுற எண்ணிப்**
**பார்ப்பவர் இதுவே**
**இயக்கப் பெருநெறி**
**என்பதை உணர்வார்;**
இணைஇணைப் பறவைகள்
இணைஇணை விலங்குகள்
இணைஇணை இலைகள்
இணைஇணைப் பூக்கள்
இணைதல் இயற்கை
மாந்தர் தாமே
செயற்கை யாகத்
**தனித்துற வுறினும்**
**இயற்கை அன்பினை**
**இவ்வுல கெல்லாம்**

***இனிதுறக் காணும்***
***நனியுயர் பேற்றால்***

***கனிவொடும் ஏற்றார்;***
*காண்போம் என்னின்*
*முந்தையர் நெறியிது;*
*மூப்பு வருங்கால்*
*தந்தையும் தாயும்*
*மணிவிழாக் கண்டு*
*மக்கள் பொறுப்பில்*
*கடமை புரியத்*
*தக்கவை செய்தல்*
*தம்கடன் என்னக்*

*கொண்டனர்; அதுகால்*
*குடும்பப் பெரியவர்*
*குரவராய் இறையராய்க்*
*கொள்ள வாழ்ந்து*
***இல்லறத் துறவொடும்***
***நல்லற உறவொடும்***
***பல்லறக் காவல்***
***பணியினர் ஆயினர்;***
*என்றவர் பலப்பல*
*இயம்பினார்; யானென்*

*தாதையார் ஒருவர்*
*தகுவழி காட்டுவார்;*
*ஈதை உரைப்பேன்;*
*இயம்புவ கேட்பேன்;*

ஏற்குமேல் முடிவெடுப்
பேனெனக் கூறினேன்;
அவ்விதம் தாதா
தமக்குச் செய்தியைச்
செவ்விதில் உரைத்தேன்;
சேரும் கல்வி

நாள்வரை நட்பு
மட்டுமே பேணுக;
நீள்பட நேயம்
நேர்ந்திட வேண்டா;
அந்நாள் நம்மவர்
ஆய்ந்து கண்ட
அசாத்துணை ஆகுக;
உசாத்துணை ஆகுக;
காதல் கருத்து
விடுக; கற்றபின்

யாதும் குறையிலை
என்னக் காணின்
இருபால் பெற்றவர்
தங்கள் இசைவுடன்
ஒருபாற் கொருகுறை
இல்லா ஒப்பியல்
உற்றனர் ஆகி
ஒன்றுக திருமணம்;
மற்றிதே கடனென
மனமுறக் கூறினர்;

அவர்வழி நிற்பதே
ஆம்கடன் என்று
உயர்வுறக் கொண்டவர்
பெற்றோர் ஆதலின்,
கல்வி முடித்து,
களப்பணி நிறைத்துச்
சொல்லிய வண்ணம்
சுடர்மிகத் தாதா
நடத்தி வைக்க
நாங்கள் இணைந்தனெம்;
எனவும் அவர்பெயர்
இசைத்திடத் தானும்
இயலா தாமோ?
இயம்பெனப் பனிமலர்;
**நல்ல வேளை**
**நீதிரு மகளாம்;**
**முல்லை என்றால்**
**மூச்சாய் எண்ணித்**
**தேரை நிறுத்தும்**
**பாரிவேள் அன்னார்;**
என்றாள்; பாரடி!
அந்நாள் குறும்புனை
நீங்கிய தில்லை
ஓங்கி அறையவா?
என்று கன்னம்
தட்டினள் திருமகள்.
பனிமலர்! ஒருநாள்
நீர்வழி கூந்தல்

நனியுற வந்தனை
நானுனை நெருங்கிக்
கூந்தல் நீரென்
கன்னம் தழுவ
ஏந்திக் கொண்டேன்
இனிதுற மகிழ்ந்தே,
இப்பனி எனக்கு
வாய்த்துள இன்பனி;
ஒப்பெதும் இல்லா
ஒருபனி என்று
கூந்தலை வருடினேன்;
கூந்தலில் இருசுழி
இருந்திடக் கண்டேன்;
**இரட்டைச் சுழி**யெனச்
சொன்னேன்; பனியின்
'**னி**'யினில் சுழிகளைச்
சொல்லென நகைத்தாய்;
இதுகால் உனக்குச்
சொல்வேன்; **முச்சுழி**
யாக வளர்ந்த
தென்றாள்; "என்னடி!
புதுமை?" என்றனள்;
**பனிமலர், பணிமலர்**
ஆனதால் சுழிகள்
மூன்றெனல் இலையா?
என்றாள்; ஆமாம்

*தோழி திருவொடு*
*தோன்றல் பாரிவேள்*
*வாழி அடிகள்*
*வாய்த்த கூட்டில்*
*முச்சுழி ஆகும்;*
*மூளும் மேலும்!*

*இச்சுவை யாடலில்*
*இருக்கப் பாவை*
*எய்தினள் 'பனிமலர்'*
*இவளெனக் கூறினள்*
*மெய்சிலிர்ப் பெய்த*
*மேனாள் இளமை*
*பேசும் போதெலாம்*
*பேசு பொருளாம்*
*பனிமலர்க் காணல்*
*பாவைக் கினிதெனக்*

*கனிவுடன் கூறிக்*
*காலம் ஆயது*
*மேடை உன்னை*
*விரும்பித் தேடும்*
*கூட அழைத்துவா*
*குறித்த போதில்*
*விழவினைத் தொடங்கி*
*விடுவோம்; அடிகளை*
*அழைப்பதும் உன்கடன்*
*என்று சென்றனள்;*

*திருவும் பனியும்*
*அருளகம் புகுந்தார்.*

## 15. தாயுமானவர்

*(உறுப்பினர்: அருளடிகள், பிச்சையார், திருமகள், பாவை, பனிமலர், பாரிவேள், அவையோர்)*

*கல்லூரி ஆண்டுவிழா*
*கவின்கோலம் கொண்டதுவாம்;*
*பல்லூரின் மக்களெலாம்*
*பார்வையராய் மொய்த்திருந்தார்;*
*வாழ்த்தோடு தொடங்கியது*
*வரவேற்பு நிறைவேறத்*
*தாழ்த்தாமல் நாடகமும்*
*தனிநடமும் இசைமுழக்கும்*

*உரையாட்டும் என்றுபல*
*உள்ளார்ந்த சுவையோடும்*
*திரை திரையாய்க் கரைமோதித்*
*திரும்பலென நிறைவேற*
*நல்லுரைகள் சொல்லுவரால்*
*நம்மடிகள் என்றனரால்;*
*"சொல்லுலகம் கடந்தபெரு*
*சுவைவெள்ளக் காட்சிகளை*
*மேடையிலே அரங்கேற்றி*
*மெய்சிலிர்க்க வைத்துள்ளீர்*

*கோடையிலே பெய்தவொரு*
*மாரியென மகிழ்கின்றோம்;*
***தேடிப்போய்த தீமைசெயத்***
***திரிவாரைக் காண்கின்றோம்;***
***தேடிப்போய் நன்மைசெயல்***
***திருவருளாம் என்பாரைக்***
***கூடிப்போய் நாம்சேர்ந்து***
***கும்பிடலாம் முறைதானே;***
*தேடிநீர் வாராமல்*
*தேடிநாம் வந்துள்ளோம்*

*ஓடிவந்து வரவேற்றல்*
*ஒருபோதும் வேண்டாங்காண்*
*நாடிவந்து நாங்கள்செயும்*
*நலிவகற்று மருத்துவத்தைக்*
*கூடிவந்து செய்கின்றோம்;*
*கொண்டதொரு பிறவியிதன்*
*நோக்கத்தை நிறைவேற்ற*
*நுமைநாடி வந்துள்ளோம்;*
*ஊக்கத்தை அருளுங்கள்*
*உள்ளத்தால் வாழ்த்துங்கள்!*

*என்றுநமை இறையருளால்*
*ஈடேற்ற வந்துள்ள*
***பனிமலரைப் பாருங்கள்!***
*பள்ளியிலே பயின்றுபினர்*
*நனியுயர நம்நிலையம்*
*தனில்பயின்று மருத்துவத்தில்*

உயர்பட்டம் பெறும்போது
உணர்வார்ந்த தொண்டுக்கே
உயிரொத்த உறவாகி
உயர்வான மணங்கொண்ட

**பாரிவேள்** பெருமானைப்
பாருங்கள் பேரன்பீர்!
கற்றவர்கள் கல்விநலம்
கற்பித்தற் சிறப்பேயாம்!
பெற்றவர்கள் பெற்றநலம்
பிறந்தவர்கள் சீரேயாம்!
சீர்தந்த மண்ணுக்குப்
பேர்தந்து பாடுபட
நேர்வந்த பனிமலரை
நேயமிகு பாரிவேளைக்

கல்லூரி முதுவரிலம்
களிக்கூடம் தொழில்கூடம்
எல்லாமாய்ச் சேர்ந்துமிக
வரவேற்று வாழ்த்துகிறோம்
நீங்களிவண் செயப்போகும்
நிகரற்ற தொண்டுநலம்
ஓங்கியெழு மலைமேலாம்
உயர்விளக்காய் வாழ்கவென
வாழ்த்தோடு பரிசுகளும்
வழங்குகிறோம் எனச்சொல்லக்

கையொலியால் மெய்சிலிர்க்கச்
செய்ததுவாம் பேரவையே!
மெய்யாய வாழ்த்திதுவாம் மேல்.

* * *

நாற்பான் ஆண்டுகள்
முன்னரெம் பெற்றோர்
ஏற்க இல்லறம்
என்றனர்; **என்னுடன்**
**பிறந்தார் ஒருவர்**
**வீட்டுப் பிள்ளை;**
**துறந்து வாழும்**
**நாட்டுப் பிள்ளை**
**யனெனச் சொன்னேன்;**
**வீடும் நாடும்**
**பேணுதல் வேண்டும்**
என்பதென் உரையெனக்
காணுதல் நன்றாம்;
கருதுவீர் சற்றே;
பனிமலர் பாரிவேள்
இருவரும் இணைந்து
நனியுயர் பணியில்
நாட்டம் கொள்ளுதல்
**இல்லறச் சீருடன்**
**துறவறச் சீரும்**
**மல்கிய தென்னப்**
**போற்றுவம் இனிதே.**

* * *

நல்லுரைகள் சொல்வனென
நவின்றுள்ளார்; நானுமக்குச்
சொல்லுவதென் பற்பலவும்?
சொல்லாதீர் ஒருசொல்லை

பிறர்பிறரும் சொன்னாரேல்
பேசாதீர்; அச்சொல்லை
மறந்துவிடும்; அல்லாக்கால்
மறையாமல் உலாக்கொள்ளும்;

அச்சொல்தான் எம்மொழியில்
அமைந்தாலும் ஆரெவரும்
இச்சையுற வேண்டாங்காண்!
இழிவாகும்; சொல்வார்க்கும்
செவிதந்து கேட்பார்க்கும்;
செம்மாந்து சொல்கின்றேன்;
குவிதந்த வளந்தந்து
கூறுமெனச் சொன்னாலும்
சொல்லாதீர் பேரன்பீர்!
**சுடர்தந்த கண்ணுடையார்**

**நல்லாற்றல் செவியுடையார்**
நறுஞ்சுவைய நாவுடையார்
**காதமணம் முகர்கின்ற**
**கவின்மூக்குத் தாமுடையார்**
**தீதெதுவும் அண்டாத**
**திடமமைந்த உடலுடையார்**
**ஏதிலியர் யாமென்ன**
**இயம்புதலும் ஆவாரோ?**
**யாரேனும் இயம்புவது**
**தாம்கேட்டும் அமைவாரோ?**

சீரான செயலாற்றும்
கையிரண்டு தாமிருக்க

*நேரான பணியாற்றும்*
*நெடுவிரல்கள் தாமிருக்க,*
*பாடாற்றப் பிறந்துவரு*
*பயன்கால்கள் இணைந்திருக்க,*
*தேடரிய வளமெல்லாம்*
*தேட்டாக வைத்திருக்கும்*
*கொழுமூளை தாமிருக்கக்*
*குறையில்லா ஆணைவழி*

*எழுந்திசைக்கும் இன்னிசைய*
*யாழன்ன நரம்பிருக்க*
*நாடியதை நனிகாட்டும்*
*முந்நாடி முகிழ்த்திருக்க*
*ஓடியெவர் உழைத்தாலும்*
*ஒளிக்காமல் கொழிக்கின்ற*
*மண்ணிருக்க, பிறர்க்காக*
*வாழ்வதுவே வாழ்வென்னும்*
*எண்ணமுறும் அருளாளர்*
*எங்கெங்கும் தாமிருக்க*

***ஏதிலியர் எவர்தாமோ?***
***எண்ணமதே எதிரீடாம்;***
***ஏதிலியம் யாமென்னல்***
***இழிமையேம் என்பதுவாம்;***
***இறையருளை நம்புகின்றோர்***
***ஏதிலியர் ஆவாரோ?***
*நிறையருளே வாழ்வென்பார்*
*ஏதிலியர் ஆவாரோ?*
*பெற்றோரை இல்லாதோர்*
*ஏதிலியர் என்பாரேல்,*

*பெற்றோர்க்குப் பெற்றோரும்*
*பெற்றிருத்தல் கூடுவதோ?*
*பெற்றோரை உடையரெலாம்*
*பெற்றனரோ பெரும்பேறே!*
*பெற்றோரை அற்றோர்தாம்*
*பெற்றிலரோ நற்பேறே!*
*பெற்றவனை முன்னிழந்து*
*பெற்றாளைப் பெறும்போதே*
*அற்றிழந்து வாழ்ந்தாரும்*
*அறியாத செய்தியதோ?*

***ஏதிலியர் எனத் தம்மை***
*எண்ணுவதே நம்பிக்கை*
***யாதிருந்தும் இல்லாதார்;***
*அன்புடையீர்! அறமுடையீர்!*
*ஏதிலியர் என்றெவரும்*
*எண்ணாதீர்; எவர்தமையும்*
*ஏதிலியர் என்னாதீர்;*
*இயம்பியதை நினைந்திடுவீர்!*
*எனச்சொல்லி அமைவுற்றார்;*
*இறைமைவளர்* ***அருளடிகள்.***

*மினல்போலத் திருமகளும்*
*மேடையிலே ஏறினளே!*
*ஏதிலியர் இல்லேயாம்;*
*ஏதிலியர் ஆகேம்யாம்;*
*தாயாகித் தந்தையுமாய்த்*
*தாங்குகின்ற தெய்வமுமாய்,*
*சேயாகி மகிழ்விக்கும்*
***செம்பொருளாம் நீரிருக்க***

*ஏதிலியர் இல்லேம்யாம்;*
*ஏதிலியர் ஆகேம்யாம்*

45 *எனமேடை நீர்வார*
*இரைந்தழுதாள் திருமகளும்*
*மனமுருகி மற்றோரும்*
*நைந்தழுதார் தாங்காமல்.*
*தண்ணருளே ஆய தது.*

* * *

*நீராய் உருக*
*நேர்ந்ததை எண்ணி*
*வாரா உணர்வு*
*வந்ததை நொந்து*
*விழிநீர் துடைத்து*
*விளம்பினள் மேலே.*

1 *தாயு மானார் இறையாவார்;*
*தாயு மானார் அருளாளர்;*
*தாயு மானார் எவ்வெவர்க்கும்*
*தாய்மைத் தெய்வ வடிவாகத்*
*தாயு மானார் இங்குள்ளார்*
*தாயின் இறப்பில் பிறப்பாகித்*
*தாயு மற்றுப் போய்த்தனியே*
*தங்கி நின்றோர் பலப்பலரால்!*

2 *தங்கி நின்றோர் தமையாமே*
*தாங்கி நிற்பேம் எனக்கொண்டு*
*பொங்கும் அருவிப் புனலுள்ளம்*
*பொருந்தி உயிர்கள் தமைக்காக்க*

*இங்கண் உள்ள தாய்வடிவர்*
*எதிரில் உள்ளார் நாம்காண*
*எங்கும் தாயர் தம்குழந்தை*
*என்றே வளர்ப்பர்; இங்கிவரோ!*

3 ***எந்தக் குழந்தை என்றாலும்***
***எம்தம் குழந்தை எனப்பேணி***
***இந்தக் குழந்தை எச்சாதி***
***எந்தச் சமயம் என்பதுவும்***
***தந்த தாயர் தந்தையர்தாம்***
***எவரே என்ன எண்ணாமல்***
***முந்து முந்து வந்தெடுத்து***
***முத்தாய் வளர்த்துக் காக்கின்றார்.***

4 ***எவரே உதவி செய்வரென***
***எவரே பாராட் டெடுப்பரென***
***எவரே துணைக்கு வருவரென***
***எண்ணந் தானும் இல்லாமல்***
***எவரே யேனும் எம்கடமை***
***இனிது காத்தல் எனக்காக்கும்***
***இவரே எங்கள் தாயுமானார்***
***இறைமை வடிவாம் தாயுமானார்.***

5 *தாயாய்த் தூக்கி அரவணைத்து,*
*தங்கும் அழுக்குப் போயகலச்*
*சேயாய்க் குளிக்கச் செய்துதவி*
*செய்ய உடைகள் தாம்வழங்கி*
*நோயால் தவிப்பின் நூறுமுறை*
*நோயால் தவிப்பார் தாமாகி*
*ஆயா தாமே எனமாறி*
*ஆகும் எல்லாம் செய்தருளி,*

6 *கல்வி தந்து கண்திறந்து*
*கலைகள் தந்து கவின்தந்து*
*நல்ல இறைமை தொண்டென்ன*
*நாளும் காட்டி நாடுயர*
*வல்ல பண்பு நலங்காட்டி*
*வாழ்வுத் திறங்கள் எல்லாமும்*
*சொல்லிச் சொல்லிச் சுடராக்கிச்*
*சொலிக்கச் செய்யும் தாயுமானார்.*

7 *பாம்பின் வாய்க்குள் தேரையெனப்*
*பட்டுக் கிடந்த எனையிங்கே*
*தேம்பல் அகற்றி என்பேராம்*
*திருவைத் திருவாய் எனக்களித்துக்*
*கூம்பிக் கிடவா வாழ்வருளிக்*
*கொழிக்கும் இன்பச் சூழலிலே*
*ஓம்பிக் காக்கும் தாயுமானார்*
***ஒருவர் இவரே கேட்டருள்வீர்!***

8 *இவரால் சிறக்கும் பொறியாளர்*
*இவரால் ஓங்கும் ஆசிரியர்*
*இவரால் திகழும் மருத்துவர்கள்*
*இவரால் வளரும் இறைத்தொண்டர்*
*இவரால் வாழும் திருச்செல்வர்*
*இவரால் மலரும் கொடையாளர்*
*எவரை எண்ணி நான்மொழிவேன்*
*இவர்க்கும் துயரம் இன்றேயோ?*

9 *ஓட ஓட்டு துயராளர்*
*ஒதுங்க விடாத கயவாளர்*
*வாட வாட வதைப்பார்கள்*
*வளரும் எரியும் மூட்டாளர்*

நீட வாழ்ந்த **தாயுமானார்**
**நிலைமை போல இவர்தாமும்,**
கூட வாட்டும் கொடுமையதும்
கொண்டும், குளிரும் அருள்வடிவாய்,

10 நாளும் செய்யும் நற்றொண்டே
நயந்து வாழல் நாடறியும்;
**தேளும் பாம்பும் பிறவிலங்கும்**
**தெய்வப் படைப்பாய் யானுணரின்**
**வாளும் வில்லும் தன்னலத்தால்**
**வந்த படைப்பே எனக்காணும்**
நீளும் பிறவி அருளடிகள்
நீர்மை காட்டல் அறிவீரே.

11 இருந்தார் ஒருவர் **பெரியாழ்வார்;**
எடுத்தார் **ஆண்டாள்** தமைவளர்த்தே
இருந்தார் என்ன என்றென்றும்
இனிது பேச வாழ்கின்றார்;
**இருந்தார் இல்லாப் பிறவியர்க்கே**
**இருப்பார் இவரை என்சொல்வேன்!**
**இருப்பார் என்றும் பெருமையுடன்**
**இருப்பார் தம்முள் இருப்பாரே!**

12 வாழ்த்த எனக்கு வாயில்லை
வணங்கிச் சொன்னேன் **உலகுய்ய**
**வாழ்த லான வாழ்வினரை**
**வாழ வைத்தல் கடனென்று**
**வாழ்வு நோக்கர் எணல்வேண்டும்!**
**வாழ்வார் தமக்கு வாழ்வாரின்**
**வாழ்வு காக்கும் உலகமதே**
**வாழும் உலகம் என அமைந்தாள்.**

* * *

*உருகி அழுதாள் திருமகள்தான்*
*உருகிப்போனார் அருளடிகள்*
*உருகா ஒருவர் இலையென்ன*
*உருகி நின்றார் எவரெவரும்!*

* * *

*உருக்கத் தூடே*
*உருக்கும் இசையினர்*
*திருவைத் திருவாய்*
*ஆக்கு மூலவர்*
*பெரியவர்* ***பிச்சை***
***மேடை ஏறினார்;***
*திருமகள் முழக்கம்*
*தேனாய் இனித்தது;*

5 ***பெருமான் நங்கள்***
*தாயு மானவர்*
***உருகி உரைத்த***
***பராபரக் கண்ணி***
***கருதிப் பாடுவென்***
***காதருள் வீரே!***

* * *

*அன்பைப் பெருக்கியென*
*தாருயிரைக் காக்கவந்த*
*இன்பப் பெருக்கே*
*இறையே பராபரமே!*

*அன்பர்பணி செய்யஎனை*
*ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானேவந்*
*தெய்தும் பராபரமே!*

*சினமிறக்கக் கற்றாலும்*
*சித்தியெலாம் பெற்றாலும்*
*மனமிறக்கக் கல்லார்க்கு*
*வாயேன் பராபரமே!*

*எல்லாரும் இன்புற்*
*றிருக்க நினைவதுவே*
*அல்லாமல் வேறொன்*
*றறியேன் பராபரமே!*

* * *

***வாழும் தாயு மானவர் வாழ்க!***
***வாழச் செய்பவர் வாழ்ந்தால்***
***வாழும் உலகம் வழிவழிச் சிறந்தே.***

**முற்றும்**

எந்தக் குழந்தை என்றாலும்
எம்தம் குழந்தை எனப்பேணி
இந்தக் குழந்தை எச்சாதி
எந்தச் சமயம் என்பதுவும்
தந்த தாயர் தந்தையர்தாம்
எவரே என்ன எண்ணாமல்
முந்து முந்து வந்தெடுத்து
முத்தாய் வளர்த்துக் காக்கின்றார்.

எவரே உதவி செய்வரென
எவரே பாராட் டெடுப்பரென
எவரே துணைக்கு வருவரென
எண்ணந் தானும் இல்லாமல்
எவரே யேனும் எம்கடமை
இனிது காத்தல் எனக்காக்கும்
இவரே எங்கள் தாயுமானார்
இறைமை வடிவாம் தாயுமானார்.

இரா. இளங்குமரன்